விலை: 30.00
பக்கங்கள் : 16 + xvi
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 29 ஞாயிற்றுக்கிழமை (15.09.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 270

## எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு அனைத்து அமைப்புகளும் பேராதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விடிவிற்காக நாளை 16ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு அனைத்து அமைப்புகளும் தமது பூரண ஆதரவினை தெரிவித்துள்ளன.

ஆதரவினை தெரிவித்த அமைப்புக்களின் விபரம் வருமாறு :- யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், மன்னார் பிரஜைகள் குழு, தமிழர் மரபுரிமைப் பேரவை, தென்கயிலை ஆதீனம் - குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார், யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம், நல்லை ஆதீனம் - குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரி ➤15

## நாளை எழுக தமிழ் எழுச்சிப் பேரணி



### வரலாற்றுச் சாதனையாக மக்கள் அணிதிரள்வர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் விடிவிற்காகவும் முன்னெடுக்கப்படும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நாளை 16ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

எழுக தமிழ் தொடர்பாக தமிழ் மக்கள் பேரவையால் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு, முள்ளி வாய்க்கால் மண்ணில் ➤15

### யாழ்ப்பாண விமானநிலையம் என பலாலி பெயர் மாற்றப்படுகின்றது



**பிரதமர் ரணில் தெரிவிப்பு**

(கொழும்பு)

விரைவில் பிராந்திய விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ள பலாலி விமான நிலையத்துக்கு யாழ்ப்பாண விமான நிலையம் (JAF) என்று பெயரிடப்பட ➤15

### கட்சி தாவிய சுதந்திர கட்சியினரின் உறுப்புரிமை இரத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து பொதுஜன பெரமுனவுக்கு சென்றவர்களின் உறுப்புரிமையை இரத்துச் செய்து, அக்கட்சி அதிரடி நடவடிக்கையை எடுத் ➤15

### கள்ளமண் அள்ளிச்சென்ற டிரக்ரர் மீது துப்பாக்கிச்சூடு

ஒருவர் படுகாயம் - அரியாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கள்ள மணல் அள்ளிச் சென்ற டிரக்ரர் மீது விசேட அதிரடிப் படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை நெளுக்குளம் பகுதியில் ➤15

### செவ்வாய்க்கிழமை கூட்டமைப்பு ரணிலுடன் சந்திப்பு

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக யாரை ஆதரிப்பது என்பது தொடர் ➤15

### தியாகதீபம் திலீபனின் 32ம் ஆண்டு நினைவேந்தல்

நல்லூரில் இன்று ஆரம்பம்



➤06

### எழுக தமிழ் பேரணிக்கான வாகன ஒழுங்குகள் தொடர்பான விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

நாளை 16ஆம் திகதி திங்கட்கிழமை தமிழ் மக்கள் பேரவையால் நடாத்தப்படும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கான வாகன ஒழுங்குகள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. பேரணியில் பங்குபற்றும் பொது ➤15

### எழுக தமிழை எதிர்க்கவில்லை

கூட்டமைப்பு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விடிவிற்காக நாளை நடைபெறும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை நாம் எதிர்க்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. ➤15

### பலாலி மேற்கில் காணியை விடுவிக்க இராணுவ முகாம் அமைப்பதற்கு பலாலி கிழக்கை எமக்கு தரவேண்டும்

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி மேற்கில் உள்ள தனியார் காணிகளை விடுவிக்க வேண்டுமானால் எமது இராணுவத் தேவைக்கேற்ப முகாம் அமைப்பதற்குப் பலாலியின் கிழக்குப் பக்கத்தை தர வேண்டும் எனக் கூறியதுடன் கொள்கை அளவில் மாற்றுக் காணி தொடர்பில் பரிசீலிக்கத் தயாராகவுள்ளதாக யாழ் மாவட்டக் கட்ட ➤15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# ஜனாதிபதித் தேர்தலுக்கான அழைப்பு குறித்து அரசியல் கட்சிகளால் தீர்மானிக்க முடியாது

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கான அழைப்பை விடுப்பது குறித்து அரசியல் கட்சிகளால் தீர்மானிக்க முடியாது என அறிவிக்கப் பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான அழைப்பை விடுப்பது குறித்து தேர்தல்கள் ஆணைக் குழுவே தீர்மானிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தேர்தல் ஆணைக்குழு கலந்துரையாடி, பொருத்தமான தினத்தில் தேர்தல் நடத்தப்படுவது குறித்த அறிவித்தலினை வெளியிடும் என மகிந்த தேசப் பிரிய கூறியுள்ளார்.

எதிர்வரும் 16 முதல் ஒக்ரோபர் 15 வரையுள்ள எந்த நாளாகவும் இருக்கலாம் என வும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அத்துடன், ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதிக்கு பின்னரான எந்த தினத்திலும் வேட்பு மனுவைக் கோர முடியும் எனவும் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

முன்னதாக நாங்கள் முடிவு செய்யலாம் என்று நினைத்தால், இந்த மாத இறுதிக்குள் அதனை அறிவிப் போம் எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (ம-3)

## மணிவிழா அழைப்பு



திருமதி
**குணரஞ்சிதம் பிரதாபராஜன்**
(கிராம சேவையாளர், கோண்டாவில் தென்கிழக்கு J/120)

காலம்
15.09.2019
ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணி

இடம்:
ஆசிமட அரசடி விநாயகர் மணி மண்டபம், கோண்டாவில்

இன்று மணிவிழாக் காணும் திருமதி **குணரஞ்சிதம்** பிரதாபராஜன் அவர்களின் மணி விழா பாராட்டு நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மணிவிழாச் சபை

## மரண அறிவித்தல்

### திருமதி சுசிலாதேவி பேரின்பநாதன்



தோற்றம் 1947.07.26 | மறைவு 2019.09.13

ஏழாலை மேற்கு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுசிலாதேவி பேரின்பநாதன் 13.09.2019 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.சுந்தையா - ஞானலட்சுமி தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் சத்தியபாமாவின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற பேரின்பநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும் மயூரேசன், பிரதாபன், விஜிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கார்த்தியாயினி, நிலானி, ரஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் அஸ்விகன், ஜஷானி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (17.09.2019) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (193)

சக்தி முற்றம்,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

தகவல்:- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் 0779996119

இரண்டாம் மொழி
சிங்கள வகுப்புக்கள்

தரம் 6,7,8,9, G.C.E (O/L)
ஆரம்பம் :15.09.2019
இடம் :இலங்கை வேந்தன் மண்டபத்துக்கு அருகில்
65, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (195)
தொடர்பு
0772140220, 0779906867

உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா? கணச்சூடா? பலகீனமா? ஒட்டிய கன்னங்கள் குண்டுக் கன்னங்களாக மாற வேண்டுமா? மார்புகூட வேண்டுமா? உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்கு உண்டு

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும் புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு. பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள். (197)

221, நாவலர் றோட், யாழ்ப்பாணம். 077 210 6155

## கண்ணீர் அஞ்சலி



இளைப்பாறிய நில அளவையாளரும்
உத்தரவுபெற்ற நில அளவையாளர் சங்க உறுப்பினரும்
பதிவு பெற்ற நில அளவையாளருமாகிய

**தம்பிஜயா சபாநாயகம் (J.P)**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் சங்கம், (வடபகுதி)

## பிறந்தநாள் நினைவில்

மண்ணில் 15 - 09 - 1940



விண்ணில் 25 - 04 - 2019

### திருமதி சகுந்தலாதேவி தவராஜா

அம்மா ...
எங்கள் உயிர் வாழ்வின்
உன்னதமே
வார்த்தைகளால் நீங்கள்
செதுக்கியளித்த வாழ்வு
உங்கள் ஒளியின்றி
இருள்கிறது.
விழி நீரோடு - உங்கள்
பிறந்தநாளில் - பிள்ளைகள் எம்
வாழ்த்துக்கள்.
நினைவின் கரங்கள்
தவித்தலைகின்றன
உங்கள் நிஜம் தேடி -
அம்மா
உங்கள் புன்னகையின் ஒளியில்
எங்கள் பயணம்...

"ராஜாஸ்வாசம்"
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள்

# எழுக தமிழ் எழுச்சி பெற இந்துக்குருமார்களின் பங்களிப்பு மிக அவசியம்

## வாசுதேவக்குருக்கள் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நாளை 16ஆம் திகதி நடைபெறும். இதனை வலுச்சேர்க்கும் வகையில் அனைத்துத் தரப்பினரும் தமது ஆதரவை தெரிவித்து வரும் வேளையில் இந்து மதகுருமார்களும்எமது ஆதரவை வழங்குவது காலத்தின் கடமையாகும்.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளையும் அபிலாசைகளையும் வென்றெடுப்பதற்கான மக்கள் போராட்டமாக அமைந்துள்ள எழுக தமிழ் பேரணிக்கு குருமார்கள், ஆலய சமூகத்தினர்கள் அனைவரும் தமது மேலான ஒத்துழைப்புக்களை நல்குவது அவசியமாகும்.

தமிழ் தலைவர்கள், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக சமூகத்தினர்கள், ஏனைய மதத் தலைவர்கள் அனைவரும் எழுக தமிழ்பேரணிக்கு ஆதரவை தெரிவித்திருக்கின்ற வேளையில் இந்து மதகுருமார்கள் மற்றும் ஆலய சமூகத்தினர்களும் மக்கள் எழுச்சிக்கு வலுச்சேர்க்கும் வகையில் தமது ஆதரவை பரிபூரணமாக தரவேண்டும். இது காலம் அறிந்த கடமையாகும்.

எமது மக்களின் விடிவிற்காக ஒன்று சேர்ந்து பேரணியை வலுச்சேர்ப்போமாக என வீணாகான குருபீட குருமுதல்வர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள் அழைப்பு விடுத்தார். (இ-7)

# தமிழர்களாகிய எங்கள் ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் எழுக தமிழில் ஒன்றிணைவோம்

## சுவாமி சிதாகாசானந்தா அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவை ஏற்பாடு செய்திருக்கும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் பங்கேற்று எங்கள் ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் ஒன்றிணைவோம் என யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி சிதாகாசானந்தா சுவாமி எழுக தமிழுக்கு ஆதரவாக விடுத்த அறிக்கையில் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவை ஏற்பாடு செய்திருக்கும் எழுக தமிழ் பேரணி சிறப்பாக நடைபெறுவதற்கு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழர்களாகிய எங்களுடைய தேவைகளையும், எங்களுடைய உரிமைகளுக்கான குரல்களையும் எடுத்துச் செல்லுகின்ற ஒரு நிகழ்வாக மக்கள் இயக்கமாகிய



தமிழ் மக்கள் பேரவை நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை நடத்தும் எழுக தமிழுக்கு அனைத்துத் தமிழர்களும் எந்தவித கட்சி பேதமுமின்றி கலந்துகொள்ள வேண்டும்.

நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எங்களுடைய தேவைகளையும், வேண்டுதல்களையும் முழு உலகத்திற்கும் தெரியப்படுத்தும் பொழுதுதான் நிச்சயமாக எங்கள் இலக்கை அடைய முடியும். மக்கள் எழுச்சியின் மூலமாகத்தான் உரிமைகள் வென்றெடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலேயே தமிழ்த்தேசிய சிந்தனையிலேயே இந்த எழுக தமிழ் பேரணியில் அனைவரும் வந்து பங்குபற்றவேண்டிய நிகழ்வாக இருக்கின்றது.

எழுக தமிழ் பேரணியில் பங்குபற்றுவதன் ஊடாக எங்களுடைய விடுதலையை, எங்களுடைய உரிமைகளை உலகிற்கு வெளிப்படுத்த முடியும். அந்தவகையில் அரசியல் தலைவர்கள் மற்றும் ஆன்மீகத் தலைவர்களாகிய நாங்களும் இவ் எழுக தமிழ் மக்கள் எழுச்சிப் பேரணியில்முழுமையாக இணைந்திருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு கொடிகாமம் வணிகர் கழகம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு கொடிகாமம் வணிகர் கழகம் தனது பூரண ஆதரவை வழங்கியது. தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட, இழைக்கப்படுகின்ற அநீதிகளுக்கு எதிராக நாளை திங்கட்கிழமை இடம்பெறும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு எமது பூரண ஆதரவை வழங்குகின்றோம்.

தமிழ்மக்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற பௌத்த மயமாக்கல், காணி அபகரிப்பு, தடுப்பிலுள்ள கைதிகள் மற்றும் அடிப்படை பிரச்சினைகளை சர்வதேசத்தின் முன் எடுத்தியம்பும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகின்ற இவ் எழுக தமிழ் பேரணியில் கட்சி பேதங்ககளை மறந்து அனைவரும் ஓரணியில் திரள வேண்டுமென கொடிகாம வணிகர் கழகம் மேலும் அழைப்பு விடுத்தது. (இ-10)


முழுமைப்படுத்தப்பட்ட தொகுப்பு

15%விலை தள்ளுபடியுடன் 45,000/= இருந்து 19.7%விலை தள்ளுபடியுடன் 28,900/= இருந்து

Sunmade Reverse Osmosis Drinking Water System




தரமான பொருள் - நியாயமான விலை - நீண்ட உத்தரவாதம் - தொழில்நுட்பவியலாளர்களால் பொருத்திக்கொடுக்கப்படும் - தொலைபேசி உதவி வேலைநாட்களில் காலை 9 மணி - மாலை 5 மணிவரை - திருத்தங்களும் பராமரிப்புப் வேலைகள் 24(48) மணித்தியாலங்களில் நிறைவேற்றி கொடுக்கப்படும் - உங்கள் பாதுகாப்பை எங்களால் முடிந்தவரை உறுதிசெய்து கொடுப்போம்

அழையுங்கள் 077 552 7099 / 021 221 7994

SST சன்சக்தி ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட் 61, வைத்தியசாலை வீதி, யாழ்பாணம்

www.sunsakthy.com info@sunsakthy.com sst sunsakthy traders

(196)

# எழுக தமிழ் - 2019

## எம் மக்களின் கோரிக்கைகளை முன்னிறுத்தி
## தேசமாய் அணி திரள்வோம்




**நல்லூர் மற்றும் யாழ். பல்கலைக்கழக முன்றலில் இருந்து செப்ரெம்பர் 16 காலை 9.00 மணிக்கு முற்றவெளி நோக்கி பேரணி ஆரம்பமாகும்.**

# தமிழ் மக்கள் பேரவை

www.elukathamil.com | tamilpeoplescouncil | info@elukathamil.com | 076 002 5080

# பலாலி விமான நிலையத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு இழப்பீட்டைப் பெற்றுக்கொடுக்க அரச அதிகாரிகள் முயற்சிக்க வேண்டும்

## வடக்கு ஆளுநர் ராகவன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

1984 ஆம் அண்டு பலாலி விமான நிலையத்துக்காக சுவீகரிக்கப்பட்ட தனியார் காணிகளின் இழப்பீட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கு கொழும்பு அதிகாரிகளைக் காரணம் காட்டாமல் யாழிலுள்ள சம்பந்தப்பட்ட அரசஅதிகாரிகள் துரித முயற்சி எடுக்க வேண்டும் என வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் வலியுறுத்தினார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற யாழ். மாவட்டத்தில் அபகரிக்கப்பட்ட தனியார் காணிகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள்,முப்படையினர் மற்றும் அரச உயர் அதிகாரிகள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்ட மக்கள் போரால் பல துன்பங்களை அனுபவித்தவர்கள்.அக் காலத்தில் நான் இலங்கையில் இல்லையென்றாலும் மக்களின் துன்பங்கள் தொடர்பில் நன்கு அறிந்திருக்கின்றேன்.

அவ்வாறான நிலையில் பலாலி விமான நிலையத்துக்காக 1984 ஆம் ஆண்டு சுமார் 64 ஏக்கர் பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டதாக அறிய முடிகிறது.

இவ்வாறான நிலையில் அம் மக்களின் காணிகளுக்கான இழப்பீட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட கொழும்பு அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் எனப் பார்க்காது கொழும்பு அதிகாரிகளுக்கான சகல தரவுகளையும் இங்குள்ள அதிகாரிகள் ஆவணப்படுத்தி அவர்களின் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

ஆகவே பலாலி விமான நிலைய அபிவிருத்திக்காக அபகரிக்கப்பட்ட தனியாருடைய காணிகளை இருக்கும் தரவுகளைப் பயன்படுத்தி வெகுவிரைவில் நில அளவைத் திணைக்களத்தின் ஊடாக அளவீடு செய்து உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்குமாறு ஆளுநர் மேலும் தெரிவித்தார்.(இ-10)

# தசாக கிருஹயக்ஞம்

## ஸ்ரீமதி.கமலாதேவி-சுப்பிரமணிய சாஸ்திரிகள்

அன்புடையீர்:

விகாரி வருஷம் ஆவணி மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை (07.09.2019) சிவபதமடைந்த ஸ்ரீமதி.கமலாதேவி-சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

ஆவணி 30 (16.09.2019) திங்கட்கிழமை காலை 10.00 மணி-தசாகம்

ஆவணி 31 (17.09.2019) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி
-விருஷோத்ஸர் ஜனம் ஏகோதிஸ்டம், மாசிகம்

புரட்டாதி 01 (18.09.2019) புதன்கிழமை காலை 10.00 மணி
-சபிண்டீகரணம்

புரட்டாதி 02 (19.09.2019) வியாழக்கிழமை காலை 10.00 மணி
-கிருஹயக்ஞம், பிராம்மண சமாராதனை.

புரட்டாதி 04 (21.09.2019) சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு
ஆத்மசாந்தி பிரார்த்தனையும் மதிய போசனமும்.

**உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள், அபிமானிகள், அனைவரையும் அன்னாரின் ஆத்மா சாந்தி கிரியைகளிலும் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.**

இல.33 கடைச்சாமி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(190)
077 869 2341

இங்ஙனம்
குடும்பத்தினர்.


# கண்ணீர் அஞ்சலி!

எமது கல்லூரியின் ஆசிரியர் ச.அகிலன் அவர்களின் அன்புத்தந்தை

## அமரர் தம்பிஐயா சபாநாயகம்

(ஓய்வுநிலை நில அளவை அத்தியட்சகர் JP)

தோற்றம்
11
.
03
.
1938



தோற்றம்
13
.
09
.
2019

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவஞான வைரவப்பெருமானை வேண்டுவதோடு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**


ஆசிரியர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

(C-7613)

# மரண அறிவித்தல்

## தம்பிஐயா சபாநாயகம்

(ஓய்வுநிலை நில அளவை அத்தியட்சகர்-J.P.)



**பிறப்பு 11-03-1938 இறப்பு 13-09-2019**

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிஐயா சபாநாயகம் 13.09.2019 வெள்ளிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-செல்லாச்சி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-மங்களம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சந்திரமௌலீசனின் அன்புச் சகோதரரும், கோதை (அதிபர், கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), இளங்கோ (உரிமையாளர், ஜெகா எலெக்ரிக்கல்ஸ், சாவகச்சேரி), திருநந்தி, அகிலன் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்து கல்லூரி), திலகன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நகுலராஜா (ஓய்வுநிலை ஆசிரியர், பம்பலப்பிட்டி இந்து கல்லூரி), ஜெகதீஸ்வரி, சுகந்தினி, சுமங்கலா (யாழ்.கட்டட திணைக்களம்), மேகலை (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதாபன்,கஜன், கார்த்திகன், மாதங்கி, மயூரிகா, பிரியங்கா, பக்ஷிகா, அம்ருதா, வைவிஸ்தா, கதிலன், மேதினிகா, வெண்பா, செங்கோ ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15.09.2019 இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு வேலாயுதம் வீதி, நுணாவில் மத்தி இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சரசாலை வடக்கு கொம்பிகுளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலாயுதம் வீதி,
நுணாவில் மத்தி.

(சி-7615)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி.ஜெகதீஸ்வரதேவி தாமோதரம்



**தோற்றம் 02.07.1947 மறைவு 11.09.2019**

கோயிற்சந்தை கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரதேவி தாமோதரம் அவர்கள் 11.09.2019 புதன்கிழமை அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்ல முத்து தம்பதியரின் அன்பு மருமகளும், தாமோதரம் அவர்களின் அன்பு மனைவியும், தாரணி, நிவேதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், செந்தில்குமரனின் அன்பு மாமியாரும், கார்த்தி, லஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரநாதன், இராமச்சந்திரன், இராமதாஸ் சண்முகநாதன் ஆகியோரின் சகோதரியும், சத்தியலீலா, இராஜேஸ்வரி, ஜெயமங்களேஸ்வரி, பவானி, காலஞ்சென்றவர்களான கண்ணகை, சிதம்பரநாதன், சிவபாக்கியம், சிவக்கொழுந்து, சிற்றம்பலம் மற்றும் சின்னம்மா, கந்தப்பு ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15.09.2019 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறிப்பு : இன்று (15.09.2019) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரின் கரவெட்டியில் அமைந்துள்ள இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

கோயிற்சந்தை, கரவெட்டி மத்தி, கரவெட்டி. (179) தகவல்: குடும்பத்தினர்.

# தியாக தீபம் திலீபனின் 32ம் ஆண்டு நினைவேந்தல்

## நல்லூரில் இன்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் திலீபனின் 32 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் யாவும் யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும்.

அந்த வகையில் ஆரம்ப நாள் நிகழ்வு இன்று 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தியாகி திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த நேரமான காலை 9.30 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் இடம்பெறும்.

எனவே அஞ்சலி செலுத்த வரும் அனைவரும் காலை 9 மணியளவில் நினைவுத்தூபி முன்றலில் ஒன்றுகூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நிகழ்வின் நினைவுச் சுடரை மாவீரர்களின் பெற்றோர்களில் ஒருவர் ஏற்றுவார். அதனைத் தொடர்ந்து ஏனையோர் அஞ்சலிகளை செலுத்துவர்.

மேற்படி உணர்வுபூர்வமான ஆரம்ப நினைவு நாள் நிகழ்வில் கட்சி பேதங்களுக்கு அப்பால் சகல அரசியல் கட்சித் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், மாவீரர்களின் குடும்பங்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் தமிழ் பேசும் மக்களாக ஒன்றாக அணிதிரண்டு நம் ஒற்றுமையை வெளிப்படுத்தி நிற்போமாக என யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட் பகிரங்க அழைப்பு விடுத்தார். (இ-5)

## காணிகளை மீளப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் துரிதப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனால் படைத்தரப்பு மற்றும் பொலிஸாரால் பயன்படுத்தப்படும் வட மாகாணத்திலுள்ள தனியார் காணிகளை அடையாளம் கண்டு அவற்றைத் துரிதகதியில் மீளக் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே ஆளுநரால் யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் காணிகளை அடையாளம் கண்டு அவற்றைத் துரிதகதியில் மீளக் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மீள் உரிமை கோரல் விண்ணப்பப்படிவங்கள் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் அடுத்தகட்டமாக ஏனைய மாவட்டங்களிலும் முப்படையினர் மற்றும் பொலிஸார் நிலை கொண்டுள்ள தனியார் காணிகள் தொடர்பான விபரங்களை காணிகளின் உரித்தாளர்கள் அறியத்தருவதன் மூலம் அவர்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்பவர்களாயின் அவர்களும் தமது காணிகளை அடையாளப்படுத்துமாறும் இதற்காக தயாரிக்கப்பட்ட விசேட விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து உரிமைகோரலுக்கான தகுந்த ஆதாரத்துடன் அல்லது தகுந்த விளக்கத்துடன் மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு காணி உரிமையாளர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

குறித்த விண்ணப்பப்படிவத்தை ஆளுநர் செயலகம், மாவட்ட செயலகம் , பிரதேச செயலகம் மற்றும் வடமாகாண சபையின் **np.gov.lk** இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

காணி உறுதியின் பிரதியுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை இணைத்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் "காணி கோரல்" வட மாகாண ஆளுநர் செயலகம், பழைய பூங்கா, சுண்டுக்குளி , யாழ்ப்பாணம்என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டது. (இ-5)

## பொலிஸார் முன்னிலையில் வெட்டப்பட்ட வீதியை சீர்செய்த காற்றாலை நிறுவனம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மறவன்புலவு பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி நிறுவனத்தினரால் அனுமதி இன்றி அமைக்கப்பட்ட கடற்கரை வீதி மக்களின் கோரிக்கைக்கு அமைவாக அண்மையில் வெட்டிய போதிலும் பின்னர் குறித்த வீதியை காற்றாலை நிறுவனத்தினர் சீரமைத்ததாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டினர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

உரிய அனுமதி இன்றியும், பிரதேச மக்க்ளின் எதிர்ப்பை மீறியும் மறவன்புலவு கடற்கரை பகுதியில் காற்றாலை நிறுவனத்தினரால் போடப்பட்ட வீதி எமக்கு தேவை இல்லை என பிரதேச மக்கள் அண்மையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் மக்களின் கோரிக்கை நியாயமானதெனக் கூறி பொலிஸார் முன்னிலையில் குறித்த வீதியில் பத்து அடி அகலத்தில் வாய்க்கால் வெட்டப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டது.

பின்னர் குறித்த காற்றாலை நிறுவனத்தினர் வெட்டப்பட்ட வாய்க்காலில் நீர் வழிந்தோடும் குழாய் வைத்து வீதியை சீரமைத்து போக்குவரத்து செய்து வருவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டினர்.

காற்றாலை நிறுவனத்தினர் உரிய அனுமதி பெறாமல் கடற்கரை வீதி அமைத்தல், நீர் வழிந்தோட வாய்க்கால் இல்லை, குறித்த பாதை ஊடாக சட்டவிரோத மணல் மண் அகழ்வு இலகுவாக இடம்பெறுகிறது ஆகிய காரணங்களை முன்வைத்து பாதையை வெட்டி போக்குவரத்தை தடை செய்தமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் குறித்த காற்றாலை நிறுவனத்தினர் நீர் வழிந்தோட மாத்திரமே பாதையை வெட்டக் கோரினார்கள் என்ற போர்வையில் நீர்வழிந்தோடும்குழாயை வைத்து வீதியை சீர்செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-30)

## இலக்கணப் போட்டியில் மாணவி முதலிடம்



(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவி மயூசி மார்க்கண்டு இலக்கணப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். (இ-5-60)

## குறுநாடக ஆக்கப் போட்டியில் மாணவி 2ஆம் இடம்



(யாழ்ப்பாணம்)

தேசியமட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவி கி.காதம்பரி குறுநாடக ஆக்கப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். (இ-5)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க (வ/து) வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் கால்நடை வைத்திய நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் மு.சிவசுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. எனவே சகல அங்கத்தவர்களையும் அன்றைய தினம் சமுகமளிக்குமாறு சங்கச் செயலாளர் பு.சித்திரா கேட்டுக் கொண்டார். (இ-5)

## வர்ணனைப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-இருபாலை கிழக்கு மண்டாக்குளம்பதி அருள்மிகு மனோன்மணி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை திங்கட்கிழமை அதிகாலை 5.30 முதல் 6.30 மணிவரை நடைபெறும். இப் பெருவிழாவில் கும்பாபிஷேக மகத்துவம்" எனும் விடயத்தில் ஆசிரியர் மதுரகவி. காரை, எம்.பி. அருளானந்தன் வர்ணனைப் பேருரை வழங்குவார். (இ)

## இராசி பலன்

**மீனம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மேடம்:** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், பொது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சுப விரயங்கள் கூடும் நாள்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, உறவினர்களின் வருகையுண்டு, பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தினர் உங்களின் ஆலோசனையை ஏற்று அதன்படி நடப்பர்.

**கும்பம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், இளைய சகோதர வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பில் அக்கறை காட்ட முற்படுவீர்கள்.

இராசி பலன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| சந் | | | ராகு |
| | | | |
| | | | சூரி, செவ் |
| சனி, கேது | குரு | | சுக்., புத |

சந்திராஷ்டமம்
உத்திரம்

**15.09.2019**

ஆவணி 29, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 5.27 மணிக்கு
பிரதமை பிற்பகல் 12.11 மணிவரை
உத்திரட்டாதி பின்னிரவு2.14மணிவரை
சுபநேரம் 9.03 - 10.33 மணிவரை
இராகுகாலம் 4.33 - 6.03 மணிவரை
ஐந்தாம் ஆவணி ஞாயிறு

வளவன்

**கடகம்:** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**சிம்மம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நல்லவர் என நினைத்த ஒருவரே உதாசீனப் படுத்துவது கண்டு வருத்தமடைய நேரிடலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்:** சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** சுப செய்திகள் நாடி வரும் நாள், தலைமைப் பொறுப்புக்கள் உங்களை நாடி வரலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணமொன்றை மேற்கொள்வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த பரீட்சைகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

சம்பள முரண்பாடு மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் பல்கலைக்கழகல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்ட தொழிற்சங்க முன்னெடுப்புக்களால் இந்நிலைமை ஏற்பட்ட பல்கலைக்கழக நிர்வாகம் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியது. (இ-7)


பழைமை வாய்ந்த

# ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கஷரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற
- பில்லி சூனியங்கள் அகற்ற வேண்டுமா?

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**றெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153, 076 841 1848

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ
திருவண்ணை கன்னாதிட்டி
அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்

# கேதார கௌரி விரதம்



அம்பிகை அடியார்களே!

எதிர்வரும் 08.10.2019 செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகவிருக்கும் கேதாரகௌரி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்கள், தங்கள் பெயர் நட்சத்திரங்களை தற்போது பதிவு செய்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

(9300) தேவஸ்தானம்.



# குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

வேதாத்திரி மகரிஷியின் முழுமை நல வாழ்வுக்கான மனவளக்கலை யோகாவினை பயிற்றுவிக்கும் யாழ் தவமையம் தனது 08 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து 09 ஆவது ஆண்டினை ஆரம்பிக்கும் மகிழ்ச்சியான நிகழ்வு 15.09.2019 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு குருவருளுடனும், திருவருளுடனும் நிகழ்த்த ஏற்பாடாகியுள்ளது.

- இந்நிகழ்வானது, சிறப்புத் தியானத்துடன் ஆரம்பமாகும்.
- உடல் நலமும், தியானமும் - Dr. பாலசுப்ரமணியம்
- வர்ம சிகிச்சை - Dr.ஸ்ரீதரன்

ஆகியோரது சிறப்புரைகள் இடம்பெறவுள்ளன. பொதுமக்கள், மாணவர்கள், அருளாளர்கள், அருள்த் தேடலாளர்கள், அருள் நிதிகள், மனவளக்கலை அன்பர்கள் எல்லோரையும் இந்நிகழ்வில் பங்குபற்றி பயனடையுமாறு வேண்டுகிறோம்.

(184) இடம்:- 14/4 1st Lane, Temple Road.
(US Hotel க்கு முன் ஒழுங்கை)
TP :- 076 395 9293, 077 382 1094, 077 452 8839



# மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட 04-02-1963-மிருகசீரிடம் நட்சத்திரம் செவ்வாய் குற்றம் அற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. (176)

தொ.இல:- 076 230 4603



## வாடகைக்கு

படிக்கும்,வேலை செய்யும் பெண்கள் தங்குவதற்கு ஏற்ற Rooms வடகைக்கு விடப்படும். பலாலி வீதிக்கு அருகாமையில்.

(161) தொ.இ:- 077 956 1594



# மணமக்கள் தேவை

ஐரோப்பியா,
அவுஸ்திரேலியா,
அமெரிக்கா, நியூசிலாந்து
ஆகிய இடங்களில்
வசிக்கும்
மணமக்களுக்கு
மணமக்கள் தேவை. (179)

தொடர்புகளுக்கு:-
076 725 0144
Viber:- 0094 767 250 144


## அமரர் வேலணையூர் கவிஞர் பொன்னண்ணாவின் ஞாபகார்த்த கவிதைப் போட்டி - 2019



கவிஞர் பொன்னண்ணாவின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி பொன்மணி அறக்கட்டளை நிறுவனத்தால் அகில இலங்கை ரீதியாக கவிதைப் போட்டி நடத்தப்படவுள்ளது. இப் போட்டியானது அனைவரும் பங்குபற்றக் கூடிய வகையில் திறந்த போட்டியாக இடம்பெறும்.

### போட்டிக்கான தலைப்புக்கள்

1. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
2. நெஞ்சு பொறுக்குதில்லையே....
3. வானம் வசப்படும்

போட்டிக்கான நிபந்தனைகள்

1. புதுக்கவிதையாகவோ மரபுக்கவிதையாகவோ அமையலாம்
2. கவிதை நூறு அடிகளைக் கொண்டதாக அமைய வேண்டும்
3. சுய ஆக்கமாக அமைதல் வேண்டும்/ வேறு எங்கும் வெளியாகாத ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
4. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
5. போட்டிக்கான இறுதித் திகதி 25.09.2019 (புதன்கிழமை)
6. சுயமாகத் தயாரித்த சுயவிபரக்கோவையை தொலைபேசி இலக்கத்துடன் குறிப்பிட்டு ஆக்கத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு**
1 ஆம் பரிசு- 15,000 ரூபா
2 ஆம் பரிசு- 10,000 ரூபா
3 ஆம் பரிசு- 5,000 ரூபா
மேலும் ஏழு ஆறுதல் பரிசில்களுக்கு தலா 3,000 ரூபா வழங்கப்படும்.

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி
பொன்மணி அறக்கட்டளை நிறுவனம்
"தாயகம்"
உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம். (186)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1 ஆம் பாதம்<br>கி.பா: 37 3/4<br>உயரம்: 178 cm<br>தகைமை/தொழில்:- தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/10001 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அஸ்வினி<br>உயரம்: 5'5"<br>தொழில்/தகைமை: OL soft faime nginigccime வியாபாரம்<br>தொ.இ: G/10063 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3 ஆம் பாதம்<br>கி.பா: 191/28 இல் செவ்.<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: சமுதாய உளநல உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரசஆசிரியர் தொழில்<br>தொ.இ: B/10004 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3 ஆம் பாதம்<br>கி.பா: 27 1/2<br>தொ.இ: G/10065 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1 ஆம் பாதம்<br>கி.பா: 37 4 இல் செவ்.<br>தகைமை/தொழில்: Computer science (Bsc)Colombo campus (Londan)<br>எதிர்ப்பு விஞ்ஞானபட்டதாரிவேலையுடன்<br>தொ.இ: B/10005 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 158 cm<br>தகைமை/தொழில்: பலநோக்கு கூட்டுறவு சங்க கிளாக் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/10067 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4 ஆம் பாதம்<br>தகைமை/தொழில்: அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer , Lecturers உயர்பதவி<br>தொ.இ: B/10008 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4 ஆம் பாதம்<br>கி.பா:-7 4 இல் செவ்.<br>உயரம்: 5'4"<br>தொழில் தகைமை: விஞ்ஞான ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர் அல்லது டாக்டர்<br>தொ.இ: G/10071 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## எழுக தமிழே எழுக நீ எழுக ...

எழுக தமிழே எழுக
ஏதும் அறியா ஏதிலிபோலெமை
எங்கள் தமிழை வஞ்சகம்செய்யும்.
சிங்க குகையின் இனவெறி நாடகம்
எங்கும் இனியும் எளிதினில் எடுபடாதென
உங்கள் பதிலாய் உலகிற்கு காட்டிட
எழுக தமிழே எழுக...

இலட்சிய கனவு கலைந்து போகவும்
இலங்கையில் தமிழர் அடையாளம் அழியவும்
இங்கு நம் இடங்கள் இரையாய் போகவும்
இன்றிதை சிங்களம் இனிதே தொடரவா ?
இத்துனை உயிரை இங்கு நாம் தந்தோம்
இடித்திதை தடுத்து உரித்தை உரைத்திட
இன்றே எழுக இணைந்து நம் உறவே...

முள்ளிவாய்க்கால் முழுவதும் உழுது
அள்ளி எடுத்து பருகிய குருதியால்
துள்ளி மகிழ்ந்த துட்டரை துலக்க
தெள்ளு தமிழின் தாய்தமிழ் வெளியில்
வெள்ளம் உடைத்த பேரணை போன்று
கொள்ளி வைத்தவர் கொள்கைகள் எரிக்க
அள்ளி வருக அடுக்களை நெருப்பை...

போரோய்ந்த மண்ணில்
பொருளாதாரமெனும் நச்சுவிதை
விதைத்து நாளடைவின் அறுவடையில்
நாமறுந்துபோக போதிமரத்தார்
பாரோய்ந்துவிட ஊரோய்ந்துவிட
உணர்விழந்துவிட ஊர்வலம்வருவர்...

உடலோய்ந்து போனாலும்
உயிரோய்ந்து போனாலும்
உணர்வென்றும் ஓயாது உரத்துக்குரல்
எழுப்பும் என்றே எழுக தமிழே எழுக...

ஒற்றுமை உருவாய் தமிழே வருக
ஒற்றர்கள் கூட்டு ஒழிந்திட வருக
நற்றமிழ் வேள்வி அறமென வருக
பெற்றிடும் உரிமை குரலிது ஓங்கி
வெற்று வாக்கினை தகர்த்திட வருக
முற்றைவெளியது மகிழ்ந்திட வருக
அற்றுப் போகும்வஞ்சகம் சூதென
இற்றைப்பொழுதே எழுந்து நீ வருக...

தியாக தீபம் நினைவினை சுமந்து
தாயக கனவினை நனவினில் பெறவே
ஓயாதிருப்போம் ஒன்றாய் எழுவோம்
எழுக தமிழே எழுக நீ எழுக...

கே.கே.எஸ்.அரா.




## எழுக தமிழ் என எழுவோம்

எழுக தமிழ் இனிதாய் எழுகவே
எழு கடலென வேகமாய் எழுகவே
கட்சி பேதம் மறந்து இணைவோமே
கலக்கமின்றி நாம் வாழவே எழுவோமே

எந்தன் தமிழ் நிலைத்து இனிதாய்
என்றும் வாழ்வதற்கு எழுக தமிழே
சுவைமிகு தமிழ் நிலைபெற்று வாழவே
சுற்றத்தார் அனைவரும் ஒன்றாய் எழுவோமே

தமிழ் மெல்லச் சாகுமென நினைப்போர்
தளம்பிப் போகவே தமிழினமே இணைவோமே
அனைத்துமிழந்து அழிவின் விளிம்பில் நிற்கும்
அன்னைத் தமிழினம் துளித்திட எழுவோமே

சாங்கத் தமிழ் பொங்கி எழுகவே
சங்கு முழங்கிட தமிழர் வருகவே
உலகம் எம் வலிகள் உணரவே
உரிமையுடன் எல்லோரும் இணையவே

அன்னைத் தமிழ் நிலைத்திடவே வாரீர்
அகிலம் உணர்ந்திட அனைவரும் வாரீர்
எழுக தமிழ் என்றுரைக்க வாரீர்
என்றும் தமிழ் வாழ்ந்திடும் வாரீர்.

சாணக்கியன்.

# அகிலம் உணர்ந்திட அ
# எழுக தமிழ் என்று

## எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு அ
## ஆதரவளித்து பங்கேற்பது அவசி

### அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை அ

(லண்டன்)

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கியதான தீர்வுத்திட்ட யோசனைகளை முன்னிறுத்தியும் தமிழ் மக்களின் சமகால போராட்ட முன்னெடுப்புக்களில் வலியுறுத்தப்பட்டுவரும் கோரிக்கைகளுக்கு கூட்டுப்பலம் சேர்க்கும் வகையிலும் தமிழ் மக்கள் பேரவையால் நாளை 16 ஆம் திகதி நடத்தப்படும் "எழுக தமிழ்" எழுச்சிப்பேரணிக்கு அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை முழுமையான ஆதரவை வழங்குவதுடன் இம்மக்கள் எழுச்சிப் பேரணிக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவளித்து பங்கேற்குமாறு அன்புரிமையுடன் அழைப்பு விடுத்தது.

> தாய் மண் விடுதலை பெறவும், வருங்காலச் சந்ததி சுதந்திரக்காற்றை சுவாசிக்கவுமாக முகம் தெரியாமல் தம்முயிர்துறந்த தியாகசீலர்களது தியாகத்திற்கு முன்பாகவும் கந்தகம் சுமந்து காலனை வென்று சாவினை விரும்பியழைத்து வெடித்துச்சிதறி வானோடு வானாகவும் கடலோடு கடலாகவும் காற்றோடு காற்றாகவும் மண்ணோடு மண்ணாகவும் கலந்துவிட்ட கருவேங்கைகளின் சிதறுண்டுபோன சதைத்துண்டங்களுக்கு முன்பாகவும் எம்மைப் பிரித்தாளும் தன்முனைப்பு, விடாக்கொண்டன் கொடாக்கொண்டன் போக்கு என்பன கால் தூசாகும்.

தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும் வகையிலான இலங்கை அரசின் ஆக்கிரமிப்புக்களும் அத்துமீறல்களும் எதேச்சதிகாரப்போக்கும் வரைமுறைகளேதுமின்றி தமிழர் தாயகத்தில் முழுவீச்சுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அவையெதையுமே கண்டும் காணாதவர்களாக தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் செயற்பட்டு வருவது மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக தமிழ் மக்களை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறான கையறு நிலையில்தான் தமிழ் மக்கள் தாமாகவே தத்தமது பிரச்சினைகளை முன்வைத்து தனித்தும் கூட்டாகவும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களாகட்டும் சட்டவிரோதமான முறையில் சிறையிலடைக்கப்பட்டவர்களாகட்டும் அவரவரது தனித்தான நலன்களுக்காகத் துன்பச்சிலுவை சுமக்கவில்லை. உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் பாரம்பரிய இடங்கள் அந்தந்த காணி உரிமையாளர்களுடனான தனிப்பட்ட பிணக்குகளின்பாற்பட்டு ஆக்கிரமிக்கப்படவி
தும் தமிழர்கள்
வலிந்து திணி

ஆகவே த
உலகின் எந்
தாயகத்தில்
எழுச்சிப் பேர
றுக்கடமையா
கும் தமிழ்த்தே
அனைத்துத்
வேறுபாடுகள்
வேண்டும்.
மானமறவர்க
செய்தார்கே
ள்ளதாக்கும்
பங்கேற்பது த
யுமாகும்.

எமது வர
தேசத்தின் வி
ப்பிற்காகவும்
சக்தியாக த
பயணித்து வ
எழுக தமிழர
யுடன் கேட்டு
துலக ஈழத்தமி
விடுத்தது.




## எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு மருதனார்மட வர்த்தக சமூகம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு மருதனார்மட வர்த்தக சமூகத்தினர் தமது பூரண ஆதரவை வழங்கினர்.

நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை யாழில் இடம் பெறும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி சர்வதேசத்துக்கும் அரசுக்கும் சிறந்த செய்தியை எடுத்துக் கூறுவதாக அமையும் என நம்புகின்றோம்.

அது மட்டுமல்லாது தற்போது ஐ.நா. சபைக் கூட்டம் இடம் பெற்று வரும் நிலையில் தமிழ் மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினை தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும் எமது கோரிக்கைகளை முன்வைத்து கட்சி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் ஒன்றுபடுமாறு மருதனார்மட வர்த்தக சமூகத்தினர் அழைப்பு விடுத்தனர். (இ-10-106)

## தமிழ
## பேதா
## ஸ்ரீமா

(ஏறாவூர்)
தமிழ் மக்
திகதி யாழ்.ம
எழுச்சிப் பேர
பேதங்கள் ம
வேண்டுமெ
கடனுதவு கூ
தமிழச் ச
ணாத் துயர
ணத்திலே யா
எழுச்சிப் பேர

## தமி

## எழுக

(யாழ்ப்பா
தமிழர் வி
தமிழ் மக்கள
வர்களான
பெரியார் ஜீ.ஜீ
ஆகியோர் -
ஒற்றுமையை
பிக்கப்பட்ட க
அந்த மு
வெற்றியும் க
வசமாக அந்
போது சீர்கு
தமிழர் விடு
யின் அடிப்ப

# அனைவரும் வாரீர்
# றுரைக்க வாரீர்!

## அனைவரும்
## வசியமாகும்!

### வை அழைப்பு

கிரமிக்கப்படவில்லை. இவ்வாறானவை அனைத்தும் தமிழர்கள் என்பதற்காகவே எம்மவர்கள் மீது வலிந்து திணிக்கப்பட்டுள்ளது.

ஆகவே தமிழர்களாகிய நாம் அனைவரும் உலகின் எந்தவொரு மூலையில் இருந்தாலும் தாயகத்தில் நடைபெறும் எழுக தமிழ் 2019 எழுச்சிப் பேரணிக்கு ஆதரவளிப்பது வரலாற்றுக்கடமையாகும். குறிப்பாக தாயகத்தில் இருக்கும் தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்கும் அனைத்துத் தரப்பினரும் அரசியல், கட்சி வேறுபாடுகள் கடந்து ஓரணியில் அணிதிரள வேண்டும். ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட மானமறவர்கள் எதற்காக தம்முயிரைத் தியாகம் செய்தார்களோ அத்தியாகத்தை அர்த்தமுள்ளதாக்கும் அனைத்து முன்னெடுப்புக்களிலும் பங்கேற்பது தமிழர்களாகிய அனைவரது கடமையுமாகும்.


எமது வரலாற்றை மனதில் நிறுத்தி தமிழ்த் தேசத்தின் விடிவிற்காகவும் தமிழ் மக்களின் இருப்பிற்காகவும் கொள்கைவழி ஒன்றுபட்ட பெரும் சக்தியாக தமிழ்த் தேசிய அரசியல் வழியே பயணித்து வரும் அனைத்துத் தரப்புக்களும் எழுக தமிழராய் அணிதிரளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை மேலும் அழைப்பு விடுத்தது. (இ-7)






# தமிழ் மக்களின் இருப்புக்காக எழுக தமிழில் இணைவோம்

## ஆனந்தன் அழைப்பு



(வவுனியா)

தமிழ் மக்களின் இருப்புக்காக எழுக தமிழில் அனைவரும் கலந்து கொள்வோம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இன்று வரை எட்டப்படவில்லை என்பதுடன் இறுதிப் போரின்போது இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் மனித குலத்திற்கு எதிராக நடத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து நீதி நிலை நாட்டப்படவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியும் இன்று வரை வழங்கப்படவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவிப்பதற்கு அரசாங்கத்திற்கு இன்னமும் துணிவு வரவில்லை.

அரசியல் கைதிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணக்க அரசியலின் மூலம் கடந்த நான்கு வரவு-செலவுத்திட்டத்திலும் பாதுகாப்புத் தரப்பினரின் செலவீனங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகரித்த நிதிக்கும் ஆதரவு அளித்துக் கூட எமது மக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

மாறாக கையெடுத்து வணங்க வேண்டிய புத்தபெருமானை நில ஆக்கிரமிப்பாளராகவும் அரச அனுசரணையுடன் வடக்கு-கிழக்கில் தமிழர் தாயக பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்தின் சின்னமாகவும் இலங்கை அரசாங்கம் முன்னிலைப்படுத்துகின்றது.

புதிய அரசாங்கம் இரண்டு பிரதான கட்சிகளை உள்ளடக்கியதாகவுள்ளது. அதன் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டுவிடலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனவுகள் கூட தகர்த்தெறியப்பட்டுள்ளன.

ஆகவே எமது நாளாந்த பிரச்சினை முதல் அரசியல் தீர்வு வரை எந்தவொரு விடயமும் தீர்க்கப்படவில்லை என்பதை இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் மிகவும் வலிமையுடனும் உறுதியுடனும் ஜனநாயக ரீதியிலும் போராடுவதற்கு தமிழ் மக்கள் பேரவை ஒன்றே எமக்கு இன்று இருக்கும் ஒரு பிரதான தளமாகும்.

எனவே அனைத்து தமிழ் மக்களும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் தொழிற்சங்கம் உள்ளிட்ட அனைத்து பொது அமைப்புக்களும் நாளை 16 ஆம் திகதி காலை தமிழ் மக்கள் பேரவையில் முன்னெடுக்கப்பட்டுவரும் எழுக தமிழ்-2019இல் அணிதிரள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

அரசியல் கட்சிகளுக்கு ஒரு முக்கிய வேண்டுகோள். உங்களின் கட்சிகளின் இருப்புக்காக நீங்கள் எத்தகைய நிலைப்பாட்டை மேற்கொண்டிருந்தாலும் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்காகவும் அதன் இருப்பினையும் அதன் அடையாளத்தையும் நாம் தக்கவைப்பதற்கு நீங்கள் தொடர்ந்தும் தமிழர் தாயகத்தில் அரசியல் நடவடிக்கை முன்னெடுப்பதற்கு எழுக தமிழில் இணையவேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவித்தார். (இ-250)

# தமிழினமாக "எழுகதமிழ்" எழுச்சிப் பேரணியில் பேதங்கள் மறந்துபேரெழுச்சியுடன் பங்கேற்போம்

## ஸ்ரீமாமாங்கேஸ்வரர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

(ஏறாவூர்)

தமிழ் மக்கள் பேரவையால் நாளை 16 ஆம் திகதி யாழ்.மண்ணில் நடத்தப்படும் "எழுகதமிழ்" எழுச்சிப் பேரணியில் தமிழினம் என்ற ரீதியில் பேதங்கள் மறந்து பேரெழுச்சியுடன் பங்கேற்க வேண்டுமென, ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் அழைப்பு விடுத்தது.

தமிழச் சமூகம் இருப்பை இழந்து சொல்லொணாத் துயரை அனுபவித்தபடி இருக்கும் இத்தருணத்திலே யாழ்.மண்ணில் "எழுகதமிழ்- 2019" எழுச்சிப் பேரணி நடத்தப்படுகிறது. இதில் எல்லாத் தமிழர்களும் தமிழ் இனம் என்ற ரீதியிலே நாங்கள் ஒற்றுமை உணர்வுடன் சகல பேதங்களையும் மறந்து பேரெழுச்சியுடன் பங்குபற்ற வேண்டியது தமிழர்களாகிய எமது கடமையாகும்.

வடகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற துன்பகர மற்றும் தீர்க்கப்பட வேண்டிய வாழ்வாதாரப் பிரச்சினைகளை முன்வைத்து நடத்தவிருக்கின்ற பொதுமக்கள் எழுச்சிப் பேரணியிலே தமிழன் என்ற சொல்லிற்கு அர்த்தம் கொடுக்க நினைக்கும் ஒவ்வொரு தமிழனும் பேரணியில் பங்கேற்க வேண்டும். எங்களின் வருங்கால சந்ததியின் இருப்பை உறுதிப்படுத்த இப் பேரணியில் பங்குபற்ற வேண்டும் என அச்சங்கம் மேலும் வேண்டுகோள் விடுத்தது. (இ-7)

# தமிழரின் ஒற்றுமை ஓங்கி வளரட்டும்

## எழுக தமிழுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் பெருந்தலைவர்களான தந்தை செல்வா, பெரியார் ஜீ.ஜீ பொன்னம்பலம் ஆகியோர் - தமிழ் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட கட்சியாகும்.

அந்த முயற்சியில் பெரும் வெற்றியும் கண்டது. துரதிர்ஷ்டவசமாக அந்த ஒற்றுமை தற்போது சீர்குலைந்திருந்தாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிப்படைக் கொள்கைகளில் எதுவித மாற்றமும் இன்றி செயற்படுகிறது.

இன்று நாட்டு நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிற இந்நிலையிலேயே தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை உணர்வைத் தூண்டுவதற்கு முக்கிய பல கோரிக்கைகளை முன்வைத்து எழுக தமிழ் பேரணி நடத்தப்படுகிறது!

இதற்கு தமிழ் மக்கள் அனைவரும் பூரண ஆதரவை வழங்கி அதில் கலந்துகொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகிறது!

இவ்வொற்றுமையின் அவசியத்தை நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவமும் எமக்கு உணர வைக்கிறது. கொக்கட்டிச்சோலைக்குப் பாதயாத்திரை மேற்கொண்டவர்களை பொலிஸார் கன்னியா வெந்நீரூற்றில் நீராட விடாத செயல் அரசினுடைய அனுசரணையுடனேயே நடந்திருக்கிறது என நான் சந்தேகப்படுகிறேன்.

எழுக தமிழ் மூலம் தமிழரின் ஒற்றுமை ஓங்கி வளரட்டும் என வாழ்த்துகின்றேன் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார். (இ-7)

# வீறுகொண்டு எழுகதமிழ்

வீறுகொண்டு எழுக தமிழ்
வீரமுடன் பறைசாற்ற எழுக தமிழ்
வீரவரலாற்றை எடுத்துரைக்க எழுக தமிழ்
வீழாமல் தமிழன் வாழ்ந்திட எழுக தமிழ்

நம்பி எம்மை ஏமாற்றியவர் குனிந்திட வேண்டும்
நல்ல இளைஞர்களை அழித்தவர்கள்
உணர்ந்திட வேண்டும்.
நன்று என பலகோடி தமிழர் தலை நிமிர்ந்திடவேண்டும்
எழுக தமிழா எழுக தமிழா எழுக தமிழா

காணாமல் போனவர்களை கண்டறிய எழுக தமிழ்
கலங்கிய மக்களின் காணியை விடுவிக்க எழுக தமிழ்
கட்சி பேதமின்றி அனைவரும் கலக்க எழுக தமிழ்
கண்ணீரை துடைக்க தமிழா நீ எழுக தமிழா

பத்தியுடன் நாம் வணங்கிய ஆலயம் பௌத்தமாகிடா
பயமின்றி நாம் நடந்த இடத்தில்
இராணுவம் குடியேறுகடா
பலமின்றி நாம் இருக்க நம்மவரே காரணமடா
பலமாக நாம் இருக்க ஒற்றுமையா இருக்க எழுக தமிழா

கரையூர் ஸ்ரீகரன்
ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர்.

# பேருந்துச் சாரதியாக மாறிய சஜித்



(கொழும்பு)

பேருந்து ஒன்றின் சாரதியாக நேற்று முன்தினம் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ செயற்பட்டார். கண்டி, திகன - ராஜவெல்ல இந்துப் பாடசாலைக்கு 46 இலட்சம் ரூபாய் பெறுமதியான பேருந்து ஒன்று வழங்கப்பட்டது.

இதன்போது குறித்த பேருந்தின் சாரதி ஆசனத்தில் அமர்ந்த சஜித் சாரதியாக செயற்பட்டார்.

அந்தப் பாடசாலையின் மாணவர்கள் சிலரையும் ஏற்றிக் கொண்டு பேருந்தை ஓட்டிச் செல்ல அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டார். நாடளாவிய ரீதியில் பாடசாலை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 44 இலட்சத்திற்கும் அதிகம் என அமைச்சர் தெரிவித்தார்.

அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த கல்வியைக் கொடுப்பதற்கு தான் முயற்சித்து வருவதாக அமைச்சர் சஜித் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆவணப்படத் திரையிடலும் உரையாடலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள மாற்றுப் பாலினத்தவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவர்கள் எதிர்கொள்கின்ற சவால்களையும் அவர்கள் மீது திணிக்கப்படுகின்ற ஒடுக்குமுறைகளையும் ஒதுக்கல்களையும் சந்திப்புக்களின் மூலமாகவும் உரையாடல்களினூடாகவும் "நாங்களும் இருக்கிறம்" என்கிற ஆவணப் படம் திரையிடப்படவுள்ளது

நாம் வாழும் சமூகத்தில் நிகழும் எல்லா வகையான அசமந்தங்களையும் களைந்து சமூக நீதிக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் குரலெழுப்பி பொதுவெளியில் உரையாடல்களை உருவாக்குவதைத் தன் நோக்குடன் விதை குழுமத்தின் ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் பொது நூலக குவிமாடக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

மாற்றுப் பால்நிலையினரின் இருப்பைக் குறித்தும் அவர்கள் தொடர்ந்தும் எதிர்கொள்ளும் சமூக அவலங்களைக் குறித்தும் அக்கறை கொண்டவர்களுக்கும் இந்த ஒடுக்குமுறைகளுக்கும் ஒதுக்கல்களுக்கும் எதிராகச் செயலாற்றி மாற்றுப்பாலினத்தவர்களுக்கான சமூகநீதி கிடைக்கவேண்டும் என்ற நோக்குடையவர்களுக்கும் மாற்றுப்பாலினருடன் உரையாடிச் செயற்படுவதற்கான ஒரு பொதுவெளியைத் திறப்பதை நோக்காகக் கொண்ட கலந்துரையாடலும் ஆணவத் திரைப்பட திரையிடலின் பின்னர் இடம்பெறும். (இ-9)

# பெரும் தொகை நிதியை இழந்த மகாபொல உயர் கல்வி நிறுவனங்கள்

## முன்னாள் பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மாலபே தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை குத்தகை முறைமையின் கீழ் மற்றைய இரண்டு நிறுவனங்களுக்கு மாற்றியமையால் மகாபொல உயர் கல்வி நிறுவனங்கள் பெரும் தொகை நிதியை இழக்க நேரிட்டுள்ளதாக முன்னாள் பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் தெரிவித்தார்.

அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சியம் வழங்கிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 2015 இல் மகாபொல அறக்கட்டளை நிதியத்தில் முறைகேடு நடந்ததாக ஆணைக்குழுவிற்கு முறையிடப்பட்டதுடன் இதன்போது கே.ஸ்ரீபவன் அந்த நிதியத்தின் உத்தியோகபூர்வ தலைவராக கடமையாற்றினார்.

எனவே இந்த ஒப்பந்தத்தில் தலைவராக கையெழுத்திடுவதற்கு தான் உடன்படவில்லை எனவும் அதற்கான ஆவணங்கள் சட்டபூர்வமானவை அல்ல என்றும் ஸ்ரீபவன் சுட்டிக்காட்டினார்.

ஆனால், துறைக்கு பொறுப்பான அமைச்சரை நியமிக்கும் போது அந்த அறக்கட்டளை நிதியக் குழுவில் இருந்த பேராசிரியர் விக்ரம வீரசூரிய, இதுபோன்ற ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் அதிகாரம் இருப்பதாகக் கூறி அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதாக முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவித்தார்.

அதேபோல் மகாபொல அறக்கட்டளை நிதியத்திற்குப் பொறுப்பாக இருந்த முன்னாள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, தற்போதைய அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா ஆகியோர் குறித்த ஒப்பந்தம் தொடர்பில் கரிசனை கொள்ளவில்லை எனவும் முன்னாள் பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் சுட்டிக்காட்டினார். (இ-7)

# மொட்டு சின்னத்தில்தான் பெரமுன போட்டியிடும்

## கெஹலிய திட்டவட்டம்



(கொழும்பு)

மக்களிடம் பிரபலமான கட்சியாக பொதுஜன பெரமுன தற்போது உள்ளமையால் எதிர்வரும் தேர்தல்களில், தாமரை மொட்டு சின்னத்திலேயே போட்டியிம் என நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

மொட்டு சின்னம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் நியமிக்கப்படும் ஜனாதிபதி வேட்பாளரால் ஒருபோதும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதை அக்கட்சியினர் அறிவார்கள்.

இந்நிலையில் சுதந்திரக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைவதை விரும்பாத பலர், ஜனாதிபதி வேட்பாளரான கோத்தபாய மொட்டுச் சின்னத்திலன்றி வேறு சின்னத்தில் போட்டியிட வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

ஆகையால் இவர்கள் கூறுவதை எல்லாம் கவனத்தில் கொள்ள முடியாது. பொதுஜன பெரமுன மொட்டு சின்னத்தில் தான் போட்டியிடும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டம் தொடர்பில் முரண்பாடுகள்

## முறைப்பாடுகள் இருப்பின் முறையிடுங்கள் - அரசு



(கொழும்பு)

"அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" வேலைத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளில் ஏதாவது முரண்பாடுகள், ஊழல் மற்றும் மோசடிகள், தரமற்ற நிர்மாணப் பணிகள் போன்ற விவகாரங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் இருப்பின் கல்வி அமைச்சின் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் பிரதான செயற்றிட்ட பொறியியலாளருக்கு குறித்த முறைப்பாட்டை வழங்குவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் பிரதான செயற்றிட்ட பொறியியலாளரின் 011 278 6768 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொண்டோ அல்லது பிரதான செயற்றிட்ட பொறியிலாளர், அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்றிட்ட அலுவலகம், 7 ஆம் மாடி, இசுறுபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு குறித்த முறைப்பாட்டை அனுப்பி வைக்க முடியும்.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டமானது 65 ஆயிரம் மில்லியன் ரூபாய் செலவில் 18 ஆயிரம் செயற்றிட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் ஊடாக 9064 பாடசாலைகள் பயனடைகின்றன.

இதன் ஊடாக பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன. மேலும் இந்தத் திட்டத்தின் கீழ் மூன்று கட்டங்களாக 950 புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்கள் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 120 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 180 | 190 | 320 |
| தக்காளி | 180 | 90 | 100 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 100 | 110 | 120 |
| கோவா | 120 | 80 | 80 | 60 | 160 |
| கரட் | 100 | 80 | 120 | 80 | 140 |
| பூசணி | 80 | 70 | 60 | 40 | 80 |
| புடோல் | 120 | 80 | 80 | 210 | 120 |
| வாழைக்காய் | 140 | 120 | 100 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 120 | 130 | 120 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 140 | 120 | 140 |
| பாகற்காய் | 200 | 160 | 160 | 190 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 100 | 60 | 120 |
| பயற்றங்காய் | 160 | 130 | 60 | 60 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 300 | 140 |
| பீற்றூட் | 100 | 80 | 80 | 60 | 120 |
| கறிமிளகாய் | 200 | 180 | 140 | 220 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 60 | 80 |
| போஞ்சி | 240 | 200 | 240 | 210 | 280 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 140 | 80 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 300 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 30 | 32 | 20-40 |
| இராசவள்ளி | 300 | 200 | 240 | 150 | — |
| வெங்காயப்பூ | 200 | 180 | 140 | 120 | 200 |
| முள்ளங்கி | 80 | 90 | 80 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 70 | 60 | 120 | — |

## அமைச்சர் கபீரின் இணைப்புச் செயலரை படுகொலை செய்ய முயன்ற விவகாரம்

# அடையாளம் காணப்பட்ட சஹ்ரான் குழுவின் ஆயுதப் பிரிவுத் தலைவன்



(மாவனெல்லை)

அமைச்சர் கபீர் ஹாசிமின் இணைப்புச் செயலர்களில் ஒருவரான மொஹம்மட் ராபிக் மொஹம்மட் தஸ்லீம் என்பவரை, மாவனெல்லை - தனாகம பகுதியிலுள்ள அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொலை செய்ய முயன்ற விவகாரத்தில், பிரதான சந்தேக நபராக சி.ஐ.டி.விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட, பயங்கரவாதி சஹ்ரான் குழுவின் ஆயுதப் பிரிவுப் பிரதானியாகக் கருதப்படும் மொஹம்மட் மில்ஹான் சாட்சியாளர்களால் அடையாளம் காணப்பட்டான்.

மொஹம்மட் தஸ்லீம் மீது கடந்த மார்ச் 9 ஆம் திகதி அதிகாலை உறக்கத்தில் இருந்த போது வீடு புகுந்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவர் படு காயமடைந்தார்.

இந் நிலையில் அது குறித்து சி.ஐ.டி.விசேட விசாரணைகளை ஆரம்பித்த நிலையில், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர் அக்கொலை முயற்சியின் மர்மங்கள் துலக்கப்பட்டன.

அதன்படி இந்தக் கொலை முயற்சி தொடர்பில், பிரதான சந்தேக நபர்களாக மூவரை அடையாளம் கண்ட சி.ஐ.டி., அந்த மூவரையும் நேற்று முன்தினம் மாவனெல்லை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்து அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தியது.


இதன்போது இந்தக் கொலை முயற்சி சம்பவத்துக்கு தலைமை வகித்ததாக அடையாளம் காணப்பட்ட பயங்கரவாதி சஹ்ரான் குழுவின் ஆயுதப் பிரிவுப் பிரதானியாகக் கருதப்படும் மொஹம்மட் மில்ஹான், சஹ்ரானின் சாரதியான கபூர் மாமா எனப்படும் மொஹம்மட் சரீப் ஆதம் லெப்பை ஆகிய இருவரை சாட்சியாளர்கள் அடையாள அணி வகுப்பில் அடையாளம் காட்டினர்.

இந் நிலையில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்ட குறித்த சம்பவம் தொடர்பிலான மூவரையும் மீளவும் மேலதிக விசாரணைகளுக்காக சி.ஐ.டி. தலைமையகமான நான்காம் மாடிக்கு அழைத்து வந்ததாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர உறுதி செய்தார்.

முன்னதாக தொடர் தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசேட விசாரணைகளின் போதே, அதுவரை தீர்க்கப்படாது இருந்த முக்கிய இரு குற்றங்களின் ஆதி அந்தம் கண்டறியப்பட்டது.

தற்கொலைத் தாக்குதல்களின் சூத்திரதாரியாகக் கருதப்படும் மொஹம்மட் சஹ்ரானின் வாகனச் சாரதியாக கடமையாற்றிய கபூர் மாமாவைக் கைது செய்து முன்னெடுத்த விசாரணைகளிலேயே இவை வெளிப்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மதத்திற்கு மதிப்பில்லாத கல்வியில் எந்தவிதப் பயனுமில்லை-முஸம்மில்



(கொழும்பு)

பாடசாலைக் கல்வியுடன், அவரவர் நம்பிக்கை கொள்ளும் மதச் செயற்பாடுகளுக்கும் மாணவர்கள் முக்கியத்துவம் வழங்க வேண்டும் என மேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்தார்.

கொட்டாவ வடக்கு தர்மபால வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தை மாணவர்களுக்குக் கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


மேல் மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் 900 இலட்சம் ரூபாய்கள் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த மூன்று மாடிக் கட்டடம் கடந்த 12 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக நாடுகளுடன், குறிப்பாக ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 95 சதவீத மாணவர்களுக்கு எழுத, வாசிக்கத் தெரிந்த ஒரு சிறிய நாடு இலங்கை. இலங்கை கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கியுள்ளது. இலவசக் கல்வி முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. சிறந்த கல்வியைக் கற்ற மாணவர்கள் எல்லாத் துறைகளிலும் திறமைகளை வெளிக்காட்டி வருகின்றனர். ஆகவே கல்வியின் முக்கியத்துவத்தை நாம் மாணவர்களுக்கு உணர்த்தியுள்ளோம். அதேவேளை கல்வியுடன், அவரவர் நம்பிக்கை கொள்ளும் மதச் செயற்பாடுகளுக்கும் மாணவர்கள் முக்கியத்துவம் வழங்க வேண்டும். மதத்திற்கு மதிப்பில்லாத கல்வியில் எந்தவிதப் பயனும் இல்லை எனவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் இசுர தேவப்பிரிய, மேல் மாகாண செயலாளர் பிரதீப் யசரத் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து சிறப்பித்தனர். (இ-7)

# தாமரைக் கோபுரத்துக்கான நினைவு முத்திரை அறிமுகம்



(கொழும்பு)

தெற்காசியாவின் மிக உயரமான கோபுரமான தாமரைக் கோபுர திறப்பு விழாவை முன்னிட்டு நினைவு முத்திரை ஒன்றை வெளியிட அரசாங்க தபால் திணைக்களம் தீர்மானித்தது.

நாளை 16 ஆம் திகதி, தாமரைக் கோபுர திறப்பு விழாவுடன் குறித்த இந்த நினைவு முத்திரையும் 45 ரூபாய் என தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

மேலும் இந்த தாமரைக் கோபுர திறப்பு விழா நிகழ்வை பார்ப்பதற்கு, மக்களும் ஆர்வமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யானைகளை வசியம் பண்ணக் கூடிய சிறந்த தலைவர் பிரதமர் ரணில்

## சஜித்திற்கு ரோஹித சவால்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்திலாவது வெற்றி பெற்றுக் காட்டுமாறு தான் சஜித் பிரேமதாஸவிற்கு சவால் விடுவதாக மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள யானைகளை வசியம் பண்ணக் கூடிய சிறந்த தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அவரிடம் யானை மந்திரம் இருப்பதாகவும் ரோஹித மேலும் தெரிவித்தார். (இ-7)


# ஜனாதிபதியின் வாகனத்தைப் பயன்படுத்தும் ஐ.தே.க.பிரதித் தலைவர் அமைச்சர் சஜித்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அதிகாரபூர்வ வாகனத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் அமைச்சர் சஜித் பிரேமதாஸ பயன்படுத்தி வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டது.

ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் நோக்கில் பிரசாரங்களில் ஈடுபட்டு வரும் சஜித் பிரேமதாஸவின் அதிகாரபூர்வ வாகனம் பழுதடைந்துள்ளது.

இதனால் அவர் ஆட்டோவில் ஜனாதிபதியின் இல்லத்திற்கு சென்று அங்கிருந்து ஜனாதிபதியின் வாகனத்தைப் பெற்றுக் கொண்டு தனது பயணங்களை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.



அண்மையில் நடைபெற்ற நிகழ்வுகளின் போது ஜனாதிபதியின் வாகனத்தில் ஜனாதிபதியுடனேயே அமைச்சர் சஜித் பயணம் செய்ததாகத் தெரியவருகிறது.

கடந்த அமைச்சரவைக் கூட்டம் மற்றும் நேற்று முன்தினம் நடைபெற்ற கலாசார அமைச்சின் நிகழ்வின் போதும் ஜனாதிபதியுடன் சஜித் வந்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியுடன் இணைந்து சஜித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அண்மையில் ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்தத்தகவல்களை ஜனாதிபதியோ அல்லது அமைச்சர் சஜித் தரப்போ இது வரையில் உறுதி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எழுக தமிழை அரசியலாய் பார்க்காமல் தமிழ் மக்களின் அடையாளமாக பாருங்கள்

## மன்.நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

(மன்னார்)

ஒட்டுமொத்த தமிழ் மக்களின் அடையாளமாக தமிழ் மக்களின் இருப்புக்கான பிரதிபலிப்பாக எழுக தமிழைப் பாருங்கள் என மன்னார் நகரசபை உறுப்பினர் ஜோசப் தர்மன் தெரிவித்துள்ளார். நாளை 16 ஆம் திகதி யாழ்பாணத்தில் இடம்பெறவுள்ள எழுக தமிழ் பற்றி கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாரும் அரசியல் இலாபம் கருதியோ மக்களை திசை திருப்பும் நோக்கிலோ எழுக தமிழ் நிகழ்வைப் பார்ப்பது எவ்விதத்திலும் பொருத்தமற்றது.

தொடர்சியாக எமது தமிழ் மக்களின் இருப்பை இவ்வாறான நிகழ்வுகள், போராட்டங்கள், புறக்கணிப்புக்கள் மாத்திரமே சர்வதேச ரீதியில் கொண்டு சேர்க்கின்றது.

எமக்குள் இருக்கும் பிரிவுகளை ஒரு கணம் மறந்து சர்வதேசத்திற்கு மாத்திரம் அல்ல எமது நாட்டு அரசியல் தலைமைகளுக்கும் எமது இருப்பை காட்ட வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே எமக்குள் ஆயிரம் ஆயிரம் மனக்கசப்புகள் இருக்கலாம். ஆனாலும் ஒட்டுமொத்த சமூகத்தின் பிரதிபலிப்பாக எமது கராங்கோர்த்து எழுக தமிழ் எழுச்சி நிகழ்வுக்கு ஒன்றுதிரண்டு ஒத்துழைப்பை வழங்குவோம்என மேலும் தெரிவித்தார். (9-285)



நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்துமாரியம்மன் ஆலயத்தின் மஹோற்சவ தேர்த்திருவிழா நேற்று முன்தினம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

(படம்:-மன்னார் செய்தியாளர்)

# வரலாறு எமக்கு சொல்லும் பாடத்திலேதான் நம் எதிர்காலம் உருவாகும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

நாங்கள் போர் கண்ட தேசம். நீங்கள் போருக்கு பின்னால் பிறந்த பிள்ளைகள். வரலாறு எமக்குச் சொல்லும் பாடத்திலே தான் நம் எதிர்காலம் உருவாகும் என்று நான் நம்புகின்றேன். வரலாறு எவ்வளவு கசப்பாக இருந்தாலும் இனி வருகின்ற எதிர்காலத்தை நாம் நன்மையாக அமைக்க வேண்டும் என ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் புதிய வகுப்பறைத்தொகுதி நேற்று முன்தினம் ஆளுநரால் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது. அந்த நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டு 1000 பாடசாலை திட்டத்தின் கீழ் வட்டக்கச்சி மத்திய கல்லூரியிலிருந்து பிரிக்கப்பட்டு இரண்டு தகரக்கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் புதிய வகுப்பறைத் தொகுதி ஆளுநரின் வேண்டுகோளுக்கிணாங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 3.6 மில்லியன் ரூபாய் நிதிப்பங்களிப்பில் இராணுவத்தின் பொறியியற் பிரிவின் மனித வலுவினால் நிர்மாணிக்கப்பட்டது. (9)

# பொன்னகர் பகுதியிலுள்ள குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தருமாறு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் அதிகளவான குடும்பங்கள் தொழில் வாய்ப்புக்கள் இன்றி பெரும் கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலர்பிரிவின் கீழுள்ள பொன்னகர் பகுதியில் சுமார் 621 குடும்பங்களைச்சேர்ந்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த பிரதேசத்தை அண்மித்து இரண்டு ஆடைத்தொழிற்சாலைகள் மற்றும் பழச்சாறு உற்பத்தி நிலையம் என்பன காணப்படுகின்ற போதும், மேற்படி மக்கள் தொகையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொழில் வாய்ப்பற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இதனால் கூடுதலான குடும்பங்கள் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் நுண்நிதிக்கடன் நிறுவனங்களிடமிருந்து கடன்களை அதிகூடிய வட்டிக்குப் பெற்று அதனை மீளச் செலுத்த முடியாமல் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றன என்றும் இதனால் பலர் தற்கொலை முயற்சிகளில் கூட ஈடுபட்டுள்ளனர் என்றும் பிரதேச பெண்கள் அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன. இவ்வாறு குறித்த பிரதேசத்தின் குறைந்தளவு நிலப்பரப்புக்களைக் கொண்ட காணிகளிலேயே இந்த மக்கள் குடியிருந்து வருகின்றனர்.

இதனால் சுயதொழில் நடவடிக்கை எதனையும் செய்ய முடியாத நிலையும் காணப்படுகின்றது என்றும் இவ்வாறான குடும்பங்கள் வருமானமற்ற குடும்பங்களாகக் காணப்படுவதுடன், அதிக தேவைகளை கொண்டவர்களாக காணப்படுவதனால் இவ்வாறு கடன்களைப்பெற்று பெரும் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (9-315)



# கிளி.முருகானந்தா ஆரம்ப வித்தியாலய புதிய வகுப்பறைத்தொகுதி கையளிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தின் புதிய வகுப்பறைத்தொகுதி ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனால் நேற்று முன்தினம் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட இப்பாடசாலையின் புதிய வகுப்பறைத் தொகுதி ஆளுநரின் வேண்டுகோளுக்கிணாங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் 5.85 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இராணுவத்தின் பொறியியற் பிரிவினால் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி, வலய கல்வி பணிப்பாளர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (9)

# நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலையின் அடிப்படை வசதிகளை நிவர்த்தி செய்யுமாறு பெற்றோர் வேண்டுகோள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலையின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை பாடசாலை மட்டத்தில் கூட்டமொன்றினை நடத்துவது எனத் தெரிவித்திருந்த நிலையிலும் இதுவரை கூட்டம் நடத்தப்படவில்லை என பெற்றோர்களினால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதி ஒருவரினால் நட்டாங்கண்டல் பாடசாலையில் அடிப்படை வசதிகள் குறைந்து காணப்படுவதாகவும் பாடசாலையின் வளங்களைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட துணுக்காய் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் தற்போது பாடசாலை விடுமுறைக் காலம் என்பதனால் ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது. பாடசாலைகள் தொடங்கிய பின்னர் பெற்றோர்களை ஒன்றிணைத்து கூட்டமொன்றினை நடத்தி பாடசாலையின் மேம்பாடு தொடர்பான முடிவுகளை எடுப்போம் எனத் தெரிவித்திருந்தார். பாடசாலை ஆரம்பித்து இரு வாரம் கடந்த நிலையிலும் கூட்டத்தினை நடத்துவதற்கு துணுக்காய் வலயத்தில் இருந்து அதிகாரிகள் ஒருவரும் பாடசாலைக்கு வருகை தரவில்லை எனவும் கூட்டங்களில் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள சிறப்பான பதில்களை அளிக்கும் அதிகாரிகள் செயற்பாட்டளவில் சிறப்பாக இயங்குவதில்லை என பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது பாடசாலை இடைநிலை பாடசாலை ஆகும். சிறாட்டிக்குளம், மூன்றுமுறிப்பு உட்பட நீண்ட தூரங்களில் இருந்து பாடசாலைக்கு மாணவர்கள் நடந்து வருகின்றனர். பாடசாலைக்குரிய வேலிகள் இல்லை. பாடசாலையின் வளங்களைப் பெருக்குவதற்கு துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையின் அதிகாரிகள் பெற்றோர்களாகிய எம்முடன் கலந்துரையாடல்களில் ஈடுபட வேண்டும் எனவும் நட்டாங்கண்டல் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (9-350)

# சுத்திகரிக்கப்பட்டுள்ள குடிநீர் திட்டம் மக்களிடம் கையளிப்பு

(பனிக்கன்குளம்)

இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் உயரிய வேலைத்திட்டத்தில் vision of love (uk) அனுசரணையுடன் 23 விஜயபாகு காலாட்படைப் பிரிவு உழைப்பில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமளங்குளம் கிராம மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டது. இலங்கை சத்திய சாயி சர்வ தேச நிறுவனத்தின் சுமார் 17 இலட்சம் ரூபா செலவில் கட்டுமான வேலைகள் அனைத்தும் இராணுவத்தினரால் செய்யப்பட்டு குறித்த குடிநீர்த் திட்டம் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



23 ஆவது விஜயபாகு காவல் படை பிரிவின் பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 64 படைப்பிரிவின் இராணுப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் கீர்த்தி கொஸ்தா, இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் தலைவர் விக்னராஜ் மனோ கரன், தேசிய சேவைகள் இணைப்பாளர் கு.சிவராம், தேசிய ஊடக இணைப்பாளர் ம.சஞ்சீவன், வவுனியா சத்தியசாயி நிறுவனத்தின் தலைவர் கு.சிவகுமாரன், தண்ணீரூற்று சத்தியசாயி நிறுவனத்தின் தலைவர் சி.நவரட்ணம், ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் இ. ரமேஷ் உள்ளிட்ட அரச அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் பலர் கலந்து கொண்டு குடிநீர்த் திட்டத்தை மக்களிடம் கையளித்தனர். (9-281)

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.
~ அப்துல்கலாம்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தியாகி திலீபனை நினைந்துருகுவோம்

தியாக தீபம் திலீபன் உண்ணா நோன்பை ஆரம்பித்த நாள் இன்று.

1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் நாள் தியாக தீபம் திலீபன் உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.

இன்று 32 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன.

காந்தி தேசத்திடம் நீதி கேட்டு காந்திய வழியில் தியாகி திலீபன் நடத்திய வேள்வி உலகில் எங்கும் காணமுடியாத அகிம்சைப் போராட்டத்தின் உச்சம் எனலாம்.

எனினும் அந்த அகிம்சையின் உச்சத்தை நினைப்பது கூட நம்மண்ணில் ஆகாது என்ற நிலைமையே இருக்கிறது எனில் எங்களின் அடிமைத்தனம் நீங்கிவிட்டது என்று எப்படிக் கூற முடியும்.

எங்களுக்கென்று ஒரு நாடு, எங்களுக் கென்று ஒரு தேசம் இருக்குமாயின் தியாகி திலீபனின் அகிம்சைப் போராட்டம் எங்கள் பாடப் புத்தகத்தில் பதிவிடப்பட்டிருக்கும்.

ஆனால் தியாகம் நடந்தது தமிழினத்தில், உண்ணாவிரதம் இருந்து உயிர்த்தியாகம் செய்தவர் ஒரு தமிழ் மகன்.

எனவே அவரின் தியாகத்தை வருங்கால சந்ததி அறிவதற்குக் கூட சந்தர்ப்பம் வழங்கப் படாத இறுக்கமான நிலைமையே நம் மண்ணில் உள்ளது.

இந்த உண்மையை நம் அரசியல்வாதிகள் கூட உணர்ந்திலர். பதவி நிலையில் இருக்கக் கூடிய தமிழ் அரசியல்வாதிகளைப் பொறுத்த வரை அவர்களுக்கு விடுதலைப் புலிகளின் வீரமும் தியாகமும் தேர்தல் பிரசாரங்களுக் கான வாசகங்களேயன்றி வேறில்லை.

எங்கள் நிலத்தில் நடந்த ஒரு பெரும் மண் மீட்புப் போராட்டத்தை, அதில் நம் இளைஞர்கள் செய்த உயிர்த் தியாகத்தை, தியாகி திலீபன் மேற்கொண்ட உண்ணாநோன்பு யாகத்தை எங்கள் இளம் சந்ததி அறிய வேண்டும். அவை வரலாறாக எங்களோடு இரண்டறக் கலக்க வேண்டும் என்ற எண்ணம் எங்கள் அரசியல்வாதிகளிடம் அறவே இல்லை.

அப்படியானதொரு எண்ணம் நம் அரசியல் தலைமைக்கு இருந்திருந்தால், அவர்கள் நிச்சயம் ஆட்சியாளர்களைக் காப்பாற்றுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் எம் இனத்துக்கு நீ தருவது என்ன என்று கேட்டிருப்பர்.

ஆனால் கிடைத்த சந்தர்ப்பங்கள் அனைத் தும் தம் சுய இலாபங்களுக்காக ஆக்கப் பட்டதேயன்றி தமிழினத்துக்கானதாக ஆக் கப்படவில்லை.

ஓ! தியாகி திலீபன் உண்ணாநோன்பிருந்து தன் இன்னுயிரைத் தியாகம் செய்த இந்த மண்ணில் இன்று நடப்பது என்ன என்பதை நினைக்கும்போது இதயம் கருகிக் கொள் கிறது.

அகிம்சை வழியிலும் ஆயுதப் போராட்ட வழியிலும் ஒரு பெரும் தியாகம் நடந்த மண் இது.

தமிழ் இனம் வாழ்வதற்காக, தமிழன் வாழ் வதற்காக தன்னுயிரை ஈகை செய்த மறவர் கள் வாழ்ந்த மண்ணில் இப்போது ஏதோவெல் லாம் நடக்கிறது.

இதை நாம் வெறுமனே பார்த்திருப்பது பாவச் செயலன்றோ. தமிழினம் வாழ்வதற்காக பசி இருந்து தன் உயிர் துறந்த பார்த்தீபன் செய்த தியாகத்தை நினைந்துருகுவோம். திலீ பனின் தியாகத்தை உலகம் பாடமாய் படிக்க வகை செய்வோம்.

## கொள்ளையர்களின் தாக்குதலில் தாயும், மகனும் படுகாயம்

### வடமராட்சி கிழக்கில் சம்பவம்

(கரணவாய்)

வீடு ஒன்றினுள் புகுந்த கொள்ளையர்களுடன் வீட்டின் உரிமையாளர்கள் மோதிக்கொண்டதில் தாயும் மகனும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளதாக பருத்தித் துறை பொலிஸார் தெரிவித் தனர்.

வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலை 1.30 மணி அளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள் ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. குடத்தனை மேற்கு பகு தியில் உள்ள வீடு ஒன்றில் இனந்தெரியாத நால்வர் அதிகாலை வேளை உள் நுழைந்தனர். இதனை அவதானித்த வீட்டிலிருந்த இளைஞர் கூக்குரல் இட்ட போது கொள்ளையர்கள் அவரை தாக்க முற்பட்ட னர்.

இதனால் கொள்ளையர் களுக்கும் வீட்டிலிருந்த இளை ஞருக்கும் இடையில் கைக லப்பு ஏற்பட்டது. இதற்கிடை யில் வீட்டின் உள் அறை யில் படுத்திருந்த தாயாரும் வெளியில் வந்துள்ளார்.

இதன்போது கொள் ளையர்களின் தாக்குதலில் 36 வயதுடைய ஜெயக்கு மார் ரஜீபன், மற்றும் 69 வயதுடைய தாயாரான ஜெயக குமார் பரமேஸ்வரி ஆகி யோர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளதாக பருத் தித்துறை பொலி ஸார் தெரி வித்தனர்.

கொள்ளையர்களுடன் இடம்பெற்ற கைகலப்பில் கொள்ளையர் ஒருவர் காய மடைந்ததாகவும் அவரை தூக்கிக் கொண்டு ஏனைய கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர். (ம.3,60)

## வீதித்தடைகளை அகற்றி போக்குவரத்தை இலகுபடுத்தவும்

### பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொன்னாலைச் சந்தி யில் கடற்படையினரால் அமைக்கப்பட்டுள்ள வீதித் தடைகளை அகற்றி பொது மக்களின் சுமுகமான போக் குவரத்திற்கு வழி ஏற்படுத் திக் கொடுக்க வேண்டுமென வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ந.பொன்ராசா கோரிக்கை முன்வைத் தார்.

வலி.மேற்கு பிரதேச சபையின்மாதாந்தப் பொதுக் கூட்டம் கடந்த வியாழக்கி ழமை இடம்பெற்றபோதே அவர் இக்கோரிக்கையை முன்வைத்தார்.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி குண்டு வெடிப்புக் குக்கு பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக எனக் கூறி வீதிச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட் டன. இதன்போது பொன் னாலைச் சந்தியில் காரை நகருக்குச் செல்லும் வீதியில் வீதித் தடைகள் ஏற்படுத் தப்பட்டு சோதனைகள் இடம் பெற்றன.

தற்போது, ஆனையி றவு, பூநகரி உட்பட பிரதான வீதிகளில் கூட சோதனைச் சாவடிகள் மற்றும் வீதித் தடைகள் அகற்றப்பட்ட நிலை யில், பொன்னாலைச் சந்தி யில் மட்டும் வீதித் தடைகள் அகற்றப்படவில்லை.

இதனால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கு கின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக தவிசாளர் த.நடனேந்திரன், காரைநகர் கடற்படை அதி காரியுடன் தொடர்பு கொண்ட போது உரிய வகையில் கடிதம் அனுப்புமாறும் அதன் பின்னர் தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியதாக தெரிவித்தார். (5-9)

## பரிசில் தின நிகழ்வு பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ்ற்ரன் கலலூரியில் நாளை 16 ஆம் திகதி நடைபெறவிருந்த பரி சில் தின நிகழ்வு தவிர்க்க முடி யாத காரணத்தால் நடைபெற மாட்டாது எனவும் பரிசில் தின திகதி பின்னர் அறிவிக்கப்படு மெனவும் அதிபர் ரி.மதிவத னன் அறிவித்தார். (5)

## ஜனாதிபதி பங்குபற்றுதலுடன் 'சதஹம் யாத்ரா' சமய உரை

(அக்குரஸ்ஸ)

அனைத்து பௌர்ணமி தினங்களிலும் இலங்கை யின் பிரதான விகாரை ஒன்றை மையமாகக்கொண்டு இடம்பெறும் "சதஹம் யாத்ரா" சமய உரைத் தொடரின் 54 ஆவது நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன வின் பங்குபற்றலுடன் மாத் தறை, அக்குரஸ்ஸ, கொட பிட்டிய ஜேத்தவன ரஜமகா விகாரையில் இடம்பெற்றது.

விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி, விகாராதிபதி சங்கைக்குரிய அகலகட ரத்தனபால தேரரைச் சந் தித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

சங்கைக்குரிய கம்பஹா மகாநாம தேரர் சமய உரை நிகழ்த்தினார். அந்த சமய உரையை ஜனாதிபதியும் செவிமடுத்தார்.

ஆளுநர் ஹேமால் குண சேகர, பாராளுமன்ற உறுப்பி னர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ உள்ளிட்ட அரசி யல் பிரதிநிதிகளும் இந் நிகழ்வில் கலந்து கொண் டனர். (இ-7)

## ஜனாதிபதித் தேர்தலை நினைத்து நாம் அஞ்சப் போவதில்லை

### சஜித்பிரேமதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தக் காரணத்திற்காக வும், ஜனாதிபதித் தேர் தலை நினைத்து நாம் அஞ் சப்போவதில்லை என அமைச்சர் சஜித் பிரேம தாஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் குறி த்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். சஜித்மேலும் கூறியுள்ளதாவது, இப் போது பல்வேறு தரப்பின ரும் தங்களது ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்து விட்டார்கள்.

நாம் மக்களின் ஆணை க்கு மதிப்பளிக்க வேண்டும். இதனை மீறி செயற்படுவோ மானால், அதுதான் ஜன நாயக விரோதமான செயற் பாடாக கருதப்படும். எனது தந்தை இந்த நாட்டுக்காக வும், கட்சிக்காகவும்தான் உயிர்த்தியாகம் செய்தார் என்பதை நான் இவ்வேளை யில் நினைவுக் கூறிக் கொள்கிறேன்.

மக்கள் எமக்கான புதிய பயணத்திற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என குறிப் பிட்டுள்ளார். (ஞ)

## தனியார் பேருந்தில் பணப்பை அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்ட நெரிசலில் தனியார் பேருந்தில் பயணித்த பயணி ஒருவரின் பணப்பை நேற்று மாலை அபகரிக்கப்பட்டுள்ளது.

யாழிலிருந்து சுன்னாகம் ஊடாக அளவெட்டி செல்லும் தனியார் பேருந்தில் பயணித்த பயணி ஒருவர் இறங்கும் போது அவரது பொக்கற்றிலிருந்து ஒரு தொகை பணமும், சில முக்கிய ஆவணங்களுடன் இருந்த பணப்பை திருட் டகளால் அபகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நடத்துனர் மற்றும் சாரதியிடம் தெரிவித்தும் அவர்கள் எந்தவித நடவடிக் கையும் எடுக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ஞ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதே சத்தில் அல்வாய், மாலு சந்தி, வியாபாரிமூலை, இன்பரு ட்டி, சுப்பர்மடம், நாவலடி, லங்கா பாடசாலை, பருத்தித் துறை நகரம், சாரையடி, கிராமக்கோடு, கல்லூரி வீதி, VM வீதி, தம்பசிட்டி, சாளம்பை, புனிதநகர், மாதனை, கற்கோவளம், வெளிக்கடு, துப்பளை, வறாத துப்பளை, திகிரி, கற்கோவ ளம் ஜஸ் தொழிற்சாலை, மந்திகை, மருதனார்மடம், றொட்டியாலடி, அம்பலவா ணர் வீதி, பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் - யாழ் நுண்கலைப்பீடம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- கதிரவனும், கேடயமுமாய் இருக்கும் கடவுள் நமக்கு அருளையும், மேன்மையையும் அளிப்பார்.
- மன ஒற்றுமை கொண்டிருங்கள், அமைதியுடன் வாழுங்கள், அப்போது அன்பும் அமைதியும் அளிக்கும் கடவுள் உங்களோடு இருப்பார்.
- கடவுள் எத்தனை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள். அவரிடம் அடைக்கலம் புகுவோர் பேறுபெற்றோர்.
- ஆண்டவர் மனிதருக்குத் தந்துள்ள ஆவி, ஒரு விளக்கு. அது அவர்களின் உள்ளத்தில் இருப்பதையெல்லாம் ஆய்ந்தறியும்.
- இறையாட்சி என்பது நாம் உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.
- ஞானமும் அறிவும் உனக்கு இனிமையாய் இருக்கும். அவற்றை நீ அடைந்தால் முடிவில் உனக்குப் பயன்கிடைக்கும். உன் நம்பிக்கை வீண்போகாது.
- தேனை மிகுதியாகச் சாப்பிடுவது எவ்வாறு நல்லது இல்லையோ, அதேபோல் புகழை மிகுதியாக விரும்புவதும் நல்லதல்ல.

# அரையிறுதிக்குள் நுழைந்தது ரில்கோ கொங்கியூரஸ் அணி



வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நடைபெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் ரில்கோ கொங்கியூரஸ் அணியை எதிர்த்து கிளியூர் கிங்ஸ் அணி மோதியது.

இவ் ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் 01:00 என்ற கோல் கணக்கில் ரில்கோ கொங்கியூரஸ் அணி முன்னிலை வகித்தது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் கிளியூர் கிங்ஸ் அணி ஒரு கோலை பெற்றுக் கொள்ள ஆட்டம் விறுவிறுப்பானது. எனினும் தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளாலும் வேறெந்த கோல்களும் பதிவு செய்ய முடியாது போக ஆட்டம் 01:01 என சம நிலையில் நிறைவு பெற்றது.

வெற்றி தோல்வியை தீர்மானிக்க வழங்கப்பட்ட சம நிலை தவிர்ப்பு உதையில் 07:06 என்ற கோல் கணக்கில் ரில்கோ கொங்கியூரஸ் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

ரில்கோ கொங்கியூரஸ் அணி சார்பாக இவான்ஸ் ஒரு கோலை பெற்று கொடுத்தார். (க)

## இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது கோல்டன் பிறதர்ஸ் அணி!



வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டு கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் கோல்டன் பிறதர்ஸ் அணியை எதிர்த்து 786 அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது கோல்டன் பிறதர்ஸ் அணி. (க)

## அரையிறுதிக்கு தகுதி பெற்று யங்ஸ்ரார் அணி அசத்தல்



வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டு கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து லயன்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பதிவு செய்தமையால் வெற்றி தோல்வியை தீர்மானிக்க வழங்கப்பட்ட சம நிலை தவிர்ப்பு உதையில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது யங்ஸ்ரார் அணி. (க)

## வென்றது நானாட்டான் டைமன்ஸ் ஸ்ரார்



மன்னார் மாவட்ட உதைப் பாந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எடிசன் வெற்றி கிண்ண சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நானாட்டான் டைமன் ஸ்டார் அணியை எதிர்த்து மரிய கொறற்றி அணி மோதியது.

இவ் ஆட்டத்தில் 03:00 என்ற கோல் கணக்கில் டைமன்ஸ் ஸ்ரார் அணி வெற்றி பெற்றது.

டைமன்ஸ்ரார் அணி சார்பாக சுலைக்சன் , யோன்தாஸ் , யெச்சோ ஆகியோர் தலா ஒரு கோலை பெற்று கொடுத்தனர். (க)


**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**


## முருங்கன் பொதுசன சேவைகள் அணிக்கு இலகு வெற்றி!



மன்னார் மாவட்ட உதைப் பாந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எடிசன் வெற்றி கிண்ண சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் சுண்டுக்குளி உதய தரிசனம் அணியை எதிர்த்து முருங்கன் பொதுசன சேவைகள் அணி மோதியது.

இவ் ஆட்டத்தில் 03:01 என்ற கோல் கணக்கில் முருங்கன் பொதுசன சேவைகள் அணி வெற்றி பெற்றது.

முருங்கன் பொதுசன சேவைகள் அணி சார்பாக வோல்ரன், சுயன், லூட்சன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்று கொடுத்தனர். (க)

## எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு...

யார் பிரம்மச்சாரி சிதாகாசானந்தா, சர்வதேச இந்துகுருமார்கள் ஒன்றியம் - வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ கலாநிதி து.கு.ஜெகதீஸ் வரக் குருக்கள், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், மட்டக்களப்பு மாவட்ட இந்து மத குருமார்கள் ஒன்றியம், மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகம், ஸ்ரீ மாமாங் கேஸ்வரர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்,

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம், வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம், யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம், கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், பளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கண்டாவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ்ப்பாண பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், ஊர்காவற்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், காரைநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வேலணை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வலிகாமம் தென் மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இச்சமாசங்களுக்குட்பட்ட 150 இற்கு மேற்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், யாழ் பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம், அச்சுவேலி சிற்றூர்திகள் சேவை சங்கம், வடமராட்சி சிற்றூர்திகள் சேவை சங்கம்,

வவுனியா மாவட்ட பொது அமைப்புகள், மன்னார் மாவட்ட பொது அமைப்புகள், சமூக விஞ்ஞான ஆய்வு மையம், வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழு, யாழ் - மாதகல் (787) சிற்றூர்திகள் சேவை சங்கம், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனம், மன்னார் சமூக வளர்ச்சியின் மாற்றம் அமைப்பு, வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட RDS மற்றும் WRDS சமாசம், யாழ் சிகை அலங்கரிப்பாளர் சங்கம், வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கம்,

தென்மராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கம், மன்னார் நகர வர்த்தக சங்கம், கிளிநொச்சி வர்த்தக சங்கம், வவுனியா வர்த்தக சங்கம், யாழ் வணிகர் கழகம், நெல்லியடி வர்த்தக சங்கம், பருத்தித்துறை வர்த்தக சங்கம், கொடிகாமம் வர்த்தக சங்கம், சாவகச்சேரி வர்த்தக சங்கம், சுன்னாகம் வர்த்தக சங்கம், சங்கானை வர்த்தக சங்கம், மானிப்பாய் வர்த்தக சங்கம், யாழ் மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், நெல்லியடி சந்தை வியாபாரிகள், திருநெல்வேலி சந்தை வியாபாரிகள், தெல்லிப்பளை ப.நோ. கூ.சங்கம்.

இவற்றுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கங்கள், மாதர் சங்கங்கள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், சமூக மட்ட அமைப்புகள், தொழிற்சங்கங்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் ஆகிய தரப்பினர் எழுக தமிழ்-2019 நிகழ்விற்கு தமது ஆதரவினை வழங்கியுள்ளார்கள். அத்துடன் தாய்த் தமிழ் நாட்டில் இருந்தும் புலம் பெயர் தேசங்களில் இருந்தும் முழுமையான ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக தமிழர் தாயகத்தில் இருந்து செயற்படுகின்ற தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டத்தையும், எழுக தமிழ் கோசங்களையும் ஏற்றுகொண்ட பெரும்பாலான கட்சிகளும் தமது பூரண ஆதரவினை தெரிவித்துள்ளன. (ம-3)

## கட்சி தாவிய...

துள்ளது.

எஸ்.பி.திசாநாயக்க, டிலான் பெரேரா, பௌசி, லக்ஷ்மன் யாப்பா, விஜித் விஜயமுனி சொய்சா உள்ளிட்டவர்களது உறுப்புரிமையே இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (ம-3)

## கள்ளமண் அள்...

நேற்று மாலை இந்த சம்பவம் இடம்பெற்றது,

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் கி.ரஜீவன் (வயது 20) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது, அரியாலை பகுதியில் டிரக்டர் வாகனத்தில் கள்ள மணல் ஏற்றி சென்ற போது விசேட அதிரடிப் படையினர் வாகனத்தை நிறுத்துமாறு கூறிய போது, டிரக்டர் வாகனத்தை நிறுத்தாமல் சென்ற போது, வாகனத்தின் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

சூட்டுக்கு இலக்காகிய இளைஞர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சூட்டு சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,101)

## யாழ்ப்பாண...

வுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தி.மு.கவின் துணைத் தலைவர் கனிமொழி, நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தியாவுக்கான பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதில் இலங்கை அக்கறை கொண்டிருப்பதாகவும் இதன் போது ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-3,10)

## வாகன ஒழுங்குகள் தொடர்பான விபரங்கள்...

மக்கள் மேற்படி ஒழுங்கை பின்பற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

**வாகன ஒழுங்குகள் தொடர்பான விபரங்கள்,**

மன்னார் - ராஜா 0767089338, வவுனியா - சிறிதரன் 0777908617, வடமராட்சி - சிவகுமார் 0774521392, வடமராட்சி கிழக்கு - காண்டீபன் 0761660414, வலிகாமம் - சரவணன் 0777243129, வலிகாமம் கிழக்கு - உதயகுமார் 0773024487, ஏனைய இடங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் - 0760025080.

**போக்குவரத்து சேவையின் நேரங்களும் வழித் தடங்களும்,**

பருத்தித் துறை பேருந்து நிலையத்தில் இருந்து (750 வழித்தடத்தில்), காலை 7.30 மணி, காலை 8.00 மணி, தொடர்பிற்கு - சிவகுமார் 0774521392, கொடிகாமம்-சாவகச்சேரி-கைதடி ஊடாக யாழ்ப்பாணம், காலை 7.30 மணி - காலை 8.00 மணி, தொடர்பிற்கு - 0776186554, மாவிட்டபுரம்-சுன்னாகம்-மருதனார்மடம்-கொக்குவில் ஊடாக யாழ்ப்பாணம் காலை 7.30 மணி, காலை 8.00 மணி, தொடர்பிற்கு - சரவணன் 0777243129, மூளாய்-சுழிபுரம்-சித்தன் கேணி-சங்கானை-மானிப்பாய் - யாழ்ப்பாணம்-காலை 7.30 மணி, தொடர்பிற்கு - சரவணன் 0777243129 மூளாய் - சுழிபுரம் - சித்தன் கேணி-சங்கானை-மானிப்பாய்-யாழ்ப்பாணம், காலை 7.30 மணி, தொடர்பிற்கு - சரவணன் 0777243129, கேவில்-ஆழியவளை-உடுத்துறை-வத்திராயன்-மருதங்கேணி குடியிருப்பு வீதிகள் ஊடாக புதுக்காடு-யாழ்ப்பாணம், காலை 6.00 மணி, தொடர்பிற்கு - காண்டீபன் 0761660414, மரு தங்கேணி சந்தி-செம்பியன்பற்று தெற்கு-செம்பியன்பற்று வடக்கு-மாமுனை வடக்கு-மாமுனை சந்தி-நாகர் கோவில் வடக்கு ஊடாக யாழ்ப்பாணம், காலை 6.30 மணி, தொடர்பிற்கு - காண்டீபன் 0761660414, அம்பன் மருத்துவ மனை-பொற்பதி-குடத்தனை வடக்கு-மணற்காடு-வல்லிபுரம்-யாழ்ப்பாணம், காலை 7.00 மணி, தொடர்பிற்கு காண்டீபன் - 0761660414, கேவில்-ஆழியவளை-உடுத்துறை-வத்திராயன்-மருதங்கேணி குடியிருப்பு வீதிகள் ஊடாக புதுக்காடு-யாழ்ப்பாணம் காலை 6.00 மணி, தொடர்பிற்கு - காண்டீபன் 0761660414 மருதங்கேணி சந்தி-செம்பியன்பற்று தெற்கு-செம்பியன்பற்று வடக்கு-மாமுனை வடக்கு-மாமுனை சந்தி - நாகர்கோவில் வடக்கு ஊடாக யாழ்ப்பாணம் காலை 6.30 மணி, தொடர்பிற்கு - காண்டீபன் 0761 660414, அம்பன் மருத்துவ மனை-பொற்பதி-குடத்தனை வடக்கு-மணற்காடு-வல்லிபுரம்-யாழ்ப்பாணம் - காலை 7.00 மணி, தொடர்பிற்கு காண்டீபன் - 0761660414. (ம-3)

## எழுக தமிழ்...

புதைக்கப்பட்ட தமிழர் உடல்களோடு உடலாக, அனைத்துலக மனித உரிமை கோட்பாடுகளையும், வரையறைகளையும், நியமங்களையும், நம்பிக்கையினையும் சேர்த்தே புதைக்கபட்டுவிட்டதை இன்றளவும் மெய்ப்பிப்பதாகவே தமிழினப் படுகொலைக்கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது.

போர் வலயத்தில் இருந்து தமிழ் மக்களை வெளியேற்ற வேண்டும் என்று குரல்கொடுத்த சர்வதேச நாடுகளும் மனித உரிமை அமைப்புகளும் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் நீதியைப் பெற்றுத் தருவதில் கிஞ்சித்தும் அக்கறை கொள்ளாது இருக்கின்றமையானது, தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பானது என்ற கூற்றின் வழியே தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட, இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கான நீதியானது அனைத்துலக நாடுகளின் அரசியல், பொருளாதார, இராஜதந்திர நலன்களை முன்னிறுத்தி தாமதிக்கப்பட்டு வருவதன் வெளிப்பாடேயாகும்.

தமிழர்கள் மீதான கட்டமைப்பு சார் இனவழிப்பை முழுவீச்சில் முன்னெடுத்து வரும் ஸ்ரீலங்கா அரசிற்கு மேற்கூறப்பட்ட புறநிலையானது மென்மேலும் ஊக்கத்தையே கொடுத்து வருகின்றது.

இவ் நச்சு வட்டத்திலிருந்து எமக்கான நீதியை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் தமிழர்களாகிய நாம் தேசமாக அணி திரண்டு ஒருமித்த குரலில் ஓங்கி ஒலிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதனை நன்குணர்ந்தே தமிழ் மக்கள் பேரவை 'எழுக தமிழ்-2019' எழுச்சிப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தது. தமிழ் மக்கள் தமது உரிமைக்கான போராட்டங்களை ஆரம்பித்திருந்த காலத்தைவிடவும், அதற்கான தேவையும், பரப்பும், நியாயமும் இன்று மிகப் பெரியதாகியுள்ளமையே இவ் எழுக தமிழுக்கான கதவினைத் திறந்துள்ளது.

தாயகத்தில் வெளிப்படும் எழுகையானது தமிழர் பெரும்பரப்பில் மேற்கொள்ளப்படும் நீதிக்கான முன்னெடுப்புகளுக்கு பலம்சேர்ப்பதாக அமையும் என்பதனை இவ் எழுக தமிழ் மீண்டும் எடுத்தியம்பியுள்ளது. அந்த வகையில் வடக்கு கிழக்கு தழுவி தேசமாக தமிழர்கள் அணிதிரளும் எழுக தமிழ்-2019 எழுச்சிப் பேரணியானது தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தினை அடுத்த கட்டத்திற்கு முன்னகர்த்திச் செல்லும் என்ற அடிப்படையில் மாபெரும் எழுச்சி பிரவாகமாக இவ் எழுக தமிழை மேற்கொள்வதற்கான பூரண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு தழுவியதாக தமிழர் தாயகமெங்கும் எழுக தமிழுக்கான ஆதரவு பல்வேறு தளங்களில் இருந்தும் வெளிப்படுத் தப்பட்டுள்ளது. அவ் ஆதரவுத்தளத்தினை ஒருங்கிணைத்து எழுக தமிழை பேரெழுச்சியுடன் முன்னெடுக்க ஏதுவாக வடக்கு கிழக்கு தழுவியதான பூரண கதவடைப்பிற்கு எம்மால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. (ம-3)

## இராணுவ...

ளைத் தளபதி ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற யாழ் மாவட்டத்தில் அபகரிக்கப்பட்ட தனியார் காணிகள் தொடர்பிலான கலந்தாலோசனைக் கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பலாலி மேற்கில் இராணுவத் தேவைகருதி பிடிக்கப்பட்ட தனியார் காணிகளை விடுவிப்பதற்கு தமக்கு ஆட்சேபனை இல்லையெனவும் ஆனால் தமது இராணுவத் தேவை கருதி முகாம் அமைப்பதற்கு பலாலி கிழக்குப் பக்கமாக உள்ள காணிகளைத் தேவைக்கேற்ப தரவேண்டும் எனக் கோரினார். (ம-3)

## கூட்டமைப்பு...

பில் முடிவெடுக்கும் முக்கிய சந்திப்பொன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை ஈடுபடவுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக, பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை அன்று சந்திப்பார்கள். (ம-3)

## எழுக தமிழை...

எழுக தமிழ் தொடர்பாக கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவிக்கையில், பல பொது அமைப்புக்களின் பேராதரவுடன் நடைபெறும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை கூட்டமைப்பு எதிர்க்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)


அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 731 வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.09.14
விசேட இலக்கம் 8153
வெற்றி இலக்கங்கள் 03 15 26 38 W

சீட்டிழுப்பு இல: 3235 வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.09.14
ரூ. 60,497,425/-
09 25 42 68 F 32

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1040
சீட்டிழுப்பு திகதி 14.09.2019 நீலம்
N 06 29 45 69

செவன
திகதி 2019/09/14
சீட்டிழுப்பு இலக்கம் 218
O 10 46 53 54

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 14-09-2019
சீட்டிழுப்பு இலக்கம் 974
O 6 6 2 2 2 6

சுபிரி வாசனா
திகதி 2019/09/14
சீட்டிழுப்பு இலக்கம் 1460
23 11 28 36 42 63 33

கொவிசெத
திகதி 2019.09.14
சீட்டிழுப்பு இலக்கம் 2240
E 27 36 54 63

# மக்கள் நலன்பேணும் அமைப்பு எழுக தமிழ் பேரணிக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமாகிய எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு மக்கள் நலன் பேணும் அமைப்பின் தலைவர் எஸ்.ஜெயபாலன் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நாளை நடைபெறும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு கட்சி பேதங்கள் கடந்து அனைவரும் ஒன்றுபட வேண்டும் எனவும் அது நம் தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் காலத்தின் கட்டாய தேவை என்றும் தெரிவித்துள்ளார். (ம-3)

# வவுனியா விபத்தில் ஒருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா திருநாவற்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கபட்டுள்ளார்.

குறித்த விபத்து தொடர்பாக தெரிய வருகையில்,

வவுனியா நகர் பகுதியிலிருந்து தாண்டிக்குளம் நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் திருநாவற்குளம் ஐயனார் கோவிலுக்கு அருகாமையில் சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதிலேயே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாய மடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக வவுனியா போக்கு வரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-299)

### தேர்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்த

# தேர்தல் ஆணைக்குழுவுக்கு இன்று முதல் அதிகாரம்

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு இன்று முதல் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது.

குறித்த அதிகாரத்தின் பிரகாரம், ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக் கோரல், தேர்தல் நடத்துதல், தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் என்பன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கவுள்ளது

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வருகின்ற நிலையில் அதற்கான ஏற்பாடுகளை விரைந்து மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு தற்போது ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் அதற்கு வலு சேர்க்கும் வகையில், தேர்தல் ஆணைக்குழுவுக்கு இந்த அதிகாரம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • கொடிகாமம் • வல்வெட்டித்துறை • பருத்தித்துறை • மானிப்பாய் • திருகோணமலை • சாவகச்சேரி • சுன்னாகம் • மருதங்கேணி
0768226240
V2 TRAVELS

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (E-7595)
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

வேலையாட்கள் தேவை
கொத்து போடுபவர் தேவை
தங்குமிட வசதி உண்டு. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். வெளி மாவட்டத்தவர்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு (200)
0772473676

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

தவறவிடப்பட்டுள்ளது
அமிர்தலிங்கம் ருஜாந்தன் (NIC-NO.850273987V) என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் தொழில் ஆள் அடையாள அட்டை (இலங்கை போக்குவரத்து சபை) என்பன தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் 0776988996 இலக்கத்துடன் தொடர்பினை மேற்கொள்ளவும்.
கண்டெடுத்தவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (198)

துரித தபால்கள் பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி. 0777 554 528 (C-7109)

சொர்க்கம் திருமண சேவை
கனடாவில் வாழும் 28 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம், கனடாவில் வாழும் 40 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம், கனடாவில் வாழும் 30 வயதுடைய (N.R.C) மதத்தைச் சேர்ந்த பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறோம். (C-7622)
தொடர்புகளுக்கு:- 0014166661855, 0014377728129
Website:www.sorkhammatrimony.com

# மக்களின் மனநிலையை வெளிப்படுத்த எழுக தமிழ் எழுச்சி அவசியம்

## கலாநிதி ஆறு.திருமுருகன் கருத்து



(யாழ்ப்பாணம்)

எழுக தமிழ் எழுச்சிப் பேரணி இன்று அவசியமானது. இந்தப் பேரணியில் கட்சி பேதம் தவிர்த்து அனைத்து மக்களும் ஒன்றிணைய வேண்டும் என தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அழைப்பு விடுத்துள்ளார்.

நாளை 16ம் திகதி நடைபெறவுள்ள எழுக தமிழ் எழுச்சிப் பேரணி தொடர்பில் அவர் அனுப்பி வைத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் உரிமைகள் ஏதும் நியாயமாக, நிரந்தரமாக வழங்கப்படவில்லை. தமிழ் மக்களின் நிலங்களைத் திட்டமிட்டு அபகரிக்கும் சூழல் வேகமாகத் தொடர்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்போம் என்று தலையிட்ட நாடுகள் எதுவும் சீராகத் தீர்க்கவில்லை.

இந்நிலையில் மக்களின் மனநிலையை வெளிப்படுத்துவதற்கு இத்தகைய நிகழ்ச்சிகள் அவசியமாகும். கட்சி பேதம் தவிர்த்து மக்கள் நலனுக்காக, மக்களின் பிரச்சினைகளை உலகுக்கு வெளிக்காட்ட வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

அவ்வகையில் எவ்வித சுயலாபமுமின்றி தமிழ் மக்களுக்காக அனைவரும் ஒன்றுபட்டு எழுக தமிழ் பேரணி ஊடாக எங்கள் நிலையை வெளிக்காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இந்நிகழ்ச்சி எந்தவொரு தனிமனிதனையோ கட்சியையோ முதன்மைப்படுத்தாது, தமிழ் மக்களின் அவலங்களை வெளியுலகுக்கு எடுத்துக் காட்டும் வகையில் அமைய வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆட்சிக்கு வந்தவர்கள் தொடர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றிய வண்ணமே உள்ளனர் என்பதை இப் போராட்டத்தின் வாயிலாக தெளிவுபடுத்த வேண்டும். இப்போராட்டத்தின் பின் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு உன்னதமான நோக்கத்தை நிறைவேற்றப் பாடுபடவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். எனவே மக்கள் போராட்டமாகிய எழுக தமிழ் சிறப்பாக நடைபெற இறைவனை வேண்டுகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஞா)

# எந்தவொரு முன்னேற்றமும் சர்வாதிகாரத்தால் கிடைக்காது

## பிரதமர் ரணில்



சர்வாதிகாரத்தால் எந்த முன்னேற்றமும் கிடைக்கப் போவதில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், 'நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாதவர்களே சர்வாதிகார பாதையை தேர்ந்தெடுப்பார்கள்.

சர்வாதிகாரத்தால் எந்த முன்னேற்றமும் கிடைக்க போவதில்லை. சர்வாதிகாரத்தால் எதனையும் சாதிக்கலாம் என்று ஒருசிலர் நம்புகிறார்கள்.

அதற்கு மாறாக பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இல்லாவிட்டாலும் ஜனநாயகத்தால் எதனையும் வெற்றி கொள்ள முடியும் என்பதை கடந்த நான்கரை வருடங்களில் நிரூபித்து காட்டியுள்ளோம்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையின்றி பல்வேறு பணிகளை எம்மால் முன்னெடுக்க முடியுமாக இருந்தால் பெரும்பான்மை கிடைத்தால் இதனைவிட பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும்.

வெள்ளை வான் கலாசாரத்தினூடாக ஜனநாயக இலக்குகளை அடைய முடியாது. சகலருடனும் ஒற்றுமையாக செயற்படுவதினூடாகவே இலக்குகளை அடைந்து கொள்ள முடியும்.

கட்டட நிர்மாணங்களை மேற்கொண்டது போன்று மறுபுறம் ஜனநாயகத்தையும் படிப்படியாக கட்டியெழுப்பியுள்ளோம். கடந்த அரசாங்கத்தால் இந்த அரசாங்கத்துக்கு அதிகளவான கடன் சுமையையே கொடுக்க முடிந்தது.

சுமைகளின் மத்தியில் ஆட்சியை பொறுப்பேற்று கொண்டிருந்தாலும் சவால்களை பொருட்படுத்தாமல் சிறந்த வெற்றி இலக்குகளை அடைந்து கொள்ள கூடியதாக இருக்கிறது' எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

Physics Classes
Day Class R.Raakulan
Mechanics - இயக்கவியல்
ஆரம்பம்: 16.09.2019 நேரம் 12.00 PM - 2.00 PM
கடந்த கால வினாக்கள் மட்டுமன்றி 500க்கு மேற்பட்ட மாதிரி வினாக்களும் அவற்றுக்குரிய தகுந்த விளக்கங்கள். புதிதாக இணைய விரும்பும் மாணவர்களுக்கு இம்மாத கட்டணம் ரூபா 500 மட்டும். (192)
The Science Corner 0765456118
Clock Tower Lane

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

*Registered as a Newspaper in Srilanka*

விலை : 30.00

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 234

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 15.09.2019 தொலைபேசி : 021 222 3378

# செப். 16

# எழுக தமிழ்

## எழுச்சிப் பேரணி



- தமிழர் தாயகமெங்கும் பூரண கதவடைப்பு
- பாடசாலைகள் முற்றாக முடக்கம்
- தமிழர்தம் உரிமை கோரி போக்குவரத்து ஸ்தம்பிதம்
- நிலத்திலும் வெளிநாடுகளிலும் பேராதரவு

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். சிறந்த நாடக எழுத்தாளர் அராலியூர் சுந்தரம்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார். வானொலி நாடகங்களை எழுதிய பெருமை அவரைச் சாரும். அவரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

அதுசரி, என்ரப்பிறைஸ் சிறிலங்கா கண்காட்சி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடந்தது. இதனால எங்கட மக்களுக்கு ஏதேனும் நன்மை இருக்குதோ, விதானையார் விசுவலிங்கம் கேள்வி எழுப்பினார்.

விதானையார் விசுவலிங்கத்தின் தொடக்கமே ஆலடியை சூடாக்கியது. களியாட்டம், கேளிகை, பாட்டுக் கச்சேரி தானே இப்ப எங்களுக்குத் தேவையாக இருக்குது. விதானையாரின் கேள்விக்கு கங்காணி கார்த்திகேயன் பதிலளித்தார்.

**சாத்திரியார்:** நானும் என்ரப்பிறைஸ் சிறிலங்கா கண்காட்சி பார்க்கப் போனனான். எங்கட மக்களுக்கு அதால எந்த நன்மையும் இருக்கிறதாகத் தெரியவில்லை. மாறாக எங்கட இளம் சமூகத்தை தங்கட பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேணும் எண்டு நினைத்து களியாட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்ததைப் பார்க்க முடிந்தது.

**மூப்பர்:** அதுமட்டுமல்ல என்ரப்பிறைஸ் சிறிலங்கா என்ற திட்டத்தின் கீழ் மிகக்குறைந்த வட்டியில முதலீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டன.

ஆனால் எங்கட வடமாகாணத்து மக்களுக்கு அந்தக் கடன்களை வழங்க எங்கட வங்கிகள் முன்வரவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக இருக்குது.

**சிறாப்பர்:** அதென்டால் உண்மைதான். மிகக் குறைந்த வட்டியில கடன் பெறக்கூடியதாக இருந்தாலும் எங்கட வடமாகாணத்தில இருக்கிற வங்கிகள் அதனை மறைப்புச் செய்து உச்ச வட்டியில கடன் வழங்கி கடனைப் பெற்றுக்கொண்டவரை கந்தறுக்கிற வேலையில ஈடுபட்டு வருவதாகப் பலரும் குற்றம் சாட்டுகினம்.

**விதானையார்:** உயர்ந்த வட்டிக்குக் கடன் கொடுத்து வடபகுதி தமிழற்ற பணத்தை உறிஞ்சி தென்பகுதி வங்கிகளுக்கு அனுப்பி வைத்தால் நல்ல பெயரும் புறமோசனும் கிடைக்குமல்லோ.

எங்கட தமிழினம் எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை என்பது எங்கட மண்ணில இயங்குகிற பெரும்பாலான வங்கிகளின்ர நிலைப்பாடு.

**பண்டிதர்:** யாழ்ப்பாணம் தங்க பூமி எண்டல்லோ கொழும்பில கூறுகினம்.

**கங்காணி:** ஏன் பண்டிதர் அப்படிச் சொல்லுகினம்.

**பண்டிதர்:** அடகு நகையால நிதி நிறுவனங்களில தங்கப்பவுண் நிறைஞ்சு கிடக்குது. அதால தான் யாழ்ப்பாணம் தங்கபூமி எண்டு சொல்லுகினம்.

**கங்காணி:** அடகு வைத்த நகைகளில ஐம்பது வீதமான நகைகள் மீளப் பெறப்படவில்லை என்பது தான் பலரதும் கருத்து.

**வாத்தியார்:** கடவுளே எங்கட சனங்கள் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி சிறுகச் சிறுகச் சேர்த்த தங்க நகையெல்லாம் ஏலத்தில விற்கப்படுவதைப் பார்க்க வயிறு பத்தி எரியுது.

**சாத்திரியார்:** நீங்கள் இதைச் சொல்லுறியள் யாழ்ப்பாணத்தில இயங்குகிற ஒரு நிதி நிறுவனம் தங்கநகை அடகுக்கு ஒரு விளம்பரம் செய்தது. அந்த விளம்பரம் நல்லூர்க் கந்தனின் மஹோற்சவ காலத்தில் செய்யப்பட்டதுடன் எல்லாக் குறையும் தீர்க்கும் நல்லூர் வேலா என்று எழுதிவிட்டு உங்கள் தங்க நகைகளை அதிக பணத்திற்கு அடகு வைக்க நாடுங்கள் என்று தங்கட நிறுவனத்தின் பெயரைப் பொறித்திருந்தது.

**பண்டிதர்:** அது சரி தானே, நிதி நிறுவனங்களின்ர குறைகளைத் தீர்க்கத் தானே தங்க நகைகள் வந்து குவியுது. அடகு வைத்த ஏழைகளின்ர குறைகளைத் தீர்க்கிறது யார்? என்பது தான் தெரியாமல் உள்ளது.

**வாத்தியார்:** சரி...சரி... இனிமேலாவது எங்கட வடபுலத்து வங்கிகள் குறைந்த வட்டியில இருக்கிற கடன்களை எங்கட மக்களுக்கு வழங்கி எங்கட மண்ணில முதலீட்டு முயற்சிகளை ஊக்குவிக்க வேணும்.

என்ரப்பிறைஸ் சிறிலங்காவில எங்கட வடபுலத்தில ஆரம்பிக்கப்பட்ட புதிய முதலீடுகள் எதனையும் காண முடியவில்லை. எனவே எங்கட வங்கிகள் ஒரு முடிவுக்கு வந்தால் மட்டும் தான் எங்கட மக்களுக்கு விமோசனம் கிடைக்கும். இது விடயத்தில அரச அமைப்புகள் கடுமையான மேற்பார்வை செய்ய வேணும்.

**விதானையார்:** இது விடயத்தில அரச அமைப்புகள் கடும் மேற்பார்வை செய்யிறது எங்க நடக்கப் போகுது.

அரச அமைப்புகளைப் பொறுத்தவரை பௌத்த சிங்கள அடையாளங்களை வடபகுதியில ஏற்படுத்துறது தான் அவர்களின் முதல் வேலை.

அண்மையில யாழ்ப்பாண மாநகர சபைக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்ட போது தனித்து பிரித்தோதல் மட்டும் தான் நடந்ததாம். இந்து, கத்தோலிக்க, இஸ்லாமிய மதத் தலைவர்கள் இருந்த போதிலும் அடிக்கல் நாட்டுகின்ற போது அவர்கள் மந்திரஉச்சாடனம் செய்யவோ, தங்கட மத வழிபாட்டை மேற்கொள்ளவோ அனுமதி வழங்கப்படவில்லையாம்.

**பண்டிதர்:** என்ர நல்லூர் முருகா! யாழ்ப்பாணத்தை நல்லூர் முருகன் ஆலயத்தைப் போல அழகுபடுத்துவன் என்று பிரதமர் ரணில் கூறினவரல்லோ. அப்படி இருந்தும் யாழ்ப்பாண மண்ணில, யாழ். மாநகர சபைக்கான புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுகிற போது பிரித்தோதல் மட்டும் தான் நடந்தது என்றால் எங்க சமய சமத்துவம் வரப்போகுது.

**வாத்தியார்:** சரி சரி நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடக்குது. இதில நாங்கள் எல்லாரும் கலந்து கொள்ள வேணும்.

**மூப்பர்:** அதுசரி வாத்தியார் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி எந்த வழியாக முற்றவெளிக்குச் செல்லும்.

**வாத்தியார்:** நாளை திங்கட்கிழமை 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் இருந்தும் நல்லூர் முருகன் ஆலய முன்றலில் இருந்தும் இரண்டு பேரணிகள் ஆரம்பமாகி யாழ்ப்பாணம் கந்தர்மடம் சந்தியில இரண்டு பேரணிகளும் ஒன்றாகி பலாலி வீதி, நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி கே.கே.எஸ்.வீதி வழியாக முற்றவெளிக்குச் சென்றடையும்.

நாங்களும் அந்தப் பேரணியில பங்கேற்று எங்கட ஒற்றுமையை உறுதிப்படுத்த வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதற்குத் தனது ஆதரவும் இருப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## அடிக்கல் நாட்டிய நிகழ்வின் போது பிரித்தோதல் மட்டும்தான் நடந்தது

ஆதித்தன்

# எழுக தமிழ்! எழுக தமிழ்!




மக்கள் ஒன்றுபட்டால் செய்ய முடியாதது எதுவுமில்லை என்பதே உண்மை. மக்களின் ஒற்றுமைதான் பல சாதனைகளைத் தீர்மானிக்கின்றன.

அதிலும் குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றுபட்டு எழுச்சிகொண்டபோது அவர்களின் விடுதலை என்பது தடுக்க முடியாததாயிற்று.

இனம், மொழி, நிறம் என்ற பேதமைகளை உடைத்தெறிவதற்கும் ஆளும் வர்க்கத்தின் எதேச்சதிகாரத்தைச் சிதைக்கவும் ஒற்றுமை என்பதுதான் ஒரேவழி என்பதை இந்த உலகம் மிகத் தெளிவாக உணர்ந்துள்ளது.

இந்தத் தத்துவம் எமக்கும் பொதுவானது. இதிலிருந்து நாம் விலகி நிற்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எங்கள் தமிழினம் ஏமாற்றப்படுவதும் அடிமைப் படுத்தப்படுவதும் தவிர்க்க முடியாததாகி விடும்.

ஆகையால் ஒற்றுமை என்ற ஒரே பலத்தினூடாக எங்கள் இனம் தனக்கான விடுதலையைப் பெற்றாக வேண்டும். இங்கு ஒற்றுமை என்பது இலகுவில் எட்டப்படக் கூடிய விடயமன்று.

ஒற்றுமையை ஏற்படுத்துவதென்பதற்குள் விட்டுக்கொடுப்புக்கள், சகிப்புத் தன்மைகள், புரிந்துணர்வுகள், நிதானமான சிந்தனைகள், ஆய்வுகள் எனப் பல விடயங்கள் அடங்கியுள்ளன.

இவை ஒவ்வொன்றிலும் ஒத்த இயல்பை ஏற்படுத்துகின்ற போது தான் ஒற்றுமை என்பதை எட்ட முடியும். எனினும் ஒற்றுமையைச் சீர்குலைத்து அதற்குள் சுய இலாபம் அடைகின்ற தரப்புகள் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்க அரும்பாடுபடும் என்பதையும் நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

தவிர, ஒற்றுமை என்பது சந்தேகம் கடந்த பொதுவான நியமங்களின் கீழ் ஏற்படுத்தப்படுவதே சாத்தியமாகும். அதாவது ஏற்றுக்கொள்ளக்கூடிய கொள்கைகள், கோட்பாடுகள், இலக்குகள், தீர்வுத் திட்டங்கள் என்ற அடிப்படையில் ஒரு பொது வெளியில் உடன்பட்டுக் கொள்வதையே நாம் யதார்த்தமான ஒற்றுமை என்று கூறமுடியும்.

இதைவிடுத்து கற்பனைக்கும் சாத்தியமாகாத ஒற்றுமையை அமுலாக்குவது முடியாத காரியம். அதேநேரம் ஒற்றுமைக்கு எதிரான கோசங்களும் இருக்கவே செய்யும். இவை தவிர்க்க முடியாதவை.

உண்மை என்ற ஒன்று இருக்கிறது என்றால் அதன் மறுபக்கமாய் பொய் என்ற எதிர்மறையின் உயிர்ப்பும் இருந்து கொண்டே இருக்கும். தர்மத்தை நிலைநாட்டுதல் என்பதன் பொருள் அதர்மம் உயிர்வாழ்கிறது என்பதுதான்.

இந்த வகையில்தான் ஒற்றுமைக்கும் எதிரி உண்டு. அது மக்கள் சமூகத்திற்குள்ளேயே மறைந்தும் வெளிப்படையாகவும் உள்ளது.

ஆகையால் எல்லோரும் ஏற்றுக் கொள்கின்ற ஒற்றுமை என்ற பதம் இலகுவில் அங்கீகரிக்கப் படவோ அல்லது அமுலாக்கப்படவோ கூடியதல்ல என்ற உண்மையை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

இவ்வாறானதோர் சூழ்நிலையில் தான் தமிழ் மக்கள் பேரவை ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் ஒற்றுமைப்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

எனினும் சுயநலம் கொண்டவர்களின் விசமப் பிரசாரங்களுக்குள் ஒற்றுமையைக் கட்டிக் காப்பாற்றிக் கரைசேர்க்கின்ற பெரும் பணியில் தமிழ் மக்கள் பேரவையும் அதன் அங்கமாக இருக்கின்ற பொது அமைப்புகளும் புத்திஜீவிகளும் கடும் பிரயத்தனம் செய்கின்றனர்.

தமிழ்மக்கள் தங்கள் உரிமை சார் விடயத்தில் ஒற்றுமையாக ஒன்றுபட்டு குரல் கொடுப்பதனூடாக சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை இலங்கை அரசுக்கு ஏற்படுத்த முடியும் என்ற அடிப்படையில் நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை மாபெரும் எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது.

தமிழர் தாயகம் தழுவியதாக யாழ்ப்பாண மண்ணில் நடைபெறுகின்ற எழுக தமிழ் எழுச்சிப் பேரணியானது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களதும் எழுச்சியாக பிரவாகிக்க வேண்டும் என்பது தான் தமிழ் மக்கள் பேரவை உள்ளிட்ட இனத்தின் மீது கரிசனை கொண்ட அத்தனை அமைப்புக்களினதும் பெருவிருப்பமாகும்.

இங்கு தமிழ் மக்கள் பேரவையானது கட்சி பேதங்களற்று அனைவரையும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்துள்ளது.

அதேநேரம் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி காலத்தின் கட்டாய தேவை என்பதை மதத் தலைவர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழக சமூகம், தொழிற்சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம், கல்விசார் அமைப்புகள் என அனைத்து அமைப்புகளும் தமது பேராதரவைத் தெரிவித்துள்ளன.

இவற்றுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடைபெறுகின்ற சமநேரத்தில் எங்கள் புலம்பெயர் உறவுகள் தாம் வாழ்கின்ற நாடுகளில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

கூடவே தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள், தமிழின ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றுசேர்ந்து எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை நடத்தவுள்ளனர்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை எழுக தமிழ் எழுச்சிப் பேரணி சர்வதேசம் முழுமையிலும் எழுகை பெறும். இதனூடு ஈழத்தமிழினத்தின் பக்கம் சர்வதேச சமூகம் நிச்சயம் தன் பார்வையைத் திருப்பும் என்பது நிறுதிட்டமான உண்மை.

எது எவ்வாறாயினும் எம் தமிழ் உறவுகள் ஒன்றுபட்டு இலட்சக் கணக்கில் திரண்டெழும்போது எங்களின் பலம், எங்களின் உறுதிப்பாடு வலிமை பெறும்.

ஆகையால் அனைத்துப் பேதங்களும் கடந்து ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஓரணியாக பேரணியில் இணைந்து கொள்ள வேண்டும். இதுவே எம் தமிழ் உறவுகள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

திருநீலகண்டன்

# ஆதியும் அந்தமும்

இந்த உலகத்தில் பல சமூகங்கள், பல மொழிகள் கலாசாரங்கள் காணப்படுகின்றன. அவற்றை நாம் படைக்கவில்லை. மொழி எங்கிருந்து வந்தது நான் தான் கண்டுபிடித்தேன் என்று யாரும் கூறிவிடமுடியாது.

ஆகாசத்தில் சூட்சும வடிவில் இருப்பதுதான் ஒலி. அந்த ஒலிதான் மொழியானது. ஆகாசத்தில் இருந்த ஒலிக்கு வரி வடிவம் கொடுத்துத்தான் மொழி ஏற்பட்டது. "சப்த குணம் ஆகாச" என்பது சாஸ்திரம். ஆகாசம் இல்லையென்றால் சப்தம் வெளியில் கேட்காது. நான்கு பக்கங்களிலும் கண்ணாடித் தடுப்புக்கள் வைத்து அவற்றின் நடுவில் இருந்து நாம் பேசினால் அது யாருக்கும் கேட்காது. காரணம் கண்ணாடித்தடுப்புக்கள் ஆகாசத்தை அதாவது இடைவெளியைத் தடுத்த காரணத்தால் சப்தம் வெளியேற முடியாது.

ஆகாசம் என்பது அத்தனை பிரபஞ்சத்திற்கும் சேர்த்து ஒன்று தான் இருக்கின்றது. அந்த ஆகாசத்துக்கு நடுவில்தான் நாம் வாழ்கிறோம். நாம் உட்கார்ந்து இருப்பது, நடப்பது எல்லாம் ஆகாசத்தில்தான். நாம் வாழும் வீடும் கூட ஆகாசத்தில்தான் இருக்கிறது. ஆக எல்லோருமே அந்தரத்தில் தான் இருக்கிறோம். ஆகாசம் இல்லாத இடமே இல்லை. ஆகாசத்தில் தான் ஒலி ஆரம்பம்.

சப்தம்தேன்றியது எப்படி என்பது குறித்து புராணக்



கதை ஒன்று உண்டு. சிவபெருமான் கையில் ஒலி எழுப்பக் கூடிய உடுக்கை என்ற ஒரு கருவி உண்டு. அதை அசைக்கும் போது அந்த உடுக்கையில் நூலால் கட்டப்பட்டிருக்கும் முண்டுகள் உடுக்கையின் இரண்டு பக்கங்களிலும் தட்டி ஒலி எழுப்பும். இந்தப் பிரபஞ்சம் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் நடராஜர் நாட்டியம் ஆடிக் கொண்டே இருக்கிறார். அவர் தனது நடனத்தை நிறுத்தி விட்டால் இந்தப் பிரபஞ்சம் இயங்காது. பிரபஞ்சத்தை இரட்சிப்பதற்காகத்தான் நடராஜர் நாட்டியமாடுகிறார். ஆகாசம் பஞ்சபூதத்தில் ஒன்று. இந்த சிருஷ்டி எப்போ ஆரம்பிக்கப்பட்டது என்பது எமக்கு தெரியாது. ஆனால் ஆத்மாவில் இருந்து ஆகாசம் வெளிப்பட்டது. ஆகாசத்திலிருந்து வாயு வெளிப்பட்டது. வாயுவில் இருந்து நெருப்பும் நெருப்பிலிருந்து நீரும் நீரில் இருந்து நிலமும் நிலத்திலிருந்து பயிரினமும் ப்யிரினங்களை உண்டு மனிதர்கள் வெளிப்பட்டனர். இந்த சிருஷ்டிக்கு முற்றுப் புள்ளி வைப்து இயலாத காரியம். சங்கிலி வளையம் போல் தொடர்கின்றது. அதேபோல ஆத்மாவிற்கு காலத்தை வரையறுத்துச் சொல்ல முடியாது. ஒரு மனிதனின் ஆயுளை வைத்து அவனுடைய காலத்தை நிர்ணயிக்கிறோமே தவிர பிரபஞ்சத்தின் காலத்தை அல்ல. இந்த பிரபஞ்சத்தில் அநேக கோடி பிரமாண்டங்கள் இருக்கின்றன. நாம் இருக்கக் கூடிய இந்தப் பூமி தான் பிரபஞ்சம் என்று கற்பனை செய்து கொண்டிருக்கிறோம். பிரபஞ்சத்தினுடைய சிருஷ்டிக்கு முன் தோன்றிய் வேதத்தின் தத்துவம் இந்த ஊர், அந்த ஊர், என் தேசம், பிறர் தேசம் எனச் சொல்லாமல் இந்த நிலப்பரப்பு முழுவதையும் சேர்த்து பிருத்வி என்று சொன்னால் எங்கெல்லாம் உயிரினங்கள் வாழ்கின்றதோ அத்தனை இடங்களையும் சேர்த்து சொல் என்கிறது வேதம். ஒன்பது கிரகங்கள் என்று சொல்வது நம் தேசத்திற்கு மட்டுமல்ல இந்தப் பிரபஞ்சம் முழுவதற்கும் தானே.

இன்று நாம் பஞ்ச பூதங்களை மதிக்க மறந்து விட்டோம். அதனால் அமேசன் காடு எரிகின்றது. ஜப்பானில் நீரால். புயலால் மரணங்கள், வீதிகளில் விபத்து மரணங்கள் ஏற்படுகின்றன். முன்னோர்கள் பஞ்சபூதங்களை கோவிலின் பெயரால் வணங்கி மகிழ்ந்தனர்.

சிதம்பரம் - ஆகாசம் திருவண்ணாமலை-நெருப்பு காஞ்சி ஏகாம்பம்- நிலம் காளகஸ்தி-வாயு திருவானைக்கா- நீர் போன்றன. ஆகவே பஞ்சபூதங்களை மதித்து வணங்கி இப்பிரபஞ்சத்தைக் காப்போமாக.

-சிவனடியான்-




## தமிழ்

தரணியில் உதித்த நாள் முதல்
தாய்க்கு நிகராக உன்னைப் போற்றி
உன் புகழ் பாட
வரம் வேண்டும் எனக்கு

சங்ககாலத்தில் வளம் பெற்று
முச்சங்கம் அதில் பலம் பெற்று
தன் அங்கம் தனில் உயிர் மெய்
இணைந்து

விண் அளவு வளர்ந்தாய் நீ
எங்கள் தமிழ்தாயே உன்னை
போற்றி வாழ்த்துகிறேன்
வாழிய வாழிய நீயென்றே...!

**க.வர்ஷா, யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க.,
SOS சிறுவர் கிராமம் யாழ்ப்பாணம்.**

## பொன்மொழிகள்


- எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.
- எல்லோரும் தம்மை விட்டு விட்டு வேறு யாரையோ சீர்திருத்த முயலுகிறார்கள்.
- ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.
- செயல் புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒரு போதும் உதவி செய்யாது.
- சண்டைக்குப் பின் வரும் சமாதானத்தைவிட, என்றும் சண்டையே இல்லாத சமாதானம் தான் வேண்டும்.











## எழுக தமிழ் வெற்றி பெறுமா?

## தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தரவல்ல ஆளுமை யாழ்.பல்கலைக்கழக மாணவரிடம் உண்டுதானே?

## திலீபனின் நினைவு தினம் இன்று தொடங்குகிறது. இனி எம் சுயநல அரசியல்வாதிகளின் வீர வசனத்தைக் கேட்கலாமா?

**கரன் — நெல்லியடி**

கம்பரெலிய அபிவிருத்தித் திட்டம் வடக்கில் எப்படி?

மாவிட்டபுரம் சந்தியில் இருந்து கீரிமலை வீதியில் மாவைகலட்டிக்குச் செல்லும் சிறு வீதி வெறும் 300 மீற்றர். அதில் 200 மீற்றர் தார் ஊற்றி செப்பனிப்பட்டு கம்பரலிய திட்டம் பொறித்த பதாகையும் நாட்டப்பட்டு விட்டது.

வீதி 100 மீற்றர் முழுமை பெறாமல் சிதைந்து கிடக்கிறது. இது எதனால் முழுமை பெறவில்லை? எதற்காகப் புறக்கணிக்கப்பட்டது?

முழுமை பெறாத வீதிக்கு பதாகை வைத்து பெயர் எடுக்கும் நிலையில் தான் நிற்கிறது எமது பழி வாங்கல் படல அரசியல்.
கடவுள் இருக்கான் குமார்.

**கலை — மிருசுவில்**

எழுக தமிழ் வெற்றி பெறுமா?

வெற்றி பெற வேண்டும். வெற்றி பெறும். இல்லையேல் நாம் தமிழராய் இருந்து பலன் ஏதும் இல்லை என்றே பொருள். என் கண்ணுக்கு முன்னே என் நிலம் சுரண்டப்படுகிறது. என் உரிமை மறுக் கப்படுகிறது.

எனக்குத் தரப்பட வேண்டிய எதுவும் எனக்கு கிடைக்கவில்லை. எனக்கு கிடைக்க வேண்டிய எதுவும் எனக்கு கிடைக்கவில்லை என்றால் என் அடுத்த சந்ததிக்கு அது கிடைக்காதே.

அதனால் அதைப் பெறுவதற்காய் நாம் எழுந்து நின்றே ஆக வேண்டும். அதைத்தான் எழுக தமிழ் மூலம் செய்யப் போகிறது தமிழினம்.

**சிவன் — வதிரி**

தலை இருக்க வால் ஆடுகிறதே வியாசரே?

அட சிவன் அந்த விடயம் உனக்கு தெரியாதோ? இப்ப தலை இருக்க வால் ஆடற படலம் தான் நடக்கிறது. பிள்ளை இல்லா வீட்டில் கிழவன் துள்ளி விளையாடியதாம் , பூனை இல்லாத வீட்டில் எலி சந்தகம் ஆடியதாம் என்ற பழமொழிகளை இவற்றை பார்க்கத்தான் விளங்கிக் கொள்ள முடியுது.

என்னதான் வாலுக்கு கண், வாய், மூக்கு வைத்தா லும் வால்வால் தான். வால் ஒரு நாளும் தலை யாகாது விளங்கிக்கோ.

**நிலா — சுழிபுரம்**

அரசியல்வாதிகள் சந்தர்ப்பவாதிகளா? எந்தச் சந்தர்ப்பத்தில் மாறுவார்கள்?

நீங்கள் வாக்களித்த அந்த மூன்று பேரையும் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அவர்கள் உங்களுக்குத் தந்த வாக்குறுதிகளை நினையுங்கள்.

- போர்க்குற்றவாளிகளுக்கு தண்டனை தேவை.
- காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது? பதில் சொல்ல வேண்டும்.
- அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.
- படையினர் கையகப்படுத்திய காணிகள் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும்

இப்போது நீங்கள் வாக்களித்த அந்த மூன்று பேரும் வாக்களித்தபடி செயற்படுகிறார்களா? பதில் உங்கள் கையில்.

**தீனா — மானிப்பாய்**

திலீபனின் நினைவு தினம் இன்று தொடங்குகிறது. இனி எம் சுயநல அரசியல்வாதிகளின் வீர வசனத்தைக் கேட்கலாமா?

கண்டிப்பாகக் கேட்கலாம். கதிரைக்காக பேசாமல் பம்மிக் கொண்டு இருக்கும் இவர்களுக்கு இப் படிப்பட்ட உணர்வுபூர்வமான அனுஷ்டிப்புக்கள் வாக்குப் பெறும் வடிகால்கள்.

அதனால் இனி செவில் பறக்கும். அண்டம் ஆகாசம் எல்லாம் சிவப்பு மஞ்சள் பூசி பொழிந்து தள்ளுவார்கள்.

அந்த 12 நாள் முடிந்துவிட்டால் இராமன் சீதைக்கு என்ன முறை காணும்.

**கௌரி — நெல்லியடி**

எழுக தமிழுக்கும் பொங்கு தமிழுக்கும் வித்தியாசம் என்ன?

கொதி நீரில் போடப்பட்ட அரிசி கொதித்து பொங்கி எழுந்து மண்ணில் வீழ்ந்து கிடந்தது.இன்று இது எழுக தமிழாய் எழுகிறது. பொங்கி வீழ்ந்து மீண்டும் எழுகிறது.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**தர்ணிகா — கவுந்தில்**

எழுக தமிழ் பேரணிக்கு சில தமிழ் எம்.பிக்களுக்கு விருப்பம் இல்லையாமே?

சுயநல அரசியல் செய்து கொண்டிருந்தால் எப்படி விருப்பம் வரும். இவர்கள் வடக்கிற்குத் தலைகாட்டி தெற்குக்கு வால் காட்டும் இனத்தார் எதைப் பேசுவது என்றாலும் தெற்கின் அனுமதியுடன் தான் பேசுவார்கள்.

தமிழரின் உரிமைபெற்றுத் தரப்பட்டால் தலைப்பா தங்களுக்குத் தான் கட்ட வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்க வல்லவர்கள். சரி விடுங்கள் காகம் திட்டி மாடு சாகப் போகிறதா என்ன.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

உங்களுக்கு அதிகம் கோபம் வருகிறதாமே வியாசரே?

கோபப்பட வேண்டிய இடத்தில் அமைதியாய் இருப்பதும் அமைதியாய் இருக்க வேண்டிய இடத்தில் கோபப்படுவதும் மனிதனுக்குத் தரப்பட்ட சாபக்கேடு. அதில் வியாசர் விதி விலக்கா என்ன.

**சுதன் — குப்பிளான்**

போர் முடிந்து 10 வருடம் ஆகிவிட்டது. ஆட்சிக்கு வந்தவர்கள் செய்ததையா புதியவர்கள் செய்யப் போகிறார்கள்?

மக்களுக்கு ஒரே ஆட்களுக்கு வாக்குப் போட்டு போட்டு சலிப்பேறி விட்டது.

மாறி மாறி மக்களை ஏமாற்றிவிட வேறேதும் இல்லை.

இவர் சொல்வதை விட அவர் சொல்வது பரவாயில்லை. அவர் செய்வதை விட இவர் செய்தது மோசம் என்று சொல்கிறார்கள். ஆனால் மீண்டும் மீண்டும் மாறி மாறி அதே முகங்கள் தான் வருகிறார்கள்.

அதனால் புதுமை கொஞ்சம் புத்துணர்வு தரும் தானே.

**திகழன் — யாக்கரு**

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தரவல்ல ஆளுமை யாழ்.பல்கலைக்கழக மாணவரிடம். உண்டுதானே?

தமிழ் மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்படும் போது அந்த உரிமையைப் பெற்றுத்தர முதலில் விழும் வியர்வைத்துளி பல்கலைக்கழக மாணவர்களுடையதாகத்தான் இருக்கும்.

இது வரலாறு. இந்தவரலாறு இன்றும் தொடர்கிறது. அது என்றும் தொடர வேண்டும். அதுவே தமிழ் மக்களுக்கு பலம்.

**ஜீபா — கரவெட்டி**

எழுக தமிழ் மூலம் தமிழரின் விருப்பத்தை ஐ.நா. ஏற்குமா?

எமக்கான உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டன. எமது நிலம் விடுவிக்கப்படாமல் கிடக்கிறது. சிங்களக் குடியேற்றங்கள் தாராளமாய் நடந்து கொண்டே இருக்கின்றன.

எங்கும் எதிலும் நாம் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் கொண்டே இருக்கிறோம். இதை சர்வதேசம் கவனத்தில் எடுக்காமல் போர்க்குற்ற விசாரணையை உள்ளகம் வெளியகம் என நாசமறுத்து விட்டது.

அதற்காய் எமது உரிமைகள் இழக்க நாம் தயாரில்லை. எம் உரிமை கிடைக்கிறதோ இல்லையோ உரிமைக்காய் நாம் போராடிக் கொண்டே இருப்போம்.

**றூபன் — நவாலி**

சிங்கத்துக்கு தான் ராஜா என்று தெரியாதோ?

சத்தியமாகத் தெரியாது தெரிந்திருந்தால் தனக்கான உணவைத் தான் வேட்டை ஆடாமல் மற்றைய மிருகங்களிடம் பெற்று உடல் வளர்த்திருக்குமே.

மிருகங்களுக்கு பேசும் திறன் ஒருநாள் வரும். அப்போது அதற்கு எல்லாம் தெரியவரும். அதன் பின்பு மனிதன் அனுபவிப்பான் இது சத்தியம்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## படிப்பினை

பூமிப்பந்தயத்தில்
வாழ்க்கை தோற்று
மாற்றுக் கிரகத்தில்
மனித வாழ்வதனை
நிலைநாட்ட
மல்லுக்கட்டும் மனித இனம்
விஞ்ஞானங்களின்
மெய்ஞ்ஞானங்களால்
பஞ்சாய் எரிந்தும்
பாலைவனப் பகுதிகள்
ஓசோன்படலத்தில்
உச்சிகளை உருக்கி
கருக்கிய இயந்திரப் புகையில்
காசநோயாளியாக்கி
கதிரலைகளை
கிளறி முடிந்தாயிற்று
பசுமைப்புரட்சியின் ஒத்திகை
வனங்களின் பாதி நிலங்கள்
பாடையேற்றி
பரிதாபமாய் கிடக்கிறது
எச்ச குளங்களும்
ஏரிநிலைகளும்
மிச்சமின்றி
மேடாய் ஆனது
பாவம் ஏழை மானிடம்
இயற்கையின்
இறக்கை பிடுங்கி
எல்லாம் முடிந்தாயிற்று
பாவம் குழந்தைகளை
இனிச் செயற்கை
நிலவு காட்டி
சோறூட்டக்
கற்றுக் கொடுங்கள்
மாற்றுக்கிரகத்தில்

நெடுந்தீவு
சி.சிறி



## இவள்

எங்கேயோ பறக்கும் என் எண்ணங்கள்..
எதை நோக்கியோ என் பயணங்கள்
வாழ்ந்துவிட துடிக்கும் என் மேலே
எத்தனையோ வாள் வீச்சுக்கள்

அருவருக்கும் வகையில் ஆணவங்கள்
அதிகாரத்திமிர் நிறைந்த சிரிப்புக்கள்
நெஞ்சை நொருக்கும் கடின சொற்கள்
மெல்ல துடிக்கச்செய்யும் செயல்கள்

வாலிபத்தின் முதற் படியிலே
வயோதிபத்தின் அனுபவங்கள்
வாழும் இந்த மண் மீதிலே
வஞ்சனையின் வாசங்கள்

விண்ணளவு பாரங்கள்
இடையிடையே வண்ணமிழந்த
சோகங்கள்

சுற்றி நிற்போர் நட்புக் கரம் நீட்ட
கூட இருப்போர் நகைச்சுவை பேச
அத்தனையும்
விழலுக்கிறைத்த நீராய்
ஊமை காயங்கள்
மட்டும் நெஞ்சிலே மீதியாய்

பந்தி முந்தும் சிலரை போலே
முந்தி நிற்பது துன்பம் தானோ...
வந்து தொடரும் அல்லல் எல்லாம்
நின்று கொல்லும்
தலைவிதி பெற்றேன்..

ஆயிரமாயிரம் அனுபவங்கள்
அத்தனையும் தாங்கும் மனமாய்
இருப்பதில் கொஞ்சம்
மகிழ்ந்தவளாய்

பிரியா காசிநாதன்

## எழுந்து வா தம்பி...

தம்பி...
நீ எழுந்து வா...
தடைகளைத் தகர்ப்போம்
தரணியெங்கும் தார்மீகம்
வளர்ப்போம்
மனங்களை வெல்லுவோம்
மாற்றங்களை மலர வைப்போம்
தொலைவுகளை தொடர்வோம்
தொலைந்தவற்றின்
சுவடுகளில்
தடம் பதிப்போம்
சாதனைகளை
சவாலாக்குவோம்
சரித்திரத்தை
புடம்போடுவோம்
சகாப்தங்களை
சரி செய்வோம்
வானத்தை வசமாக்குவோம்
வட்ட நிலவிற்கு பொட்டிடுவோம்
பலங்களை வெல்வோம்
பலவீனங்களை கொல்லுவோம்
பசுமையை வளர்ப்போம்
பலரையும் நேசிப்போம்
விழுமியங்களை காப்போம்
விடியலை நோக்குவோம்
விரைந்து வா தம்பி...
நீ... எழுந்து வா...

நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

## எழுக தமிழ்

வீழ்ந்தவன் எழுகிறான்
வீறுகொண்டெழுகிறான்- என்று
எழுகவே எழுக தமிழ்!

மாண்டவர் மண்ணில்
மீண்டவர் நின்றே- தமிழ்
எழுகவே எழுக தமிழ்!

வஞ்சகர் உள்ளமும்
வால்நரிக் கூட்டமும்- ஓடிட
எழுகவே எழுக தமிழ்!

பசி பிணி மறந்து
எம் பரம்பரை நிமிர்ந்திட- நிதம்
எழுகவே எழுக தமிழ்!

நெஞ்சினில் வீரம்
நேர்கொண்ட பார்வை- இனி
எழுகவே எழுக தமிழ்!

இஞ்சியும் எம்மினம்
இனி அகலாது என்று- தினம்
எழுகவே எழுக தமிழ்!

முள்ளிவாய்க்கால் முடிவு
இரத்த ஆற்றுச் சரித்திரம்-உயர்
எழுகவே எழுக தமிழ்

வாக்குகள் வாங்கிட
வீடு வருவோர்க்கு- சாட்டை
எழுகவே எழுக தமிழ்


காணாமல் போனோர்க்கு
கதை சொல்ல வேண்டியே - நீ
எழுகவே எழுக தமிழ்!

போர்க்குற்றம் புரிந்தோரை
தண்டிக்கச் செய்திடவே-தமிழா
எழுகவே எழுக தமிழ்!

இறுதிமூச்சு உள்ளவரை
எம்மினத்திற்காய் போராட-வீரா
எழுகவே எழுக தமிழ்

மாவை. நா. கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 464



## ஏழையின் சிரிப்பினிலே

மனிதர்களே
கொண்டாட்டங்களின் போது
சபை சந்திகளில் நாம் வீணாய்
வீசும் உணவுகள் பசியால் வாடும்
இந்த ஏழைச்சிறுவன்
போன்றவர்களுக்கு
இப்படிக் கிடைத்தால் அவர்களின்
மனம் மகிழ்வடைந்து நம்மை
மனதார வாழ்த்தும் உலகில்
ஏழையின் சிரிப்பினிலே நாம்
என்றும் இறைவனைக் காணலாம்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## மௌனத்தின் தேடல் -465



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## புரிவாயா? மானிடா?

கையில் பாணும் குவளையில் தேநீரும்
களையான புன்னகையும் பாலகனே! உன்
புன்னகையைக் காண புண்ணியங்கள் கோடி
புரிந்திருக்க வேண்டுமல்லவா?
பணத்தைக் கொட்டி பாழாக்கத் தெரிந்த
மானிடர் பலருக்கு- உன் போன்ற பலரின்
பரிதாப நிலைதான் புரியவில்லையா?

சு.ஆர்த்திகா
தொல்புரம் கிழக்கு

## பரமன் தெரிவான்

பசியில் வாடும் எவ்வுயிர்க்கும்
பரமன் தெரிவான் படுக்கையிலே
வசிக்கும் உரிமை இல்லாமலுமே
வாழ்வாதாரம் இழந்த எம் மண்ணில்
கசிந்து இதயம் காருண்யமதாய்
கனிந்து கடமை செய்யாதோர்
புசித்து பெரும் பூசனியாய் உதரம்
புனிதர் காவித்தாம் எம் தலைமைகளே

வாகைவளவன்
நாரந்தனை

## மகளின் புன்னகை

மகளே!
பெற்றாரை இழந்து
வறுமையில் வாடும்
அநாதைக் குழந்தையா நீ
இன்று மட்டும் ஒரு சிறு
பிஸ்கட்டும்
குடிப்பதற்கான
பானமும் கிடைத்த விட்ட
மகிழ்ச்சியில்
புன்னகை தருகிறாய்
நீ வளர்ந்து உன்
வயிற்றுப்பசிக்கு உணவு
தேடும்வரை காத்திருப்பது
கஷ்டமான
நிகழ்வுகளைத்தான்
குழந்தாய் ஜாக்கிரதை!

அபிகுலமாலிகா
சங்கானை

## உணவும் உணர்வும்

தொல்லைகளைத்
தொடர்ந்து தந்து
இல்லையென்று
ஆக்குவதில்
போரைப்போன்றுதான்
போதைப்பொருட்களும்
ஓயாத அலைகள் போன்று
ஒவ்வாத கவலைகளைத் தரும்
மதுவகையால்
அதிகம் பாதிப்புறுவது
ஏதுமறியாச் சிறார்கள்தான்
ஒரு கோப்பை தேநீருக்கும்
சிறு ரொட்டித் துண்டிற்கும்
நொந்தலைந்த நினைவுகள்
வெந்தணல்போல் சுடும்

க.நாகராசா
நுணாவில்

## பரிவு காட்டுங்கள்

தாரகையாக முகம் ஒளிர
தளிராய் சிரிப்பு மலரவுமே
ஊரார் பிள்ளையானாலும்
ஊட்டி உணவு தருவதற்கே
ஆராயானும் முன் வந்தே
அற்றார் அழிபசி தீர்த்திடலே
பாராமுகமாய் இருக்காமல்
பரிவு காட்டிப்பாருங்கள்

கந்தன்மைந்தன்
காவலூர்

## பாராதிராதீர்

ஈரல் குலையே கருக்குமிது
இளகும் சிரிப்பால் உளம்தேறும்
போரால் பிறப்பால் பிரிவாகிப்
போன போக்கில் வழிமறிப்போன
பச்சைக் குருத்தின் பசியாற்ற
பாராதிராதீர் மனம் இரங்கி
இச்சையோடு சமுதாயம் நிமிர
இறங்கிக் கருணை காப்பீரே

த.சிவகாமி
நல்லூர்

## வாழ்வாதார வரம்தாரும்

வாடிய பயிரையே கானுற்ற
வள்ளலார் மனம் வாடியதாய்
தேடிய சொத்தாய் திருதொண்டு
தேரவாழ்வின் நோக்கமதை
ஓடி ஒளிந்து ஒதுங்காமல்
உரிய சமூக நீதி வழி செய்ய
வாடி வதங்கும் சிறாருக்காம்
வாழ்வாதார வரம் தாரும்

தவகந்தன், தாவடி

## கருணை காட்டமாட்டீரோ!

கொண்டாட்டம் களித்துப் பின்
கொட்டும் உணவு தொட்டிகளில்
கண்ணே இல்லாக் காரியங்கள்
காணும் எம் மண்ணில் இனி
உண்ண ஒருகவளம் தானும்
உணர்வு மேவிப் பசி நீக்க இக்
கணமே சிந்தை தனை ஏற்றி
கருணை காட்டமாட்டீரோ

வை.க.தவமணிதாசன்
கொக்குவில்

அந்தக் கோயிலில் வருடாந்த பெருவிழா முடிந்துவிட்டது. வழமை போல சிலர் ஆலய முன்றலில் இருந்து கதைத்துக் கொண் டிருந் தார்கள். பெரியவர் கமலநாதனும் சுவாமி கும்பிட்டுவிட்டு வந்து வடக்குப் பக்கமாக நிற்கும் வேப்ப மரத்தின் கீழ் வந்து உட்கார்ந்தார்.

அவர் தவகுமாரின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். கமலநாதன் இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்று அரசாங்க வேலை பார்த்தார். இப்போது வேலையிலிருந்து ஓய்வுபெற்ற தனது மூத்த மகளின் குடும்பத் தோடு வசிக்கிறார்.

மாலைநேரத்தில் அந்தக் கோயி லுக்கு வந்து ஒரு சில மணித் தியாலங்கள் அங்கே இருந்து விட்டு வீட்டுக்குத் திரும்புவார். ஐந்து நட்சத்திர விடுதிகளிலும் கிடைக் காத ஒரு சுகத்தை அவர் அங்கே அனுபவித்துக் கொண்டிருந்தார்.

தவக்குமார் வந்து கமலநாத னுக்கு முன்னால் உட்கார்ந்தான். அவன் ஒரு தனியார் நிறுவனத்தில் கணக்குப் பதிவாளராக வேலை செய்கின்றான். திருமணம் செய்து இரண்டு பிள்ளைகள்.

தொடர்ந்து படிப்பதற்கு பண வசதி இல்லாததால் அந்த நிறுவ னத்தில் சேர்ந்து பல வருடங்களாக அங்கே வேலை செய்து கொண்டி ருக்கிறான். தான் படித்து சமூக அந்தஸ்தைப் பெறும் ஒரு அரசா ங்க வேலை பார்க்க வேண்டும் என்றுதான் அவன் ஆசைப் பட்டான். ஆனால் அது முடியவில்லை. அந்த வேதனை அவனுடைய மனதில் ஒரு கடுந்தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

மாலை நேரத்தில் அந்தக் கோயி லுக்கு வந்து பெரியவர் கமலநாத னுடன் கதைத்துக்கொண்டிருப்பது தவக்குமாருக்கு மன ஆறுதலைக் கொடுக்கும்.

"தம்பி அங்கே நிற்கும் மஞ்சத் தைப் பார்" தவக்குமாரும் திரும்பிப் பார்த்தான். அங்கே ஒருவரையும் காணவில்லை. என்ன விடயம் என்று கேட்பது போல அவன் பெரியவரின் முகத்தைப் பார்த் தான். அவர் ஒரு புன்சிரிப்புடன் "மஞ்சத் திருவிழாவிற்கு நீ வந் தனீதானே! எவ்வளவு பக்தர்களின் கூட்டம்.

எவ்வளவு மதிப்பு, மரியாதை அந்த மஞ்சத்திற்கு. இப்போது அது நிற்கும் நிலையைப் பார். தனி மைப்பட்டு நிற்கிறது. வாழ்க்கையும் இப்படித்தான். பதவியில் இருந் தால்தான் மதிப்பு. பதவியை விட்டு இறங்கினால் அவன் சாதாரண மனிதன்தான்.

எனக்குக் கீழே எத்தனை பேர் வேலை செய்தார்கள். என்னு




# நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்...

டைய கண்பார்வைக்காக காத்திரு ந்தவர்கள் எத்தனை பேர்! இப் போதுதான் ஒரு சாதாரண மனித னாக உன்னோடு இருந்து பேசிக் கொண்டிருக்கின்றேன். நீண்ட தொரு பெருமூச்சு அவரிடமிருந்து வெளிப்பட்டது. வீடு சென்ற தவக்கு மார் இரவு உணவை முடித்துக் கொண்டு வெளிச்சாலையில் போடப் பட்டிருந்த ஒரு சாய்மனைக் கதிரையில் சாய்ந்தான்.

அவன் வழமையாக நித்திரைக் குப் போக முன்பு சிறிது நேரம் அந்த சாய்மனைக் கதிரையில் சாய்ந்தவண்ணம் எதையாவது சிந்தித்து விட்டுத்தான் செல்வான். அன்று அவன் பெரியவர் கமலநா தன் கூறியதை சிந்தித்துப் பார்த் தான்.

"அந்தப் பெரியவர் அவ்வளவு அனுபவசாலி பல இடங்களுக்கும் சென்று பலரோடு பழகிய அனு பவம் அவருக்கு இருக்கு.

நான் எவ்வளவு காலம் அரசா ங்க வேலை எனக்குக் கிடைக்க வில்லை என்ற கவலையை சும ந்து கொண்டு வாழ்வது! இன்றோடு இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அவன் நினை த்தபோது இதுவரை காலமும் அவன் தேடிய அமைதிப் புறா அவனுடைய மனதில் வந்து உட்கார்ந்தது.

அடுத்தநாள் தவகுமார் ஒரு திருமணத்திற்கு செல்ல வேண்டி யிருந்தது. ஒரு மண்டபத்தில்தான் திருமணம். பெரிய இடத்துத் திரு மணம். அவன் அங்கே சென்ற போது மண்டபம் நிறைந்து சிலர் நின்று கொண்டிருந்தார்கள். அவ னும் ஒரு பக்கத்தில் நின்று கொண்டிருந்தான்.

தாலிகட்டு முடிந்தவுடன் பெரிய அமளி. வந்தவர்கள் முண்டியடி த்துக்கொண்டு உணவுக்காக எழு ந்து சென்றார்கள். அவர்கள் படும் அவதியைப் பார்க்க அவனுக்கு சிரிப்பு வந்தது. சுயநலம் எங்கே தான் விட்டது! சுயநலம் இதயத்தில் புகுந்து கொண்டால் எல்லோரும் சாதாரண மனிதர்கள்தான்.

காலம் தவகுமாரை முதிய வராக் கியது. இப்போதும் அவன் அந்தக் கோயிலுக்கு வந்துகொண்டுதான் இருக்கிறான். இப்போது அவ னுக்கு சில நண்பர்கள் கிடைத்தி ருக்கிறார்கள். அவர்களும் வயோ திபர்கள்தான்.

அவனோடு படித்தவர்கள் பல உயர் பதவிகளில் இருந்தவர்கள். பாடசாலையில் ஒன்றாக இருந்த வர்களை தொழில் பிரித்தது. வயோ திபம் அவர்களை ஒன்று சேர்த்து ள்ளது. வாழ்க்கைப் போட்டி சம நிலையில் முடிகிறது.

தவகுமாரின் இரண்டு பிள்ளை களும் வெளிநாட்டிலிருந்து வந்தி ருக்கிறார்கள். அவர்கள் குடும்ப மாக வந்திருக்கிறார்கள். வீடு மகிழ்ச்சிக் கடலில் மிதந்து சென்றது.

"அண்ணா அப்பாவுக்கும் அம்மா வுக்கும் வயது போட்டுது. பிற்கால த்தில் அவர்களை அக்கறையாகப் பார்ப்பதற்கு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு சுமையாக இருந்து மற்றவர்களை கஷ்டப்படுத் தாமல் அவர்கள் நிம்மதியாக இறக்க வேண்டும். அதனாலே அவர்களை..." தங்கை வனிதா பேச்சை முடிக்கவில்லை.

"மிச்சத்தையும் சொல்லு" என் றான். ரமணன். அவர்களை தனி யார் முதியோர் இல்லம் ஒன்றில் சேர்த்துவிடுவோம். அதற்குரிய பணத்தை நான் கொடுக்கிறன்" என்று முடித்தாள் வனிதா.

ரமணன் சிறிது நேரம் மௌன மாக இருந்து யோசனையில் மூழ் கினான். வனிதா கூறியதில் உள்ள யதார்த்த நிலை அவனுக்குப் புரிந் தது. அநாதைகளாக அவர்களை விட்டுச் செல்ல இருவருடைய மனதும் ஒத்துக்கொள்ளவி ல்லை.

ரமணனும் வனிதாவும் தங்கள் பெற்றோர்களிடம் அதைப் பற்றிக் கூறினார்கள். பிள்ளைகள் அருகில் இல்லாமல் பரிதாபமாக இறந்து போன சிலரை தவகுமார் நினைத் துப் பார்த்தான். தவகுமாரும் அவ ருடைய மனைவியும் இப்போது முதியோர் இல்லத்தில் இருக்கி றார்கள். மனிதன் எப்போதும் சூழ்நிலையின் கைதிதான்.

தர்மலிங்கம்
வோண்டாவில்

# அழிக்கப்பட்ட பவளப்பாறைகள்... கடல் அரிப்பால் கரையும் தீவுகள்!



'பவளப்பாறைகளின் அழிப்பால், மன்னார் வளைகுடா பகுதியில் உள்ள 21 தீவுகள் கடலில் மூழ்கும் அபாயத்தில் இருக்கின்றன' - இப்படியொரு தகவலை வெளியிட்டு அதிர்ச்சியைக் கிளப்பியுள்ளது, தூத்துக்குடி சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி நிலையம்.

கடல்வாழ் உயிரின ஆராய்ச்சியாளர்களின் சொர்க்கமாக விளங்கிவரும் மன்னார் வளைகுடா குறித்து இப்படியொரு தகவல் வெளியாகியிருப்பதால், சூழலியலாளர்கள் அதிர்ச்சியில் இருக்கின்றனர்.

இராமேஸ்வரம் முதல் தூத்துக்குடி வரையிலான 10,500 சதுர கி.மீ.பரப்பளவு கடல் பகுதி, உயிர்க்கோள மண்டலமாக இருக்கிறது. இதில் சுமார் 560 சதுர கி.மீ. பகுதியை, 'மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிர்க்கோளக் காப்பக'மாக, கடந்த 1989 ஆம் ஆண்டு மத்திய அரசு அறிவித்தது. இதற்கு யுனெஸ்கோ அமைப்பும் அங்கீகாரம் அளித்தது. இங்கு 4,223 வகை கடல்வாழ் தாவரம் மற்றும் விலங்கினங்கள், அழிந்து வரும் இனமான கடல்பசு, 117 வகை பவளப்பாறைகள், 14 வகை கடல்புற்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன.

பாம்பனுக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான 560 சதுர கி.மீ. பரப்பளவில்தான் பவளப்பாறைகள் அதிகம் காணப்படுகின்றன. இந்தப் பகுதியை, 'பாதுகாக்கப்பட்ட மன்னார் வளைகுடா கடல்வாழ் தேசியு உயிர்ப்பூங்கா'வாக 1986 இல் தமிழக அரசு அறிவித்தது. 21 தீவுகளை உள்ளடக்கியதாக இந்தத் தேசியப் பூங்கா உருவாக்கப்பட்டது. இந்தத் தீவுகளின் பரப்பளவு, வடிவம், தன்மை குறித்து, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துக்கான அமைச்சகத்தின் நிதியுதவியுடன், தூத்துக்குடி சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி நிலையம் ஓராண்டாக ஆய்வுசெய்து, மத்திய அரசிடம் ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கையில்தான் பல தீவுகள் கடலில் மூழ்கிவரும் அதிர்ச்சித் தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

கிளாட்வின் ஞான ஆசிர்

இந்த மையத்தின் நிலத்தியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் கிளாட்வின் ஞான ஆசிர், "இந்த 21 தீவுகளும் கடல் சூழலில் முக்கியமான அங்கமாக இருப்பதுடன், தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் இயற்கைச் சீற்றங்கள் பெரியளவில் தாக்காதபடி தடுப்பு அரண்களாகவும் செயற்படுகின்றன. இதனால்தான், 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமிப் பேரலையின்போது, இந்த இரண்டு மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் பெரியளவிலான பாதிப்புகள் ஏற்படவில்லை. இந்தத் தீவுகளைச் சுற்றிய பகுதிகளில் மீன்வளம் அதிகம் இருப்பதால், இவை மீனவர்களின் வாழ்வாதாரமாகவும் அமைந்துள்ளன. இந்நிலையில் விலங்குசல்லி தீவும் பூவரசன்பட்டி தீவும் கடல் அரிப்பால் கடலில் மூழ்கிப்போனது ஆய்வின் மூலம் தெரிய வந்தது.


இந்த ஆய்வில், கடந்த 50 ஆண்டுகளில் தூத்துக்குடி குழுவில் உள்ள தீவுகள் 71 சதவிகிதமும், கீழக்கரைக் குழுத் தீவுகள் 43.49 சதவிகிதமும், வேம்பார் குழுத் தீவுகள் 36.21 சதவிகிதமும், மண்டபம் குழுத் தீவுகள் 21.84 சதவிகிதமும் நிலப்பரப்பில் குறைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தீவுகளின் பரப்பு குறைந்து வருவதற்கு, கடல் அரிப்பும் பவளப்பாறைகள் வெட்டி எடுக்கப்படுவதும்தான் முக்கிய காரணங்கள். இதே நிலை தொடர்ந்தால், தூத்துக்குடி குழுவில் உள்ள காசுவார் மற்றும் காரைச்சல்லித் தீவுகள், வரும் 2036 ஆம் ஆண்டில் முழுமையாகக் கடலில் மூழ்கிவிடும். அதேபோல, வரும் 2064 முதல் 2193 ஆம் ஆண்டுக்குள் வேம்பார் குழுவில் உள்ள உப்புத்தண்ணி, புலுவினிச்சல்லி மற்றும் நல்லத்தண்ணி ஆகிய தீவுகளும், 2032 முதல் 2180 ஆம் ஆண்டுக்குள் கீழக்கரைக் குழுவில் உள்ள ஆணையப்பர், வல்லிமுனை, அப்பா, தலையாரி, வாழை, முல்லி ஆகிய தீவுகளும், 2140 முதல் 2525 ஆம் ஆண்டுக்குள் மண்டபம் குழுவில் உள்ள மனோலிபுட்டி, பூமரிச்சான், புள்ளிவாசல் ஆகிய தீவுகளும் கடலில் மூழ்கும் அபாயமுள்ளது.

கடந்த 2015 இல் தூத்துக்குடி பகுதியில் உள்ள வான்தீவு கடலில் மூழ்கும் அபாயம் உருவானபோது, தீவைச் சுற்றி பவளப் பாறைகள் மற்றும் கடற்புற்கள் மறு உருவாக்கம், செயற்கை பவளப்பாறை நிறுவுதல் போன்ற மத்திய, மாநில அரசுத் திட்டங்களால் அழிவிலிருந்து தடுத்து நிறுத்தப் பட்டது. அதேபோல, மற்ற தீவுகளைச் சுற்றிலும் இதுபோன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் கடலில் மூழ்காமல் தீவுகளைப் பாதுகாப்பதோடு, கடற்கரைப் பகுதிகளையும், பல்லுயிர் பெருக்கத்தையும், கடலோரப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கலாம்" என்றார்.

இந்த ஆய்வறிக்கை தொடர்பாக வன உயிரினப் பாதுகாப்பகத் தரப்பில் பேசியவர்கள், "1986 இல் மன்னார் வளைகுடா பகுதியில் தேசியப் பூங்கா அறிவிக்கப் பட்டபோது, பவளப்பாறைகளின் அழிவைத் தடுக்க, சுமார் 6,000 செயற்கை பவளப் பாறைகள், பாதிப்புக்குள்ளான தீவுகளைச் சுற்றிலும் கடலில் வைக்கப்பட்டன. அதன் மீது புதிதாக பவளப் பாறைகள் வளர்ந்து வருகின்றன. இதேபோல் காசுவார் தீவைச் சுற்றி 1,200 கடற்புற்கள் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும்" என்கின்றனர். தீவுகள் முழுமையாக மூழ்குவதற்கு முன் அவற்றைப் பாதுகாக்க, தீவிர நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டியது அவசியம். அவசரம்.

# 100 நாட்களைக் கடந்த மோடி ஆட்சி...

'பிரதமர் நரேந்திர மோடி 2.0 அரசு' பதவியேற்று, செப்டெம்பர் 6 ஆம் திகதியுடன் 100 நாட்கள் நிறைவடைந்து விட்டன. 70 ஆண்டுகளுக்கும் மேலாக எந்த ஓர் அரசும் செய்யத் துணியாத காரியங்களை, கனகச்சிதமாகச் செய்து வருகிறது இந்த அரசு. இந்த அதிரடி அரசியல் சிலம்பத்துக்கு மக்களவைத் தேர்தலில் பி.ஜே.பி.பெற்றுள்ள அசுரபலம் உதவியுள்ளது. கடந்த ஆட்சிக்காலத்தில் செய்ய முடியாத வேலைகளை "மோடி 2.0" ஆட்சியில் எந்தத் தயக்கமுமின்றி நிறைவேற்றி வருகின்றனர்.



### தீவிரவாதத் தடுப்புச் சட்டம்

தீவிரவாதத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாது என்ற கொள்கையில், மோடி அரசு உறுதியாக இருக்கிறது. தீவிரவாதத் தடுப்பு மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அவர்களை வேட்டையாடி வருகிறது. எந்த ஒரு மாநிலத்துக்கும் சென்று தீவிரவாதி என்று அடையாளம் காணும் எவரையும் உள்ளூர் காவல்துறையின்,துணையில்லாமல் தேசிய முகமை கைது செய்ய முடியும். 'இம்மென்றால் சிறைவாசம்...ஏனென்றால் வனவாசம் என்ற ரீதியில் மோடி அரசு செயற்படுவதாக' மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி போர்க்கொடி தூக்கினாலும் மோடி அரசு கண்டு கொள்ளவில்லை.

### முத்தலாக் தடைச் சட்டம்

சென்ற ஆட்சிக்காலத்தில் முத்தலாக் தடைச் சட்டத்தை அவசரச் சட்டமாகக் கொண்டுவந்து போதிய பலமில்லாத காரணத்தால், மாநிலங்களவையில் நிறைவேற்ற முடியாமல் தவித்து வந்தது மோடி அரசு. மீண்டும் ஆட்சிக்கு வந்த கையோடு, அதைச் சட்டமாக்கி மார்தட்டிக் கொண்டது பி.ஜே.பி.அரசு. 'இஸ்லாம் பெண்களுக்கு ஆதரவாக இந்தச் சட்டம் கொண்டு வந்ததாக பி.ஜே.பி.பெருமை பேசி வந்தாலும் இது இஸ்லாமிய மக்களுக்கு எதிரான நடவடிக்கைதான்' என்று இஸ்லாமிய அமைப்பினர் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

### வெளிநாட்டுப் பயணம்

100 நாட்கள் ஆட்சியில் பிரதமர் மோடி ஏழு நாடுகளுக்குச் சென்று வந்துவிட்டார். மாலைதீவு, இலங்கை, பூட்டான், ஐக்கிய அரபு நாடுகள், பஹ்ரேய்ன், பிரான்ஸ் மற்றும் ரஷ்யா என சுற்றிச் சுழன்று வருகிறார் பிரதமர். இந்தப் பயணங்கள் எல்லாம் இரு நாடுகளின் உறவை வலுப்படுத்தவும் உலக அரங்கில் இந்தியாவின் எழுச்சியைக் காண்பிக்கும் விதத்திலும் அமைந்திருப்பதாக வெளியுறவுத்துறை கூறுகிறது.

### தள்ளாடும் பொருளாதாரம்

இந்தியப் பொருளாதாரம் சரிவைச் சந்தித்து வருகிறது. அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வருகிறது. ஆட்டோமொபைல் துறை, தொடர் சரிவைச் சந்திக்கிறது. ரிசர்வ் வங்கி 1.76 இலட்சம் கோடி ரூபாயைக் கொடுத்து மத்திய அரசுக்கு முட்டுக்கொடுத்து வருகிறது. அதோடு நலிந்த வங்கிகளுக்கு உயிரூட்டுவதாகச் சொல்லி, பொதுத்துறை வங்கிகளும் இணைக்கப்பட்டு வருகின்றன. 'சுமார் 70,000 கோடி ரூபாய் வங்கிகளுக்கு வழங்கப்பட்டு, வீட்டுக்கடன் மற்றும் வாக னக்கடன் வழங்க ஊக்கப்படுத்தப்படும்' என்ற மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் நடவடிக்கைகள், யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றது என்று தொழில் துறையினர் கூறுகின்றனர்.

### காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து இரத்து

காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி வந்த சட்டப்பிரிவு 370 மற்றும் 35 A-வை நீக்கி, ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் என்று இரண்டு யூனியன் பிரதேசங்களாக காஷ்மீர் மாநிலம் மாற்றப்பட்ட விவகாரம், உலக நாடுகளையே திரும்பிப் பார்க்க வைத்தது. முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரும் அடக்கி வைக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகளிடமிருந்து குரல்கள் கேட்கின்றன. தொலைத்தொடர்பு வசதிகள், இன்டர்நெட் வசதிகள் அனைத்தும் முழுவதும் துண்டிக்கப்பட்டு, தற்போது தான் படிப்படியாக பல இடங்களில் இணைப்புகள் தரப்பட்டு வருகின்றன.

### விவசாயிகளுக்குச் சலுகைகள்

பிரதமரின் விவசாய நிதித் திட்டம் மூலம் நாட்டில் உள்ள 14 கோடி விவசாயிகளுக்கு உதவித் தொகையாக ஆண்டுக்கு 6,000 ரூபாய் வழங்கும் முயற்சியில் மோடி அரசு முனைப்புக் காட்டி வருகிறது. மேலும், அவர்களுக்கான ஓய்வூதியத் திட்டமும் வகுக்கப்பட்டு வருகிறது. இது விவசாயிகளைக் கவர்ந்துள்ளது.

### சுத்தமான குடிநீர்

அனைவருக்கும் சுத்தமான குடிநீர் வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஜல்சக்தி அமைச்சகம் ஒன்று உருவாக்கி, அதன்மூலம் நாட்டில் உள்ள அனைவருக்கும் சுத்தமான குடிநீர் வழங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் மோடி. இதை ஒரு மக்கள் இயக்கமாக மாற்ற, திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.

### தேசிய மருத்துவ மசோதா


தமிழ்நாட்டில் எதிர்ப்புகளைச் சந்தித்து வரும் நீட் தேர்வைக் கட்டாயப்படுத்தும் விதத்தில், தேசிய மருத்துவ மசோதாவைக் கொண்டுவந்து குடைச்சல் கொடுப்பதாக தி.மு.க.உள்ளிட்ட கட்சிகள் குற்றம்சாட்டுகின்றன. இனி, மருத்துவம் படித்த மாணவர்கள் 'எக்ஸிட்' தேர்வை எழுத வேண்டும் என்ற கட்டாயத்தை இந்த மசோதா ஏற்படுத்தியுள்ளதும் சர்ச்சையைக் கிளப்புகிறது. என்னதான் பல அதிரடி அரசியல் சடுகுடு ஆட்டத்தை ஆடினாலும் பொருளாதார மந்தநிலை, மோடி அரசுக்கு சற்று அயர்ச்சியைக் கொடுத்துள்ளது. அதனால், '100 நாட்கள் ஆட்சி சாதனை' என்று கொண்டாட முடியாமல், அவர்கள் ரொம்பவே தவிக்கின்றனர்.

# இருண்ட எதிர்காலத்தை நோக்கிய கடல் பயணம்!

இலங்கைக் குடும்பம் ஒன்றை நாடு கடத்துவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளையடுத்து அந்தக் குடும்பத்தை அவுஸ்திரேலிய சமூகத்தின் அங்கமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் வெளிநாடுகளில் இருந்து அனுதாபிகளினால் விடுக்கப்பட் டிருக்கின்றன.

செய்தியில் அடிபடும் தம்பதியரான நடேசலிங்கமும் பிரியாவும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் முறையே 2012ஆம் ஆண்டிலும் 2013ஆம் ஆண்டிலும் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று தஞ்சம் கோரியி ருந்தனர். அவர்களை நாடு கடத்துவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி சமஷ்டி நீதிமன்றத்தின் உத்தரவொன்றினால் முறியடிக்கப்பட்டதை அடுத்து, அவர்களது பிரச்சினை ஊடகங்களின் கவனத்தை பெருமளவுக்கு ஈர்த்தது. இத்தம்பதியரின் இளைய மகளை நாடு கடத்துவதற்கு எதிராக அந்த நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தன் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டது. அவுஸ்திரேலியாவில் தொடர்ந்து இருப்பதற்கும், தாங்கள் வசித்து வந்த பிலோயெலா பகுதியின் சமூகத்துடன் ஒன்றிணைவதற்கும் நடேசலிங்கம் பிரியா குடும்பத்தினர் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அவுஸ்திரேலியாவில் உற்சாகமான வரவேற்பும் ஆதரவும் கிடைத்தது.

அந்த சமூகத்திடமிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பிறகு அந்தக் குடும்பம் அனுபவிக்க வேண்டியிருந்த அவலங்கள் சொல்லி மாளாது. ஆனால், நடேசலிங்கத்துக்கும் பிரியாவுக்கும் அவர்களது இரு பெண் பிள்ளைகளான கோபிகா (வயது 4), தருணிக்கா (வயது 2) ஆகியோருக்கும் கன்சர்வேட்டிவ் அவதானிகள், எதிர்க்கட்சிகள் மற்றும் கூட்டரசாங்கத்தின் பின்வரிசை உறுப்பினர்கள் என்று ஒரு அரிதான கூட்டணியிடமிருந்து ஆதரவு கிடைத்திருப்பது மிகவும் உற்சாகம் தருகின்ற ஒரு அம்சமாகும். பிலேயெலா பகுதி சமூகத்தின் ஒரு அங்கமாக இருந்த அந்தக் குடும்பத்தை தொடர் ந்தும் அங்கேயே வாழ அனுமதிக்குமாறு இவர்கள் சகலரும் அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொறிசனை வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்கள். கடந்த வருடம் நடேசலிங்கம் குடும்பம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டது.



அவுஸ்திரேலியாவின் இறுக்கமான குடிவரவுக் கொள்கையே இலங்கைக் குடும்பத்தின் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்கிறது. இந்த விவகாரத்தில் குடும்பத்தின் பாதுகாவலர்களான நடேசலிங்கத்தின் மீதும் பிரியா மீதும் பிரதமர் ஸ்கொட் மொறிசன் எந்தவிதமான தயவையும் காட்டுகிறாரில்லை. இந்தத் தருணத்தில் சரியானதையே தான் செய்வார் என்றும் பொதுவெளியில் தெரிவிக்கப்படும் கருத்துக்களை பொருட்படுத்தினால் குழப்பநிலையை வரவழைப்பதாக இருக்கும் என்றும் அவர் உறுதிபடக் கூறியிருக்கிறார். இலங்கைக்கு திரும்பிச் சென்று அங்கிருந்து புதிதாக அவுஸ்திரேலிய விசாவுக்கு விண்ணப்பிக்குமாறு நடேசலிங்கம் குடும்பத்துக்கு பிரதமர் கூறுகிறார்.

அவுஸ்திரேலியாவில் தொடர்ந்தும் இருக்க வாய்ப்புக் கிடைக்கும் என்று இந்தக் குடும்பம் சொற்ப நம்பிக்கையையேனும் கொண்டிருக்கின்றதென்றால், அதற்கு அவர்களின் இளைய மகளே காரணமாகும். அந்தக் குழந்தை அவுஸ்திரேலியாவில் பிறந்தது என்றாலும், அதை கடல் மார்க்கமாக வந்த சட்ட விரோத குடியேற்றவாசி என்றே அவுஸ்திரேலிய அதிகாரிகள் கூறுகிறார்கள். குழந்தையின் பெற்றோர் படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு வந்து சேர்ந்தவர்கள் என்று தங்கள் நிலைப்பாட்டுக்கு அதிகாரிகள் "நியாயம்" கற்பிக்கிறார்கள்.

சட்டவிரோத குடியேற்றவாசிகள் 1976ஆம் ஆண்டு தொடக்கம் அவுஸ்திரேலியாவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அந்நாட்டின் கட்டாய தடுப்புக் காவல் கொள்கை 1994ஆம் ஆண்டில் இருந்து சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்குப் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து வந்தவர்களை அந்த நாடுகளில் அவர்கள் திரும்பிச் செல்வதற்கு உகந்த சூழ்நிலை தோன்றாதவரை, அவுஸ்திரேலிய அதிகாரிகளினால் திருப்பியனுப்ப முடியாது.

நடேசலிங்கத்தையும் பிரியாவையும் பொறுத்தவரை, "தமிழ் அகதிகள் பேரவை" என்ற பெயரில் அமைக்கப்பட்ட ஒரு கூட்டமைப்பு அவர்களின் பிரச்சினைக்காக குரல் கொடுப்பது அனுகூலமான ஒரு அம்சமாகும். நடேசலிங்கம் குடும்பம் இலங்கையில் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கிறது என்று அந்த பேரவையின் பேச்சாளர் ஆரன் மயில்வாகனம் கூறியதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

தமிழர்களுக்கு இலங்கை மிகவும் ஆபத்தான இடம் என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார். மயில்வாகனத்தினால் தெரிவிக்கப்பட்ட இன்னொரு கருத்தும் அவலத்துக்குள்ளாகியிருக்கும் இந்த தம்பதியருக்கு வாய்ப்பானதாக இருக்கிறது. நடேசலிங்கமும் பிரியாவும் பிலோயெலா பகுதியில் பணியாற்றி அங்குள்ள சமூகத்திற்கு பெரும் பங்களிப்பைச் செய்தவர்கள் என்பதால் அங்கிருந்து அவர்களை அவுஸ்திரேலிய அதிகாரிகள் வெளியேற்றியது மிகவும் நேர்மையற்ற ஒரு செயலாகும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தடுப்புக் காவலில் இருக்கும் போது புதிதாக விசாவுக்கு விண்ணப்பிக்க முடியாது என்று அவுஸ்திரேலிய சட்டம் விசேடப்படுத்திக் கூறுகிறது. தாங்கள் குடியேறி வாழ விரும்புகிற ஒரு நாட்டில் அகதிகள் அந்தஸ்து கோருகின்ற நசேலிங்கத்தினதும் பிரியாவினதும் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் மேற்படி சட்டத்தில் இருந்து விதிவிலக்காக நடந்து கொள்ள முடியும் என்று அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் தற்போதைய அணுகுமுறையை ஆட்சேபிப்பவர்கள் நம்புகிறார்கள். சட்டவிரோதமாக வருபவர்களை திருப்பியனுப்பும் கொள்கையில் அவுஸ்திரேலியா மிகவும் கண்டிப்பாக இருக்கின்ற போதிலும், அகதியொருவர் தனது சொந்த நாட்டுக்கு திருப்பியனுப்பப்படும் போது அங்கு அவருக்கு ஆபத்து காத்திருக்குமாயின் திருப்பியனுப்பும் எந்த முயற்சியையும் ஐக்கிய நாடுகள் கண்டனம் செய்கிறது என்பதை அவுஸ்திரேலியா அறியும். நடேசலிங்கம்- பிரியா குடும்பம் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படுவதை நீதிமன்றம் எதிர்வரும் 18ஆம் திகதி வரை இடைநிறுத்தியிருக்கிறது. அதற்கு பிறகு என்னவாகுமோ?

## இது நம்ம கதைகள்... 57

# காத்திருப்பு



நம்பிக்கையும், காத்திருப்பும் தான் நம் வாழ்க்கையில் பல வெற்றிகளுக்கு அடித்தளமாகியுள்ளது. தோமஸ் அல்வா எடிசனின் பல வருடச் சோதனைமிகு காத்திருப்புத்தான் மின்குமிழாகி நமக்கு ஒளி தந்தது. பாண்டவர்களின் பொறுமையான காத்திருப்பே சூதில் இழந்த நாட்டை மீளவும் அவர்கள் வசப்படுத்தியது. இராமனின் நம்பிக்கையுடன்கூடிய காத்திருப்பே அயோத்தியின் அரியாசனத்தைப் பெற்றுக் கொடுத்தது. இவ்விதமாக காத்திரமான காத்திருப்புக்கள் சாதனைகளாகி வரலாறு படைத்துள்ளன.

ஆயினும் சில காத்திருப்புக்கள் அர்த்தமற்றுப் போனதுமுண்டு. தமிழர் வாழ்வியலில் இது சர்வசாதாரணம் என்பதால்தான் என்னவோ "இலவு காத்த கிளி" என்ற அடைமொழியை நாம் அடிக்கடி பயன்படுத்த வேண்டியதாகியுள்ளது. யூதர்கள் நீண்ட காலமாக பல்வேறு நாடுகளின் அடிமைத்தளைகளில் வாழ்ந்தனர். இதன் காராணமாக தமக்கு விடுதலை தர "மெசியா" (மீட்பர்) ஒருவர் வருவாரென எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் அரசியல் மீட்பரை எதிர்பார்த்திருக்க ஆன்மீக மீட்பவராக கிறிஸ்து அவதரித்தார். அவரை மீட்பராக ஏற்றுக் கொண்ட யூதர்கள் தவிர ஏனைய யூதர்கள் தம் மீட்பர் என்றோவொரு நாள் வருவாரென இன்றும் காத்திருக்கின்றனர். அதன் அடையாளமாக ஜெரிக்கோ கோட்டை மற்றும் ஜெருசலேம் தேவாலயத்தின் வெளிச்சுவரின் **(Wailing Wall)** எஞ்சியுள்ள இடிபாடுகள் முன்னே ஆண்டுதோறும் அவர்கள் கூடி அழும் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

சரியான இலக்கற்ற, புரிதலற்ற காத்திருப்புக்கள் துன்பங்களுக்கே எம்மை இட்டுச் செல்கின்றன. அண்மையில் சிம்பாவேயின் முன்னாள் ஜனாதிபதி முகாபே காலமானார். ஆங்கிலேயரின் காலனித்துவ நாடான கிழக்கு ரொடிசியாவை சுதந்திர சிம்பாபேயாக விடுதலை பெறவைத்ததில் அவருக்கும் பெரும்பங்குண்டு. ஆனாலும் விடுதலைப் போராட்டத்தின் பெரும் தலைவரான ஜோமோ கென்யாட்டாவை தந்திரத்தால் பின்தள்ளியே அவர் சுதந்திர நாட்டின் ஜனாதிபதியானார். சுதந்திரமென்றால் "தேவாலயத்தின் வானதூதர் சிலைகளுக்கு கறுப்பு வர்ணமும், பிசாசுகளின் சிலைகளுக்கு வெள்ளை வர்ணம் தீட்டுதல்"என்ற நிறவெறி விம்பமே அவரிடம் எதிரொலித்தது. அதனால் சுதந்திரத்தின் உண்மையான பண்புகளைப் பற்றி அவர் அதிகம் அக்கறை காட்டவில்லை. ஈற்றில் வெள்ளையரின் அடக்குமுறைக்கெதிராக போராடிய சிம்பாவே மக்கள் மீளவும் ரொபட் முகாபேயின் அடக்குமுறைகளுக்கெதிராக போராட்டத்தை ஆரம்பித்தனர்.

பொதுவாகத் தத்துவங்களைப் பற்றிச் சிந்திப்பவர்கள் யதார்த்தத்தை உணர்வதில் கோட்டைவிட்டுவிடுகிறார்கள். உலகம் போற்றும் விஞ்ஞானி சேர்.ஐசாக் நியூட்டன் தன் பூனைக்கூட்டில் பெரிய பூனை செல்வற்கு ஒரு கதவும், குட்டிப்பூனை செல்வதற்கு சிறிய கதவுமென இரு கதவுகள் வைத்தார் என்ற கதை பிரபலமானது. இரு பூனைகளும் ஒரு கதவாலேயே செல்ல முடியும் என்பது அவரின் சிந்தனைக்கெட்டவில்லை.

ஒரு தத்துவப் பேராசியர் வீட்டில் திருடன் புகுந்தான். எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு வெளியேற முனைந்தபோது, வீட்டுக்காரர்கள் விழித்துக் கொண்டனர். அவர்கள் போட்ட சத்தத்தில் ஊரே திரண்டு திருடனை துரத்தத்தொடங்கியது. தலைதெறிக்க ஓடினான் திருடன். எல்லோரும் திருடன் சென்ற திசையில் செல்ல, தத்துவப் பேராசிரியர் மட்டும் மறுதிசையிலோடினார். இறுதியில் அவ்வூரின் சேமக்காலை வாயிலில் அமர்ந்து கொண்டார். திருடனை துரத்துவதைவிடுத்து இவர் இங்கே வந்து அமர்ந்திருக்கிறாரேயென்று ஊரார் பேசிக் கொண்டனர். அவர்களைப் பார்த்து புன்னகைத்தவாரே பேராசிரியர் சொன்னார், அந்தத் திருடன் என்றோ ஒருநாள் இறந்தபின் இங்கே வந்துதானேயாகவேண்டும். அதுவரை காத்திருப்பேன்". அவர் காத்திருத்தல் நீண்டு கொண்டே போனது.


**காலம் கருதி இருப்பர் கலங்காது**
**ஞாலம் கருது பவர்.**

**(திருக்குறள் 15)**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# விசாரணைகளின்றி இழுத்தடிப்புச் செய்து காலம் கடத்தும் இலங்கை அரசு



## ஒருநாடு வெளிப்படையான, நியாயமான, நம்பகமான சொந்த செயல்முறையைக் கொண்டிருப்பதற்கு முற்றிலும் சட்டபூர்வ உரிமை உள்ளது- மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா

இலங்கை இராணுவம் நடத்திய கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்பதற்காக வந்திருந்த தெற்காசிய பாதுகாப்பு விவகாரங்கள் குறித்த ஆய்வாளரும், இலங்கையில் இந்திய அமைதிப் படையில் பணியாற்றியவருமான மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா, போர்க்குற்ற விசாரணைகள்நடத்தப்பட வேண்டியது முக்கியமானது என்பதை வலியுறுத்தியிருக்கிறார்.

கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கில் அவர் இதனை வலியுறுத்தவில்லை. அதற்கு வெளியே, ஆங்கில நாளிதழ் ஒன்றிடம் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டிருக்கிறார்.

அண்மையில், இலங்கையின் இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டதை அடுத்து, போர்க்குற்ற விசாரணைகள் பற்றிய விவகாரம் மீண்டும் சூடுபிடித்திருக்கிறது.

நம்பகமான போர்க்குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டது குறித்து அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கவலை வெளியிட்டன. ஐ.நா அமைப்புகளும் எதிர்ப்பை வெளிப்படுத்தின.

ஆனாலும், இராணுவத்தளபதி நியமனத்தில் வெளியார் எவரும் தலையிடும் உரிமை கிடையாது என்றும், அது நாட்டின் இறைமைக்குரிய விவகாரம் என்றும் அரசாங்கம் நிராகரித்து விட்டது.

லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து எந்த விசாரணைகளும் நடத்தப்படாமலேயே அது பொய்யானது என்றும், அது நிரூபிக்கப்பட்டு விட்டது என்றும் அரச தரப்பிலுள்ளவர்கள், எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பலர் கூறியிருந்தனர்.

ஆனால், இதுவரையில் போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பான நம்பகமான எந்தவொரு விசாரணைகளையும் அரசாங்கம் நடத்தவேயில்லை என்பது தான் உண்மை.

2015இல் ஜெனிவாவில், இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்கள், வழக்குத்தொடுநர்களை உள்ளடக்கிய - சுயதீனமான நம்பகமான விசாரணைகளை நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்தது.

அதற்குப் பின்னர், வெளிநாட்டு நீதிபதிகளை விசாரணைகளில் அனுமதிக்க முடியாது என்று அடம் பிடித்ததே தவிர, உள்நாட்டு விசாரணையையேனும் நடத்த முற்படவில்லை.

காலத்தைக் கடத்துவதில் கவனம் செலுத்துகிறதே தவிர, போர்க்குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் குறித்த எந்த விசாரணைகளுக்கும் அரசாங்கம் இன்று வரை தயாராக இல்லை.

இந்த விடயத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தல், சர்வதேசத்துக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுதல் ஆகிய இரண்டிலுமே இலங்கை அரசாங்கம் தோல்வியைச் சந்தித்திருக்கிறது.

அரசாங்கத்துக்குள் இருக்கும் உள்ளக மோதல்களை பயன்படுத்தி, பிரதமர் ரணில் தரப்பும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பும் இதற்கு தாம் காரணமல்ல, மறு தரப்பே காரணம் என்று குற்றம்சாட்டுவதில் கவனமாக இருக்கின்றன.

இரண்டு பேரும் இணைந்து அங்கம் வகித்த அரசாங்கத்தின் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்என்றகரிசனையோ பொறுப்போ இரு தரப்புகளிடமும் இல்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தான், லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இழுத்தடித்து வந்த அரசாங்கத்துக்கு, கட்டுப் போடுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக, இதனை மேற்குலக நாடுகளும், ஐ.நாவும் பயன்படுத்திக் கொண்டன.

தற்போதைய அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிவுக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழலில், இந்த அரசாங்கத்திடம் போர்க்குற்ற விசாரணைகளை நடத்துமாறு கோருவதோ, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு கோருவதோ அர்த்தமற்றது.

ஏனெனில், இந்த அரசாங்கம் பதவியில் இருந்த நான்கரை ஆண்டுகளிலும்அதனை செய்யத் தவறிவிட்டது. இனிமேல் அதனைச் செய்யப் போவதும் இல்லை. அதற்கான காலஅவகாசமும் இல்லை.

நீடித்த சமாதானத்துக்கு, நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கம் என்பன முக்கியமான அம்சங்கள் எனக் கூறியுள்ள மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா, அதனை இலங்கை அரசாங்கம் தீவிரமாக பின்பற்றுவதை அவதானிக்க முடியவில்லை என்று கூறியிருக்கிறார்.

இந்தநிலையில் தான், புதிய அரசாங்கம் போர்க்குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைகளை நடத்த வேண்டும் என்பதை அவர் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். அதற்கான சில ஆலோசனைகளையும் அவர் முன்வைத்திருக்கிறார்.

'நல்லிணக்கம் மற்றும் நிலை மாறுகால நீதிக்கு ஒரு முழு செயல்முறை உள்ளது, அது முதலில் தொடங்கப்பட வேண்டும். அடுத்ததாக, தீவிரமாகவும், நேர்மையாகவும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்" என்றும்அவர் கூறியிருக்கிறார்.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மாத்திரமன்றி, ஒட்டுமொத்தமாக இராணுவத்துக்கு எதிராக சுமத்தப்படுகின்ற போர்க்குற்றச்சாட்டுகள் குறித்தும் புதிய அரசாங்கத்தினால்விசாரிக்கப்பட வேண்டும் என்பதே மேஜர் ஜெனரல் அசோக் மேத்தாவின் நிலைப்பாடாக உள்ளது.

ஆனால், ஐ.நாவுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய, விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கின்ற அவர், இந்த போர்க்குற்ற விசாரணைகள், வெளிநாட்டுப் பங்களிப்புடன் தான் நடக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவில்லை.

அவரைப் பொறுத்தவரையில் போர்க்குற்ற விசாரணைகள் வெளிப்படையானதாகவும், நேர்மையானதாகவும் இருக்க வேண்டும் என்பதே தவிர, வெளிநாட்டு பங்களிப்பின் அவசியத்தில் ஆர்வம் காட்டவில்லை. உள்நாட்டு விசாரணைகளை நடத்துவது முக்கியம் என்பது அவரது கருத்தாக உள்ளது.

ஒரு நாடு வெளிப்படையான, நியாயமான, நம்பகமான சொந்த செயல்முறையைக் கொண்டிருப்பதற்கு முற்றிலும் சட்டபூர்வ உரிமை உள்ளது என்று மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா கூறியிருக்கிறார்.

இவரது இந்தக் கருத்தை இப்போதைய அரசாங்கமும்சரி, புதிதாக பொறுப்புக்கு வரப் போகும் அரசாங்கமும் சரி, காது கொடுத்துக் கேட்குமா என்பது சந்தேகம் தான்.

ஏனென்றால், போர்க்குற்றங்களை முற்றாக நிராகரித்த முன்னைய அரசா ங்கம், போர் முடிந்து ஐந்து ஆண்டுகளாக, குற்றச்சாட்டுகளை விசாரிக்க நம்பகமான எந்த முயற்சியையும் முன்னெடுக்கவில்லை.

போரின் போது மீறல்கள் நிகழ்ந்துள்ளன என்பதை ஏற்றுக்கொண்ட தற்போதைய அரசாங்கமும், அதனை விசாரிக்கவோ, குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கவோ முற்படவில்லை.

ஆக, இரண்டு தரப்புகளும் காலத்தைக் கடத்தி இந்த விவகாரத்தை மறந்து போகச் செய்வதில் அக்கறை கொண்டிருந்தனவே தவிர, நம்பகமான ஒரு பொறிமுறையை உருவாக்கி பிரச்சி னையைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட வில்லை.

இந்தநிலையில், புதிய அரசாங்கத்தை இந்த இரண்டு தரப்புகளைத் தாண்டி- மூன்றாவது தரப்பு ஒன்று அமைக்கப் போவதில்லை என்பது உறுதி.

எனவே, கடந்த 10 ஆண்டுகளில் இந்த விசாரணைகளை நடத்தாமல் வெற்றிகரமாக இழுத்தடித்து வந்துவிட்டனர், அடுத்த அரசாங்கத்தில் அதனை நடத்துவார்கள் என்று எதிர்பார்ப்பது முட்டாள் தனம்.

இது ஒரு புறத்தில் இருக்க, மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா கூறியிருப்பது போல, உள்நாட்டு விசாரணையை நம்பகமாக நடத்தும் தகைமையை இலங்கை கொண்டிருக்கிறதா என்பதையும் சற்று கவனத்தில்எடுத்துக்கொள்ளவேண்டியுள்ளது.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்புகள் தொடர்பாக, உண்மையான குற்றவாளிகளை கண்டறியும் நியாயமான விசாரணைகள் நடத்தப்படவில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டாக இருந்து வருகிறது.

சிறப்பு ஜனாதிபதி விசாரணைக் குழு ஒன்று விசாரணை நடத்தி அறிக்கை கொடுத்தது. இந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சில நடவடிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த பின்னர் தான், அந்தக் குழு அமைக்கப்பட்டதே சட்டப்படி செல்லாது என்று ஒத்துக் கொண்டிருக்கிறார் அந்தக் குழுவின் தலைவர்.

நாடாளுமன்ற தெரிவுக்குழு மற்றொரு விசாரணையை நடத்திக் கொண் டிருக்கிறது. பொலிஸ் மற்றும் புலனாய்வு அமைப்புகளும் தனித்தனியாக விசாரணைகளை நடத்துகின்றன.

இவை போதாது என்று தாங்கள் ஆட்சிக்கு வந்ததும் புதிய விசாரணை நடத்தப்படும் என்று மகிந்த ராஜபக்சவும் கூறியிருக்கிறார்.

தற்போதைய விசாரணைகளில் நம்பிக்கையில்லை, சுதந்திரமான விசாரணைக் குழுவொன்றை நியமிக்குமாறு பேராயர் மல்கம் ரஞ்சித் கோரியிருந்தார். அதனை ஏற்றுக் கொள்வதாக பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தாபய ராஜபக்ச கூறியிருக்கிறார்.

ஆக, ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் உள்ளக விசாரணைகள் பல தரப்பினருக்கு நம்பகமானதாக இருக்கவில்லை. பலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.


இவ்வாறான நிலையில், போர்க்குற்றச்சாட்டுகள் குறித்த உள்ளக விசாரணை மீது, பாதிக்கப்பட்ட தரப்பினரான தமிழ் மக்கள் நம்பகமான விசாரணையை கோருவதும், அது வெளிநாட்டுப் பங்களிப்புடன் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதிலும் எந்த தவறும் இல்லை.

உள்ளக விசாரணைகளின் மீது நம்பிக்கை கொள்ளக் கூடிய வகையில் நேர்மையுடனும் பக்கசார்பின்றியும் செயற்பட முடியும் என்ற உறுதியைக் கொடுக்க முடியாத ஒரு அரசாங்கத்திடம் இருந்து, மக்கள் வெளியில் இருந்தே நீதியை எதிர்பார்ப்பார்கள். அதனை தான் போர்க் குற்ற விசாரணைகளிலும் எதிர்பார்க்கிறார்கள்.

சுபத்ரா

# 'பார்த்தீபன் இன்னும் பசியுடன்தான் இருக்கிறான்'

## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பம்



இந்த உலகத்தில் எத்த னையோ தியாகிகள் தோன்றியிருக்கலாம். ஒவ்வொரு வரும் ஒவ்வொரு கோரிக்கைகளுக்காக எதை எதை எல்லாமோ தியாகம் செய்திருக்கலாம்.ஆனால் தனது சமூகத்திற்காக, தனது இனத்தின் விடிவுக்காக உயி ரையே தியாகம் செய்தவர்களின் தியாகங்களை உலகம் என் றும் போற்றி நிற்கின்றது. உலக வரலாற்றிலே போற்றப் பட வேண்டிய திலீபனின் தியாகம்பயங்கரவாதம் என்று நோக்கப்படுவது வேதனையான ஒன்று. சரி யார் இந்த திலீபன் எதற்காக இவன் தன் உயிரையே தியாகம் செய் தான் என்பதை இன்றைய இளைசமுதாயம் அறிந்திருக் குமா என்பது சந்தேகமே.

எனவே அவர்களுக்காக அந்த தியாக தீபத்தின் சிறப்பினை இங்கே தெளிவுப டுத்த வேண்டும்.

யாழ்ப்பாணம் ஊரெழு விலே பிறந்த இவரது பெயர் இராசையா பார்த்தீபன். கார்த்திகை 27.1963 இல் பிறந்த பார்த்தீபன் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆரம்ப கால முக்கிய உறுப்பினராக செயற்பட்டவர். யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாள ராக செயற்பட்டவர். 1987 புரட்டாதி 15ஆம் திகதி ஐந்து அம்சக்கோரிக்கையினை இந்தியாவிடம் முன்வைத்து காந்தியின் வழியிலே நீர்கூட அருந்தாது உண்ணா விர தம் இருந்து தனது உயிரையே தியாகம் செய்தவர். அகிம்சை ரீதியான போராட்டங்களில் துளி அளவு நம் பிக்கை கூட இல்லாது ஈழத் தமிழர்களை ஆயுத பிரியர்க ளாக மாற்றியதோடு மட்டும் அல்லாது இந்திய வல்லா திக்க இராணுவத்திற்கெதி ராக தமிழர்களை கள முனை நோக்கி நகர்த்திய தும் இந்த திலீபனின் இழ ப்பே. தனது வாழ்விலே எந்த ஒரு சந்தோசத்தையும் அனு பவிக்காத வெறும் இருபத்து நான்கு வயதான அந்த இளம் தளிர் பட்டினியால் கருகிப் போனதை எளிதில் மறக் குமா. தமிழினம்? எனவே தான் அதற்கான பல விளை வுகளை இந்திய வல்லா திக்க இராணுவம் சந்திக்க நேர்ந்தது.

அமைதிப்படை என்ற பெயரிலே தமிழர் தாயகங்களை ஆக்கிரமிப்பு செய்த இந்தியாவின் இராணுவம் இன்றுவரை மறந்திருக்காது. அகிம்சையின் ஆசனமாக விளங்கும் இந்தியா ஈழத்தமிழர்களுக்கு இழைத்த அநீதிகள் ஏராளம்.

இதுபோலவே இந்த தியாக தீபத்தின் இழப்பிற்கும் இந்தியாவே முழு பொறுப் பும். சுருக்கமாக கூறப் போனால் திலீபனை இந்தியா கொலை செய்தது என்றே கூறலாம். அவனது நியாயமான கோரிக்கைகளை இந் தியா நிறைவேற்றி இருந்தால் வாழ வேண்டிய அந்த இளம்தளிர் பட்டினித்தீயிலே பொசிங்கியிருக்காது.

அப்படி அவன் எதை கேட் டான். அவனது ஐந்து கோரிக் கைகளை அன்று நிறை வேற்ற முடியாத காரணம் என்ன?

❖மீள் குடியேற்றம் என்ற பெயரிலே வடக்கு கிழக்கில் புதிதாக திட்டமிடும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

❖ அவசரகால சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

❖ ஊர்காவற்படையின ருக்கு வழங்கப் பட்ட ஆயுதங்கள் முற்றாக களையப்பட வேண்டும்.

❖தமிழர் பிரதேசங்க ளில் புதிதாக பொலிஸ் நிலை யங்கள் திறக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற ஐந்து கோரிக்கையே ஆகும்.

ஆனால் இன்றுவரை அந்த தியாக திலீபன் கோரி க்கைகள் நிறைவேற்றப்படவில்லை. காந்திய தேசத்தி டம் காந்திய வழியிலே போராடி தோற்றுப்போனது திலீபனது அகிம்சை.இதற்காக இந்தியா இதுவரை சிறு வருத்தமோ ஆதங்கமோ காட்டிக்கொள்ள வில்லை. மாறாக அவனை தீவிரவாதியாகவும் வன் முறையாளனாகவுமே சித் தரிக்கின்றது.

ஈழத்தமிழர்களின் வர லாற்றிலே ஒரு பாரிய சோக த்தினையும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் பேரெ முச்சிக்கும் முக்கியமான ஒரு காரணியாகவும் அமைந்தது தீலீபனின் இழப்பு.

அகிம்சை ரீதியாக போரா டினால் உரிமைகளை பெற் றுக்கொள்ளலாம் என்றும் உலகத்தில் அகிம்சைதான் சிறந்த ஒரு ஆயுதம் என்றும் வரையப்பட்ட வசனம் நல் லூரான் வீதியிலே பொய்யா கிப் போனது.

உணவின்றி, நீரின்றி வாடிப்போன அந்த இளைஞனை உலகத்தின் அகிம் சையினை போதிக்கும் எந்த ஆசானும் கண்டுகொள்ள வில்லை.

ஒரு இனத்தின் விடியலுக் காக,அந்த இனத்தின் விடுதலைக்காக தன் உயிரையே தியாகம் செய்யும் அளவிற்கு இன்றைய நவீன உலகில் மனிதர்கள் யாரும் இல்லை.

உலகத்தில் ஒன்றை இழ ந்தால்தான் இன்னொன்றை பெறலாம்.

ஆனால் தன்னையே இழக்கின்ற அளவு தியாகத்தினை எவராலும் செய்யமு டியாது. அப்படி ஒரு மிகப்பெரிய தியாகத்தை செய்த தியாகி திலீபனின் தியாகம் உலகத்தின் அத்தனை தியாகங்க ளையும் விட பெரியது, பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. இந்த நூற்றாண்டின் அகிம் சாவாதியாக சமாதானத்தின் தந்தையாக போற்றப்படும் நெல்சன் மண்டேலா இருபத்தேழு ஆண்டுகள் சிறை யிலே தனது வாழ்நாளை தியாகம் செய்திருந்தார். அவரது எண்ணம் நிறைவேறியிருந்தது.

ஆனால் திலீபனின் கோரி க்கைகள் இன்று வரை நிறைவேற்றப்பட வில்லை. அவனது தியாகத்துக்கான பலன் கிடைக்கவில் லையே? நெல்சன் மண்டேலா சிறையில் இருக்கும் போதே இந் திய அரசு நேரு சமாதான விருதினை வழங்கியது. 1990 இல் பாரதரத்னா விருதினை வழங்கியது. ஆனால் தனது வஞ்சகத்தால் கொலை செய்யப்பட்ட திலீபனின் தியாகத்தினை அது மறந்து விட்டது.அதற்காக இந்திய தேசன் சிறு வருத்தம் தெரிவிக்கவும் தயாராக இல்லை.

அகிம்சை ரீதியாகப் போராடி உயிர்நீத்த ஒரு வனை பயங்கரவாதி என்று ஒதுக்கி வைப்பது அநீதி. எம் இனத்தின் விடி யலுக்காகவும் விடுதலைக் காகவும் போராடிய பல்லா யிரம் வீரர்கள் பிறந்த இந்த மண்ணிலே விடுதலைக்கு வித்தாகி வீழ்ந்த உடல்கள் எத்தனை.

எப்படி எல்லாம் போராட முடியுமோ அப்படி எல்லாம் போராடிவிட்டோம்.ஆனால் நீதியும் நியாயமும் எமக்கு கிடைப்பதாக இல்லை. இனி யும் என்ன செய்யப்போகின்றோம். ஒட்டுமொத்த தமிழினமும் அடிமைப்பட ஒரு சமூகமாக சாகப் போகி ன்றோமா? அல்லது சரித்தி ரம் ஒன்றை மாற்றி எழுதப் புறப்படப்போகின்றோமா? மரணப்படுக்கையிலே திலீ பன் சொன்னதுபோல மக் கள் புரட்சி வெடிக்கட்டும், ஒன்றுபட்ட தமிழ்ச்சமூகத் தின் குரல் ஓங்கி ஒலிக் காவிடின் ஒட்டுமொத்த தமி ழினத்தின் குரல்வளை யினை சிங்களப் பேரின வாதம் நசுக்கிவிடும். சுய நலமற்ற மனிதர்களாக மண்ணிலே வாழும் வரை சுயமரியாதையுடன் வாழ, சுதந்திரக்காற்றினை சுவா சிக்க எல்லோரும் ஒன்றுபடு வோம்.

தியாக தீபத்தின் அந்த ஒப்பற்ற வீரனின் நினைவினை சுமந்து நிற்கும் இந்த நாளிலே அவன் கோரிக்கைகளை நிறைவேற்றி அஞ்சலி செலுத்துவோம்.

ஆதி



### தியாகத்தின் உறைவிடம் திலீபன்

நல்லூரின் வடக்கு வீதியில்
அவன் எரிந்து கொண்டிருந்தான்,
மெழுகுவர்த்தி தன் முடி மேல்
ஒரு சுடரேந்தி
தன்னையே எரித்து அழிவது போல,
அவனும் தன்னை அழித்து தீயிடை
உருகிக்கொண்டிருந்தான்.
அழிவற்ற "ஜோதியாக" அவன் வல்லமை
தேசம் எங்கும் பரவிக்கொண்டிருந்தது
அவன் ஆன்மா நாட்டையே
ஆகர்ஷித்துக்கொண்டிருந்தது.
அடக்குமுறைக்கெதிரான
முதல் தமிழ் புரட்சிக்காரன்,
வீரன் "முருகன்" சாட்சியாய் வீற்றிருக்க,
பார்த்தீபன் அகிம்சை எனும் நாணேற்றி
விடுதலைக்காய் "விரதம்" பூண்டுவிட்டிருந்தான்.
உலகின் ஐந்தாவது வல்லரசு என்றும்,
அகிம்சையின் "நதிமூலம்" என்றும்,
மார்தட்டிக்கொள்ளும் இமயத்தின்
முகடுகளை தன் சாத்வீக போரால்
ஒவ்வொன்றாக உடைத்துக்கொண்டிருந்தான்.
பாரதத்தின் ஆட்சிநெறி தவறிய
செயலுக்கெதிராக திலீபன்
போராடிக்கொண்டிருந்தான்.
ஆகக் குறைந்தது வாழ்வதற்கு
ஐந்து வீடாவது தாருங்கள்,
பாண்டவர்கள் கேட்டார்கள்
துரியோதனன் வழங்க மறுத்தான்
குருச்சேத்திர போர் வெடித்தது.
தமிழர்கள் வாழ்வதற்காய்
ஐந்து அம்ச கோரிக்கைகளையாவது
நிறைவேற்றித் தாருங்கள்
பார்த்தீபன் கேட்டான்
மறுத்தது இந்திய அரசு.
அறையப்பட்டான் திலீபன் சிலுவையில்.
மரித்த மறுநாளே தமிழர் மனங்களில்
எல்லாம் நெருப்பென மீண்டும் உயிர்த்தெழுந்தான்.
யூதர்களின் ஆன்ம விடுதலைக்காக
கிறிஸ்து சிலுவை சுமந்தார்.
உலகின் கொடூரமான இறப்பு கிறிஸ்துவுடையது.
அகிம்சை போராட்டத்தில் வீழ்ந்த
முதல் உயிர் இழப்பு அது!
தன் இனத்தின் விமோசனத்திற்காக அவர்
முட்கிரீடம் சூடி கல்வாரி மலை மீதேறி
உயிர் துறந்து போனார்.
தமிழரின் வாழ்வுரிமைப் போர் மரபிலும்
பன்னிரெண்டாம் நாள் திலீபன் மரித்துப்போனான்.
எவரும் உடைக்கமுடியாத தமிழர்
"மனஉறுதியின்" அடையாளமாக
அவன் வடிவமெடுத்துக்கொண்டான்.
பூக்களையும் இலைகளையும் விட வேர்
"நோக்கத்தால்" எப்போதும் உயர்ந்தது.
ஆயுள் அதிகமானது.
பூக்களும் இலைகளும் நாட்களில் உதிர்ந்து தீரும்.
அவற்றின் நோக்கமும் எல்லைக்குட்பட்டது.
ஆனால் இவன் "வேராக" வாழ்பவன்.
என்றும் உற்றுழிந்து தீரா தமிழர் விடுதலை
தாகத்திற்காய் பலியான ஆன்மசிரஞ்சீவி!
வேம்பிலிருந்து உதிர்ந்த பூவொன்று
திலீபன் பாதங்களில் வீழ்ந்தது
அழிவற்ற எம் ஆன்மீக "வேர்"
மீது வேம்பு பூச்சொரிந்து
கண்ணீர்மல்க பிரார்த்தனை செய்தது.

துரோணர்

# கலவர பூமியில் எழும் உரிமைக்குரல்!




ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறத் துடிக்கும் அமெரிக்கா காட்டும் அவசரம், அது தாலிபான்களுடன் சமரசம் செய்யும் வேகம் ஆகியவை, ஆப்கானிஸ்தானின் குண்டூஸ் நகரப் பெண்களை அச்சத்தில் உறைய வைத்துள்ளன.

கடந்த 2015, செப்டெம்பரில் குண்டூஸ் நகரத்தில் பெண்களால் நடத்தப்பட்ட வானொலி நிலையமான ரொஷானி சூறையாடப்பட்டது. 'பெண்கள் பொது வெளிக்கு வரக்கூடாது' என்ற பழைமைவாத சித்தாந்தத்தின் அடிப்படையில் இந்தக் கொடூரத்தை நிகழ்த்தினார்கள் தாலிபான்கள். இப்போது, தங்கள் குரல்வளை மீண்டும் நெரிக்கப்படும் என்ற அச்சம் குண்டூஸ் நகரப் பெண்களுக்கு ஏற்பட்டுள்ளது.

செப்டெம்பர் 28, 2015 ஆப்கானிஸ்தான் குண்டூஸ் நகரில் வழக்கம்போல காலையில் வானொலி ரொஷானி, பெண்களுக்கான நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிக்கொண்டிருந்தது. அதன் நிறுவனர் மற்றும் எடிட்டர் ஸெடிகா ஷெர்சாய் தன் கணவர் உபைதுல்லா குவசிசாதாவுடன் அலுவலகத்துக்கு காரில் வந்து கொண்டிருந்தார்.

அப்போது ஓர் அலைபேசி



அழைப்பு வருகிறது. "நீ எங்கு இருக்கிறாய், உன்னுடைய சரியான இடத்தைச் சொல்" என்று பஷ்டூன் மொழியில் ஒருவர் கேட்கிறார். அவர் பேசிய தொனி அச்சமூட்டுகிறது. பதில் சொல்லாமல் அழைப்பைத் துண்டிக்கிறார் ஷெர்சாய். மனச்சஞ்சலத்துடன் அலுவலகத்தை நெருங்கும் போது, அவரின் உடல் நடுங்குகிறது. தாலிபான்கள், அவரது அலுவலகம் இருக்கும் தெருவுக்குள் நுழைந்துகொண்டிருந்தனர். கண்ணிமைக்கும் நேரத்தில் ரொக்கெட் குண்டுகள் அலுவலகம் அருகே விழுந்து வெடிக்கின்றன.

உஷாரான ஷெர்சாய், அவரசமாக தன் பணியாளர்களை வெளியே அழைத்து, தப்பி ஓடுகிறார். சில நிமிடங்களில் வானொலி நிலையம் சூறையாடப்படுகிறது. அத்தனையும் அழிக்கப்படுகின்றன. கடைசியாக தாலிபான்கள் அங்கு கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டு வெளியேறுகின்றனர். இரவோடு இரவாக குண்டூஸ் நகரைவிட்டு தப்பிய ஷெர்சாய், காபூலில் தஞ்சம் அடைந்தார். தாலிபான்களுக்கு அஞ்சி ஊரைவிட்டு ஓடிவந்தது அவர் மட்டுமல்ல... பல அரசு அதிகாரிகள், செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்களும்தான்.

6.000 டொலர் முதலீட்டில் தொடங்கப்பட்டு பெண்களால் மட்டும் நடத்தப்பட்ட ரொஷானி வானொலி, ஷெர்சாயின் வாழ்நாள் கனவு. அது குண்டூஸ் நகரப் பெண்களின் உரிமைக் குரல். அவர்களது தினசரி வாழ்வில் இரண்டறக் கலந்து விட்ட ஒன்று அது. ரொஷானியில் இடம்பெற்ற தொலைபேசிக் கலந்துரையாடல்கள், எழுத்தறிவு நிகழ்ச்சிகள்... பெண்களிடையே பிரபலமடைந்தன. வானொலியில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள், பலதார திருமணத்தைக் கடுமையாக எதிர்த்தன. பெண்கல்வி, சட்டம், பெண்ணுரிமை, மதப் பிரச்சினைகள், கலாசார முரண்பாடுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வானொலி வாயிலாக நடத்தினார் ஷெர்சாய்.

இதன்மூலம் ஏராளமான பெண்கள் பொலிஸில் சேர்ந்தனர். உள்ளாட்சி அமைப்பில் பங்கேற்றனர். தேர்தலில் போட்டியிட்டனர். சமூகப் பணிகளில் ஈடுபட்டனர். ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்களின் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. மதகுருமார்கள், அரசு அலுவலர்கள் கலந்துரையாடலில் பங்கேற்று பெண்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவினர். நோய்வாய்பட்ட பெண்களை சிகிச்சைக்கு வெளியே அனுப்பவே தயங்கிய சூழலில், ரொஷானியின் நிகழ்ச்சிகள் தந்த விழிப்புணர்வால் ஆண்கள் பலரும் தங்கள் வீட்டுப் பெண்களை வைத்தியசாலைக்குச் செல்ல அனுமதித்தனர்.

கடந்த 2015 இல், ஆப்கானில் தனது துருப்புகளைக் குறைத்துக்கொண்டது அமெரிக்கா. இதனால், தாலிபான்கள் மீண்டும் பலம்பெற்றனர். ரொஷானியின் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பழைமைவாத தாலிபான்கள் கண்களை உறுத்தின. முதலில், ஒலிபரப்பை நிறுத்தச் சொல்லி தாலிபான்கள் எச்சரித்தனர். பிறகு, கொலை மிரட்டல் விடுத்தனர். ஷெர்சாய் அஞ்சவில்லை. கோபமடைந்த தாலிபான்கள், வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபெற்ற மதகுரு மௌலவி நூரூல் ஹுடாவை குண்டு வீசிக் கொன்றனர்.

பாதுகாப்பு வேண்டி ஆப்கான் அரசை அணுகினார் ஷெர்சாய். அரசும் கைவிரித்தது. அச்சுறுத்தல்களுக்கு அடிபணியக் கூடாது எதிர்த்துப் போராட வேண்டும் என உறுதிபூண்டார் ஷெர்சாய். ஒலிபரப்பு தொடர்ந்தது. கடைசியில் தாலிபான்கள், வானொலி நிலையத்தைத் தாக்கினர். ஒன்பது ஆண்டுகளாக பெண்ணுரிமைக்காக ஒலித்த குரல், கண்ணிமைக்கும் நேரத்தில் நெரிக்கப்பட்டது.

ஆனாலும், ஷெர்சாய் சோர்வடையவில்லை. அடுத்த மூன்று மாதங்களில் தாலிபான்களை விரட்டி, குண்டூஸ் நகரை மீட்டது அரசுப்படை. நண்பர்கள் உதவியுடன், ஷெர்சாய் மீண்டும் வானொலி சேவையைத் தொடங்கினார். மீண்டும் அவரின் குரல் குண்டூஸில் கம்பீரமாக ஒலிக்கத் தொடங்கியது. ஆனால், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தாலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தொடங்கியுள்ளது அமெரிக்கா. தாலிபான்கள் அட்டூழியம் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியிருக்கிறது. பெண் கடத்தல்கள் அதிகரித்து வருகின்றன. பெண் குழந்தைகளை, பாடசாலைக்கு அனுப்பத் தயங்குகிறார்கள் பெற்றோர்கள். அமெரிக்கா-தாலிபான்கள் பேச்சுவார்த்தை, அமைதிக்கானதாக அமைய வேண்டும். 2015 இன் நிலை மீண்டும் வந்துவிடக் கூடாது என்பதே குண்டூஸ் நகரப் பெண்களின் ஒரே பிரார்த்தனை!

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அவன்தான் மனிதன்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்: ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா



அன்பு நடமாடும் கலைக் கூடமே
ஆசை மழை மேகமே
கண்ணில் விளையாடும் எழில் வண்ணமே
கன்னித் தமிழ் மன்றமே

அன்பு நடமாடும் கலைக் கூடமே
ஆசை மழை மேகமே
கண்ணில் விளையாடும் எழில் வண்ணமே
கன்னித் தமிழ் மன்றமே

மாதவிக் கொடிப் பூவின் இதழோரமே
மயக்கும் மதுச் சாரமே... ஏ...
மாதவிக் கொடிப் பூவின் இதழோரமே
மயக்கும் மதுச் சாரமே
மஞ்சள் வெயில் போலும் மலர் வண்ண முகமே
மன்னர் குலத் தங்கமே
பச்சை மலைத் தோட்டம் மணியாரமே
பாடும் புது ராகமே

அன்பு நடமாடும் கலைக் கூடமே
ஆசை மழை மேகமே

கண்ணில் விளையாடும் எழில் வண்ணமே
கன்னித் தமிழ் மன்றமே

வெள்ளலை கடலாடும் பொன்னோடமே
விளக்கின் ஒளி வெள்ளமே... ஏ...
வெள்ளலை கடலாடும் பொன்னோடமே
விளக்கின் ஒளி வெள்ளமே
செல்லும் இடம் தோறும் புகழ் சேர்க்கும் தவமே
தென்னர் குல மன்னனே

இன்று கவி பாடும் என் செல்வமே
என்றும் என் தெய்வமே

மாநிலம் எல்லாமும் நம் இல்லமே
மக்கள் நம் சொந்தமே

காணும் நிலமெங்கும் தமிழ் பாடும் மனமே
உலகம் நமதாகுமே

அன்று கவி வேந்தன் சொல் வண்ணமே
யாவும் உறவாகுமே


அன்பு நடமாடும் கலைக் கூடமே
ஆசை மழை மேகமே

கண்ணில் விளையாடும் எழில் வண்ணமே
கன்னித் தமிழ் மன்றமே




சித்தார்த். ஜிவி பிரகாஷ் இருவருமே நல்ல கதைகளை தேடி நடித்துவருகின்றனர். அந்த வைகையில் இயக்குநர் சசி இயக்கிய சிவப்பு மஞ்சள் பச்சை படம் என்ன கதை களத்தில் அமைந்துள்ளது என்பதை பற்றிப் பார்ப்போம்.

ஜீவி பிரகாஷ் லெஜிமோல் ஜோஸ் அக்கா தம்பிகள். இவர்களின் பெற்றோர் காலமானதால் தன்னுடைய அத்தையின் வீட்டில் வளர்கிறார்கள்.



ஜீவி பிரகாஷ் பைக் ரேசர். சித்தார்த் போக்குவரத்து காவலர்

ஒரு முறை ஜீவி பிரகாஷ் நண்பர்களுடன் சேர்ந்து பைக் ரேஸில் சாலை விதிகளை மீறி ரேஸில் ஈடுபடுவதை கண்ட சித்தார்த் ஜீவியை கைது செய்கிறார்.

ஜீவியை சித்தார்த் கைது செய்ததனால் ஜீவி பைக் ரேசில் தோற்று போகும் சூழ்நிலை ஏற்பட ஜீவிக்கு சித்தார்த் மேல் பகை உருவாகிறது.

ஜீவி சித்தார்த்தை பழி வாங்க துடிக்கும் நேரத்தில் எதிர்பாராத விதமாக ஜீவியின் அக்காவை சித்தார்த்தை திருமணம் செய்கிறார்.

இருவரின் பகை இந்த திருமணத்தில் என்ன மாற்றங்களை கொடுக்கிறது என்பதுதான் கதை .

பெற்றோர் இல்லாமல் அக்காவின் அரவணைப்பில் வளர்ந்ததால் அக்கா பாசம் தனக்கு மட்டும் சொந்தம் என்றிருக்கிறார் ஜீவி. படம் ஆரம்பத்தில் அக்கா தம்பி பாசம் அவ்வளவு பிணைப்பு இல்லாதமாதிரி தெரிந்தாலும் படம் போக போக நல்ல உணர்வுகளை கொடுக்கிறது .

ஜீவி விளையாட்டு தனமாக இருந்தாலும் ஜீவிக்கும் காஷ்மீரா பர்தேஷி இடையில் காதல் ஏற்பட, காஷ்மீரா பர்தேஷி நிறைய இடத்தில் ஜீவிக்கும் அவரது அக்காவிற்கும் ஆதரவாக அமைந்திருக்கும் காட்சிகள் ரசிகர்களை கவர்ந்துள்ளது.



ஜீவிக்கும் சித்தார்த்துக்கு இடையில் உள்ள பகையை தாண்டி சித்தார்த் லெஜிமோல் ஜோஸ் திருமணம் செய்துகொள்ள தன் பேச்சை கேட்காமல் அவளுக்கு பிடித்தவரை திருமணம் செய்கிறாள், அதனால் சொந்த அக்கா கல்யாணத்திற்கு வரா மல் போவது ஜீவியின் பாசப்போராட்டத்தை வெளிப்படுத்துகிறது.

இருவருக்கும் திருமணம் முடிய ஜீவியை சித்தார்த் குடும்பத்திற்கு பிடிக்கவில்லை என்றாலும் முகம் சுழிக்காமல் ஜீவையை சித்தார்த் குடும்பம் கையாள்வது படத்தில் பிளஸ்.

படத்தின் ஒளிப்பதிவு சிறப்பாக அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக ரேஸ் காட்சிகளை படம்பிடித்த விதம், சித்தார்த் பல இடங்களில் லைவ் லொக்கேஷனில் நடித்துள்ளார்,

அதையெல்லாம் மிக சிறப்பாக படம்பிடித்துள்ளார் ஒளிப்பதிவாளர் பிரசன்னா.

சிவப்பு மஞ்சள் பச்சை என்றவுடன் முழுக்க முழுக்க சமுதாயம் சார்ந்த படம் என்று நினைத்து செல்ல பாச போராட்டத்தில் கட்டி விடுகின்றனர்.



மே 2019 இலிருந்து, நான்கு இலங்கைப் படகுகள் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவைச் சென்றடைய முயற்சித்தன. இவற்றில் எவையுமே வெற்றிகாணவில்லை. படகிலிருந்த அனைவருமே இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவில் குடியேற முயற்சிக்கும் எவரையுமே அவுஸ்திரேலியா ஏற்றுக்கொள்ளாது. இதில் விதிவிலக்குகள் எவையும் கிடையாது.

நீங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, திருப்பி அனுப்பி வைக்கப்படுவீர்கள். அத்துடன், இனிமேல் ஒரு போதுமே அவுஸ்திரேலியாவுக்குச் செல்லவோ, அங்கு குடியிருக்கவோ அல்லது தொழில் புரியவோ அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

கடந்து ஐந்து வருடங்களில், இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவைச் சென்றடைய எத்தனித்த ஒவ்வொரு ஆட்கடத்தல் படகும், இலங்கை அல்லது அவுஸ்திரேலிய அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோத புலம் பெயர்வுக்கான வாய்ப்பு உங்களுக்கு அறவே கிடையாது.

AUSTRALIA.GOV.AU/ZEROCHANCE

Australian Government

அறவே இல்லை



# பூம்...பூம்...பும்ரா!

பாதகங்களைச் சாதகமாக்குவது தான் ஒரு உலகத்தர வீரருக்கான அடையாளம். பும்ரா அதைத்தான் செய்திருக்கிறார்.

ஜஸ்ப்ரீத் பும்ரா... விவியன் ரிச்சர்ட்ஸ், சச்சின் டெண்டுல்கர், மைக்கேல் கிளார்க், ஜோரூட் என ஒவ்வொரு தலைமுறை பட்ஸ்மேனையும் வியக்கவைத்துக் கொண்டிருக்கும் பந்துவீச்சுப் புலி. எவ்விதப் போட்டியுமின்றி விராட் ஹோலி அணிந்திருக்கும் கிரிக்கெட் மகுடத்திற்கு உரிமை கொண்டாடப் போகும் பாகுபலி!

பட்களையே பிடித்துப் பழகிய சிறுவர்களின் கைகள் இன்று இவரது பௌலிங் ஆக்சனைப் பயிற்சி செய்துகொண்டிருக்கின்றன. ஹோலியும் டோனியும் ஆட்கொண்டிருந்த பேஸ்புக் புரொஃபைல் போட்டோக்களை பும்ரா ஆட்கொண்டிருக்கிறார்.

இந்தியாவில் ஒரு பௌலர் இப்படிக் கொண்டாடப்படுவது இதுவரை வழக்கத்தில் இல்லாதது. இஷாந்த், உனத்கட் போன்ற பௌலர்கள் தமிழ் சினிமாக்களில்கூட கலாய் பொருளாக இருந்த நிலையில், இப்படியான ஒரு மாற்றத்தை பும்ரா ஏற்படுத்தியிருக்கிறார் என்பது சாதாரண விடயம் இல்லை.

இந்த எழுச்சி சாதாரணமாக நிகழ்ந்ததல்ல. வெறும் எண்களால் சொல்லக்கூடியதும் அல்ல. தீர்க்கமான முயற்சியால் ஏற்பட்ட முன்னேற்றம் இது. 'இந்த பௌலிங் ஆக்சனை வைத்துக்கொண்டு அதிக காலம் ஈடுகொடுக்க முடியாது' என்றார்கள். 'அடிக்கடி காயம் ஏற்படலாம்' என்று அச்சுறுத்தினார்கள். 'கைகளை இப்படிப் பயன்படுத்தினால் ஸ்விங் செய்ய முடியாது' என்றார்கள். 'டெஸ்ட் போட்டிகளில் வெற்றி கிட்டாது' என்று ஆரூடம் சொன்னார்கள்.

'அவுட்ஸ்விங் செய்யவே முடியாது' என்றும் சொன்னார்கள். அவரது வித்தியாசமான பௌலிங் ஆக்ஷனால் ஒவ்வொரு கட்டத்திலும் அவர் மீது கேள்வியும் சந்தேகங்களும் எழுந்துகொண்டேதான் இருந்தன. ஆனால், அனைத்திற்கும் பதில் சொல்லியிருக்கிறார் பும்ரா, அதே வித்தியாசமான பௌலிங் ஆக்சனால்!

கிரிக்கெட் வீழ்ந்துகொண்டிருக்கிறது என்கிறார்கள். மாற்றங்கள் செய்யவேண்டும் என்கிறார்கள். ஆனால், கிரிக்கெட்டின் அடிப்படையிலும் அந்த மாற்றத்தைப் புகுத்திவிடுகிறார்கள். அதனால்தான் சரிவில் விழுந்த இந்த விளையாட்டால் மீள முடியவில்லை. மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். ஆனால், ஒரு விடயத்தின் உண்மைத்தன்மையில் ஏற்படும் மாற்றம்... அத்திபாரத்தில் ஏற்படும் மாற்றம், அதைச் சுற்றி எழுப்பப்படும் எப்பேர்ப்பட்ட கோட்டையையும் ஆட்டம் காணச் செய்துவிடும். பும்ரா, இதில் புத்திசாலி. பும்ரா என்ற அந்த விசித்திர பௌலரை உருவாக்கிய எந்த விடயத்தையும் மாற்றவில்லை. தன் அடிப்படையில் எந்த மாற்றமும் செய்யாமல், தன்னை மெருகேற்றிக்கொண்டிருந்தார்.



மிகச் சிறிய இடத்தில், டென்னிஸ் பால் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்ததால், மற்ற வேகப் பந்து வீச்சாளர்களைப் போல் வெகுதூரம் ஓடி வந்து பந்து வீசப் பழகவில்லை. அந்தச் சிறிய இடத்திலேயே ஓடி வந்து தன் மணிக்கட்டைப் பயன்படுத்தி பந்துக்கு வேகம் கொடுத்தார். மாவட்ட, மாநில, தேசிய அளவில் ஆடிய போதும் சரி, சர்வதேச அரங்கில் ஆடியபோதும் சரி, அவர் ஓடி வருவதற்கு நிறையவே இடம் இருந்தது. ஆனால், பும்ரா அதைச் செய்யத் தயாராக இல்லை. தான் யாரோ, தன்னை உருவாக்கியது எதுவோ அதை அப்படியே தொடர்ந்தார்.

அந்த ரன்-அப்பிற்குப் பிறகான தன் ஒவ்வொரு அசைவிலும் ஆச்சர்யத்தைப் புதைத்து வைத்திருந்தார். அதுதான் அவருக்கு ஒவ்வொரு நாளும் விக்கெட்டுகளையும் முன்னேற்றத்தையும் பரிசளித்தது. லைன் அண்ட் லென்த்தில் துல்லியமாகப் பந்து வீசினார். தன் முழங்கையை மடக்காமல் அற்புத யார்க்கர்கள் வீசினார். தன் கைகளைப் பார்த்து பட்ஸ்மேன்கள் கணிக்க முடியாத அளவுக்கு வேரியேஷன்கள் காட்டினார். இன் ஸ்விங், அவுட் ஸ்விங் என இருபக்கமும் பந்தை மூவ் செய்து மிரட்டினார். பௌன்ஸுக்கு ஒத்துழைக்காத ஆடுகளங்களிலும் பட்ஸ்மேன்களின் ஹெல்மெட்களைப் பதம் பார்த்தார். ஷார்ட் லென்த்தில் பிட்சாகும் பந்துகளை, பௌன்ஸ் ஆகாத வகையிலும் வீசினார். எல்லாம் 140 கிலோமீற்றர் வேகத்தில்!

இயான் பிஷப் போன்ற ஜாம்பவான்களே 'பும்ராவின் பந்துவீச்சைப் புரிந்துகொள்ள முடியவில்லை' என்று வியந்தார்கள். அதைப் புரிந்துகொள்ள முற்படவேண்டாம் என்றார்கள் வல்லுநர்கள். ரொக்கெட் அறிவியல், மேக்னஸ் எஃபெக்ட், லேமினார் ஃப்ளோ, டர்ப்யூலன்ட் ஃப்ளோ என இயற்பியல் உதவிகொண்டு பும்ரா எனும் அதிசயத்தைப் புரிந்துகொள்ள முற்பட்டனர் பலர். ஆம், பும்ரா எனும் இந்த அதிசயத்தைப் புரிந்துகொள்ள கிரிக்கெட் தெரிந்தால் மட்டும் போதாது. அதன் ஒவ்வொரு அசைவையும் அனுபவிக்க வேண்டுமெனில், ஆச்சர்யப்பட வேண்டுமெனில், சிலாகிக்கவேண்டுமெனில் அந்த அறிவியலும் புரியவேண்டும்.

பாதகங்களைச் சாதகமாக்குவது தான் ஒரு உலகத்தர வீரருக்கான அடையாளம். பும்ரா அதைத்தான் செய்திருக்கிறார். எந்தெந்த விடயமெல்லாம் அவருக்கு நெகட்டிவ் என்றார்களோ, இன்று அதைத்தான் பொசிட்டிவ் என்று கொண்டாடுகிறார்கள். டெஸ்ட் கிரிக்கெட்டில் தாக்குப்பிடிக்க முடியாது என்றவர்களுக்கு, ஹாட்ரிக் விக்கெட்டோடு சாதித்துக் காட்டியிருக்கிறார். மொத்த உலகமும் வியந்த, வியக்கும் மேற்கிந்தியத்தீவு பௌலிங் ஜாம்பவான்களே வியந்து பேசும் அந்த வார்த்தைகள் போதும்... அதற்கு மேல் அவரைப் புகழ்வதற்கு வார்த்தைகள் கிடையாது. சச்சின், டோனி, ஹோலி என்று பட்ஸ்மேன்களையே மையமாக வைத்து இயங்கிக் கொண்டிருந்த இந்திய கிரிக்கெட்டுக்கு மாற்றுப் பாதை காட்டியிருக்கிறது இந்த வேகப் புயல்!

"அந்த வேகம், அந்த அக்ரஸன், அந்தத் திறமை, தரமான பட்ஸ்மேன்களைத் தடுமாற வைக்கும் அந்த வியூகம், அவர்களின் திட்டங்களைத் தகர்த்தெறியும் ஆற்றல்... இவற்றையெல்லாம் பார்க்கும் போது, அவர் நிச்சயமாக எங்களுள் ஒருவராக இருந்திருப்பார். அவர் ஒரு முழுமையான பௌலர். எந்தக் கால கட்டத்திலுமே அவரால் விளையாடியிருக்க முடியும்!" - கர்ட்லி ஆம்ப் ரோஸ், மேற்கிந்தியத்தீவுகள்

"பும்ரா மட்டும் எங்கள் கால கட்டத்தில் பிறந்திருந்தால், அவரை நிச்சயமாக எங்கள் பந்து வீச்சுக் கூட்டணியில் சேர்த்துக்கொண்டிருப்போம். கணிக்க முடியாத ஒரு வித்தியாசமான பௌலர்தான் எங்கள் பந்துவீச்சில் இல்லாமலிருந்தார். சொல்லப்போனால், பும்ரா போன்ற ஒரு பௌலரைத்தான் எங்களால் உருவாக்கவே முடியவில்லை." - ஆண்டி ராபர்ட்ஸ், மேற் கிந்தியத்தீவுகள் அவரிடம் ஒரு வித்தியாசம் இருக்கிறது. பெரும்பாலான பௌலர்களின், பௌலிங் ஆக்ஷனில் இருக்கும் நேர்த்தியும் அழகும் அவரிடம் இல்லை. எக்ஸ்ட்ரா பௌன்ஸ் ஏற்படுத்துகிறார். மிகப் பெரிய ரன்-அப் இல்லை மெதுவாகவே ஓடி வருகிறார். தன் ஆற்றலைச் சரியாகச் சேமித்து வைக்கிறார். பலமாகப் பந்தை பிட்ச் செய்கிறார். கொஞ்சம் கூட அவரிடம் பயமில்லை. பட்டிங் செய்வது யார் என்பது பற்றிய கவலையில்லை. அதுதான் அவரை வெற்றிபெற வைத்திருக்கிறது.

# யானையும் நாயும்


ஒரு சமயம், ஒரு யானையும் ஒரு நாயும் ஒரே நேரத்தில் கர்ப்பமானது. மூன்று மாதத்தில் நாய் தன் குட்டிகளை ஈன்றது. ஆறு மாதங்கள் கழித்து மறு படியும் நாய் கர்ப்பமானது. அடுத்த மூன்று மாதத்தில் மறுபடியும் நாய் தன் குட்டிகளை ஈன்றது. இது வழக்கமாக தொடர்ந்தது. தன் பதினெட்டாவது மாதத்தில், நாய்யானையிடம்சென்று கேட்டது.

"யானையே, நீ உண்மை யிலே கர்ப்பம் தரித்தாயா? நீயும் நானும் ஒரே சமயத்தில் தான் கர்ப்பமானோம், நான் இதோடு மூன்று முறை கருத்தரித்து குட்டி களை ஈன்றுவிட்டேன், இப்பொ ழுது அவைகள் வளர்ந்து விட் டன, ஆனால் நீ இன்றுவரையில் கர்ப்பமாகவே இருக்கிறாயே, என்னதான் நடக்கிறது சொல்! என்றது. அதற்கு சற்றும் பதற்றப் படாமல் யானை பதிலளித்தது.

"தோழியே நீ ஒன்றைபுரிந்து கொள்ள வேண்டும், நான் சும ந்து கொண்டிருப்பது நாய்க்குட்டி அல்ல, யானை குட்டியை. நான் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறைதான் ஈன்றெடுக்க முடியும். என் குழந்தை விழுவதை உண ரும் இந்த பூமி. என் குழ ந்தை நடந்தால், அதை மனி தர்கள் நின்று பிரமித்து பார்ப்பார்கள். நான் பிரமாண்டத்தை சுமக்கிறான், அதுவே பெருமை எனக்கு" என்றது.

அதனால், மற்றவர்களின் வேண்டுதல்களுக்கு பதில் கிடைத் ததை எண்ணி நம்பிக்கை இழ க்காதீர்கள். மற்றவர்களின் சாத னைகளையும், புகழையும் பார் த்து பொறாமை படாதீர்கள். உங் களது உழைப்புக்கும், தேடலு க்கும் அங்கீகாரமும், புகழும் கிடைக்கவில்லை என்று காணா மல் போய்விடாதீர்கள்.

வாழ்க்கையை வாழ்வதை விட, சாதிப்பதுதான் பெருமை. அதனால். நீங்களே உங்க ளுக் குள் சொல்லி கொல்லுங்கள், " எனக்கென்று ஒரு நேரம் வரும், வானம் வசப்படும். என் சாத னைகள் மக்கள் பிரமிப்பாக பார் ப்பார்கள். நான் சாதிக்கும் நேரம் வெகுதூரம்இல்லை. " என்று.



# அன்பான கணவன்



தன் மனைவியை சில விட யங்களுக்காக அடிக்கடி கடிந்து கொள்வதால் அவள் கணவனி டம் கேட்டாள்... ஏங்க என்னை இப்படி கண்டிப்புடன் நடத்துகிறீர் கள்...?? என்னை கொஞ்சம் சுதந்திரமாக விடலாமே என்று... ஆனால் அதை கணவன் சற்று கஷ்டமாகவே உணர்ந்தார்... இதை எப்படி இவளுக்கு சொல் லிக் கொடுப்பது என யோசித் தார்...!

ஒரு நாள் மனைவி தன் கண வனிடம் வந்து கேட்டாள்.. ஏங்க நான் பட்டம் விட்டு விளையாடப் போகிறேன், நீங்களும் வாங்க.., என அழைத்துக் கொண்டு வீட் டின் மொட்டை மாடிக்கு சென் றாள்.. பட்டத்தை நூலில் கட்டி பறக்கவிட்டு மகிழ்ந்தாள்.

அப்படி மகிழ்ந்திருக்கும் வேளையில் கணவன்கேட்டார்... பட்டம் மேலே பறக்க, பறக்க அழகாய் இருக்கி றது ஆனால் அதன் விருப்பம் போல பறக்க முடியவில்லை.. அத ற்கு தடை யாய் இருப்பது என் னம்மா.என கேட்டார்.

மனைவி பட்டென பதில் சொன்னாள் இந்த நூல் தான் கணவன் அதை தன் இஷ்டத்திற்கு விடாமல் கட்டி வைத்திருக்கிறது என்று சொன் னாள்.

அப்படியா என கேட்டுவி ட்டு அந்த நூலை அப்படியே அறுத்து விட்டார்.. பட்டமும் தன் இஷ்டபடி பறந்தது. ஆனால் சற்று நேரத்தி லேயே கிழிந்த காகிதமாய் கீழே விழுந்தது. கணவன் சொன் னார்.

இந்த பட்டத்தை தன் இஷ்டபடி பறக்கவிடாமல் தடுக்கவில்லை.. சூநேரானவழியில் இந்த பட்டம் பறந்து சூஉயரங்களை அடைய இந்த நூல் உதவியாய் இருக் கிறது...!

இதே போலத் தான் உன் கணவனாகிய நானும் ஒரு நூல் தான்... நீதான் அந்த பட்டம்... நீ என்னுடையபேச்சை கேட்டு அதன்படி நடப்பாயெனில் என் பாதுகாவலுடன் உயர பறக்க லாம்...! உன் இஷ்டப்படி வாழ நினைத்தால் அந்த பட்டம் கிழிந்து காகிதம் ஆனது போல உன் வாழ்க்கையும் சீரழிந்து விடும்.. இப்போது புரிந்திருப்பாய் ஏன் உன்னை கண்டித்தேன் என்பதனை... நூலாகிய என்னை அறுத்துவிடாதே என்று சொல்லும்போதே மனைவி தன் கணவனை கட்டி அணைத்துக் கொண்டாள்...!! ஆம் அன்பான மனைவிகளே... உங்களுக்கு இனிமையாய் தோன்றுகின்ற வழிகள் ஏராளம் இருக்கலாம்..

ஆனால் அவற்றின் முடிவு சூபயங்கரமானது.. எனவே கணவருக்கு கீழ்படிந்துவாழ கற்றுக் கொள்ளுங்கள் உங்கள் இனிய வாழ்வு உங்களை வரவேற்கும்...!!!

கணவனின் அன்பும், கண்டிப்பும் இருந்தால் மனைவி, குடும்பவாழ்வு இனிமையாக அமையும்.




## ராகவன்

கெட்டவனுக்குக்கூட நன்மை செய்... அது தப்பல்ல... நல்லவனுக்கு மட்டும் கெடுதல் செய்யாதே.. அது தர்மமல்ல



## ரேகா

வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானால் நல்ல நண்பர்கள் தேவை. வாழ்நாள் முழுவதும் வெற்றிபெறவேண்டுமானால் ஒரு எதிரியாவது தேவை



## தீபன்

நீண்ட நேரம் இருக்காது அதிர்ஷ்டம்... நீண்ட நேரம் வராது சிபாரிசு... எல்லாப்பொழுதும் கிட்டாது உதவி.... எப்போதும் ஜெயிக்கும் தன்னம்பிக்கை




## மாதவி

வாய்ப்புக்கள் வரும் எனக் காத்திருக்காதே. நீயே அதை உருவாக்கு. தன் வீட்டுக் கதவு என்றாலும் தட்டினால்தான் திறக்கும்




## நிரோஸ்

கோபத்தில் எது கிடைத்தாலும் வீசி எறிய எல்லோராலும் முடியும்...ஆனால் அந்தக் கோபத்தையே வீசி எறிய ஒரு சிலரால் மட்டுமே முடியும்



## சந்திரா

இதயம் உடைந்துவிடாமல் இருக்க இறுகக் கட்டியிருக்கும் கயிறுதான் நம்பிக்கை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 194

# டெங்கு காய்ச்சல்



**1) டெங்குக் காய்ச்சல் என்றால் என்ன?**

டெங்குக் காய்ச்சல் என்பது வைரஸ் மூலம் பரவுகின்ற ஒரு தொற்று நோயாகும். இதை ஏற்படுத்தும் வைரஸ்களாவன DEN , DNE2,DEN3,DEN4 என்பனவாகும். இந்த வைரஸ்களின் காவிகளாக ஈடிஸ் வகையைச் சேர்ந்த (Aedes Algypti, Aedes Albo pictos) நோய்த் தொற்றுள்ள பெண் நுளம்புகள் செயற்படுகின்றன.

**2) டெங்குக் காய்ச்சல் எவ்வாறு பரவுகின்றது? எவ்வாறு உண்டாகின்றது?**

இது நுளம்புக்கடியின் மூலமாக மட்டுமே ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவும்.ஈடிஸ் இஜிப்டி வகை நுளம்புகள் ஒரு வகை வெள்ளை நிற உடம்பு மற்றும் கால்களுடன் இருக்கும்.இந்த நுளம்பு டெங்கு நோயாளினுடைய இரத்தத்தை உறிஞ்சும் போது டெங்கு வைரஸையும் பெற்று விடுகின்றது.

பின்பு இதே நுளம்பு இன்னொருவருடைய இரத்தத்தை உறிஞ்சும் போது இந்த டெங்கு வைரஸை அவருடைய இரத்தத்தில் பாய்ச்சி விடுகின்றது.டெங்கு வைரஸானது இரத்தத்திலிருந்து நிணநீர் நாளங்களுக்கு சென்று அங்கு பெருக்கம் அடைகின்றன. போதிய எண்ணிக்கையில் பெருக்கம் அடைந்தவுடன் அறிகுறிகளை தோற்றுவிக்கின்றன.

**3) டெங்கு தொற்று ஏற்பட்ட எல்லோருக்கும் அறிகுறிகள் ஏற்படுமா? ஏற்படுமாயின் வைரஸ் தொற்றிய தினத்திலிருந்து எத்தனை நாட்களுக்குப் பின் அறிகுறிகள் ஏற்படும்?**

சிலருக்கு இது எவ்வித அறிகுறியையும் உண்டாக்குவதில்லை. மேலும் சிலருக்கு சில அறிகுறிகள் மட்டுமே இருக்கும். டெங்கு நோயின் அடைப்புக்காலம் (Incubation Period) அதாவது வைரஸ் தொற்றிய தினத்திலிருந்து நோய் அறிகுறிகள் உண்டாகும் தினம் வரையான காலம் 3-14 நாட்களாகும்.

**4) நோய் அறிகுறிகளை கொண்ட நபர்களுக்கு எவ்வாறான நோய் நிலைமைகள் ஏற்படலாம்?**

i. சாதாரண வைரஸ் காய்ச்சல் நிலைமை (undifferentieted fever )

ii. டெங்கு காய்ச்சல் (dengu fever - DF )

iii. டெங்கு குருதிப் பெருக்கு நிலைமை (dengue heamorhagic fever - DHF)

iv. அசாதாரண நோய் அறிகுறியுடன் கூடிய டெங்கு நோய் நிலைமை (Expended dengue syndrome)

இவற்றுள் கூடுதலாக ஏற்படுவது டெங்கு காய்ச்சல் (DF) மற்றும் டெங்கு குருதிப் பெருக்கு நிலைமை (DHF) ஆகும். இறுதியில் குறிப்பிடப்பட்ட அசாதாரண நோய் அறிகுறியுடன் கூடிய டெங்கு நோய் நிலைமை மிக அரிதாகவே ஏற்படுகின்றது. (<1%)

**5) டெங்கு காய்ச்சல் (DF) மற்றும் டெங்கு குருதிப்பெருக்கு (DHF) என்பவற்றின் அறிகுறிகள் என்ன?**

**டெங்குக் காய்ச்சல் (DF)**

ஒரேடியாக ஏற்படும் காய்ச்சல், கடுமையான தலைவலி, பின்புறக் கண்களில் வலி, மூட்டுக்களிலும் தசைகளிலும் வலி (இதனால் எலும்பு முறிவு, காய்ச்சல் எனவும் அழைக்கப்படும்), சில நோயாளிகளுக்கு சிவப்பு நிற கொப்புளங்கள் ஏற்படுவதுடன் சில வேளைகளில் முரசு, மூக்கு, தோல் மற்றும் சளி என்பவற்றிலிருந்து குருதிக்கசிவு ஏற்படலாம்.

**டெங்கு குருதிப் பெருக்கு (DHF)**

இந்நோய் நிலைமை சில நோயாளர்களுக்கு ஏற்படும்.இது ஏற்படுமாயின் 3 கட்டங்களாக ஏற்படும்.

➢ காய்ச்சலுடன் கூடிய கட்டம் (febrile phase )

a) 2-7 தினங்கள் வரை காணப்படும்.

b) தொடர்ச்சியான கடுமையான காய்ச்சல், முகம் சிவந்து போதல், உடம்பில் சிவப்பு நிற கொப்புளங்கள் தோன்றல், மூட்டு வலி, தசை வலி, தலை வலி, குமட்டல், வாந்தி மற்றும் வயிற்றோட்டம் என்பன ஏற்படலாம்.

➢ நெருக்கடியான கட்டம் (critical phage/leakage phage)

a) இது 1-2 தினங்களுக்கு காணப்படும்.

b) இக்கட்டம் சிறு குருதிக் கலன்களிலிருந்து குருதித் திரவ விழையம் கசிய ஆரம்பிக்கும் வேளையிலும் காய்ச்சல் தணிய ஆரம்பிக்கும் வேளையிலும் ஆரம்பமாகும்.

c) சிறு குருதிக்கலன்களிலிருந்து குருதித்திரவவிழையம் கசிந்து நெஞ்சறைக்குழி, வயிற்றுக்குழி என்பவற்றை அடைவதால் மூளை, சிறுநீரகம், ஈரல் போன்ற அத்தியாவசிய அங்கங்களுக்கு செல்லும் குருதியின் அளவு குறைந்து நோயாளி அதிர்ச்சி (shock) நிலைமைக்கு ஆளாகக் கூடும்.

d) இந்நிலைமையை இனங்கண்டு சிகிச்சை அளிக்காவிடின் நோயாளி மரணிக்கவும் வாய்ப்புண்டு.

➢ குணமடையும் கட்டம். (convelescent/ Recovery phage)

a) இது 2-5 தினங்கள் வரை காணப்படும்.

b) குணமடைவது போன்ற அறிகுறிகள் , அதிகமானபசி, (சிலருக்கு) இதயத்துடிப்பு குறைவடையும், குணமடைவதற்கான கொப்புளங்கள் (சிவப்பு நிற பின்னணியில் வெள்ளை நிற கொப்புளங்கள்) உடல் பூராகவும் அரிப்புணர்ச்சி காணப்படும். (உள்ளங்கை மற்றும் உள்ளங்கால்களில் அதிகமாக காணப்படும்) அதிகமாக சிறுநீர் கழித்தல் போன்ற அறிகுறிகள் ஏற்படும்.

**6) டெங்குக் காய்ச்சல் வந்த நோயாளிக்கு மீண்டும் அந்த நோய் வர வாய்ப்புள்ளதா?**

ஆம் வாய்ப்புள்ளது.ஏனெனில் 4 வகையான டெங்கு வைரஸ்கள் உள்ளன.ஒரு வகை டெங்கு வைரஸால் ஏற்படும் டெங்கு காய்ச்சல் மறுமுறை வேறொரு வகை டெங்கு வைரஸால் ஏற்படலாம்.எனவே ஒரு மனிதனுக்கு வாழ்நாளில் ஒரு முறைக்கு மேல் டெங்குக்காய்ச்சல் ஏற்படலாம்.

**7) டெங்குக் காய்ச்சல் ஏற்பட்ட நோயாளர்களுக்கான அறிவுறுத்தல்கள் என்ன?**

1. நோயாளிக்கு ஓய்வு வழங்கவும்

• கஷ்டமான வேலைகளையோ அல்லது பாரமான பொருட்களை தூக்கவோ இடமளிக்க வேண்டாம்.

2. திரவ வகைகளை பருக கொடுக்கவும்.

• பால், பழச்சாறு தோடம்பழச்சாறு, ஜீவனி, தெம்பிலி சூப் போன்றவற்றை கொடுக்கலாம்.

• சிவப்பு மற்றும் கபில நிற பானவகைகளை தவிர்க்கவும். (சிவப்பு நிற குளிர்பானம், கோப்பி)

• வழக்கமான திண்ம உணவுகளை வழங்கலாம்.

3. நோயாளி சிறுநீர் கழிக்கும் தடவைகளின் எண்ணிக்கை பற்றி கவனத்திற் கொள்ளவும்.

• எண்ணிக்கை குறைவாக இருப்பின் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும்.

4. காய்ச்சல் காணப்படின்

• சாதாரண நீரினால் மேனியை நனைக்கவும்.

• பரசிட்டமோல் (paracitamol) உரிய அளவு 6 மணித்தியாலங்களுக்கு ஒருமுறை வழங்கவும்.

• விசேடமாக கடுமையான காய்ச்சலுக்கு வழங்கப்படும் மருந்து வகைகள் (diclofenec / ibu profen/mefenemic acid / aspirin) வழங்க வேண்டாம்.

5. காய்ச்சல் 2 நாட்களுக்கு மேலாக காணப்படின் 3 ஆவது தினத்தில் குருதிப்பரிசோதனையொன்று மேற்கொள்ளவும்.

**8) பின்வரும் அறிகுறிகள் காணப்படின் நோயாளியை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கவும்?**

• திரவ வகைகளை பருக முடியாதிருத்தல். (அடிக்கடி வாந்தியெடுத்தல்)

• உணவு, பான வகைகளை நிராகரித்தல்.



• கடுமையான தாகம்.

• நோயாளி சிறுநீர் கழிக்கும் தடவைகள் குறைவடைதல்.(6 மணித்தியாலங்களுக்கு மேலாக சிறுநீர் வெளிவராமை)

• கடுமையான வயிற்று வலி

• தூக்க நிலைமை

• நடத்தையில் மாற்றம் ஏற்படல்.

• சிவப்பு / கறுப்பு / கபில நிற வாந்தியெடுத்தல்.

• கறுப்பு நிற மலம் வெளியாதல்

• குருதி வெளியாதல் (முரசிலிருந்து குருதி வெளியாதல், சிறுநீர் சிவப்பு நிறத்தில் வெளியாதல்.

• தலைச்சுற்று

• கை கால்கள் குளிராதல்.

**9) டெங்கு வைரஸை பரப்பும் நுளம்புகள் எங்கு வாழ்கின்றன?**

ஈடிஸ், ஜிப்டிஸ் மற்றும் ஈடிஸ் அல்போபிக்டஸ் பல்வேறு விதமான கொல்கலன்களுக்குள் முட்டையிடுவதன் மூலம் தன் இனத்தை பரப்புகின்றன.பரவும் இடங்களாவன:

• இலகுவில் உக்காத பொருட்கள் (வாகன டயர், பொலித்தீன் பைகள்)

• உக்கும் பொருட்கள் (சிரட்டை, மூங்கில் கம்புகள்)

• மழை நீர் தேங்கி நிற்கக் கூடிய இடங்கள், தடைப்பட்டுள்ள கூரைப்பீலிகள், கொங்கிறீட் கூரைகள்.

• மறைக்கப்படாத நீரைச் சேகரித்து வைக்கும் பாத்திரங்கள் ,நீர்த்தொட்டிகள்.

•விசேடமான வீட்டு உபகரணங்கள், குளிர்சாதனம், குளிரூட்டி தட்டுக்கள்.

• மிருகங்கள் பருவதற்கு வைக்கப்பட்டுள்ள சிறிய பாத்திரங்கள்.

**10) இவ்வகையான நுளம்புகளிலிருந்து நம்மை பாதுகாத்து கொள்வது எப்படி?**

• மேற்கூறப்பட்ட நுளம்புகள் பரவக்கூடிய இடங்களை முற்றாக ஒழித்தல்.

• இவ்வகையான நுளம்புகள் பகல் நேரங்களில் கடிக்கும். சூரியன் உதித்து 2 மணி நேரத்தின் பின்பும் சூரியன் மறையக்கூடிய மாலை வேளைகளிலும் கடிக்கும்.எனவே முழுக்கை, முழுக்கால் ஆடைகளை அணிந்து உடலை நன்றாக மூடுவதன் மூலம் நுளம்புக் கடியை தவிர்க்கலாம்.

• நுளம்புவலை, நுளம்புக் கொயில், நுளம்பு விரட்டி மற்றும் மின்சாரத்தில் ஆவியாகக்கூடிய மேட்டுக்களை உபயோகிக்கலாம். (குழந்தைகள், முதியவர்கள் இருந்தால் கவனமாக இருக்க வேண்டும்.

• வீட்டில் டெங்கு நோயாளி இருந்தால் அவரையோ அல்லது வீட்டிலுள்ளவர்களையோ நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

**11) நுளம்புகள் பரவக் கூடிய இடங்கள் தொடர்பாக எவ்வாறு முறைப்பாடுகள் செய்யலாம்?**

முறைப்பாடுகள் செய்வதற்கு முன் இடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி ஓர் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். திருப்திகரமாக பதில் கிடைக்காவிடின் உங்கள் பிரதேசத்திலுள்ள பொது சுகாதார பரிசோதகர் அல்லது சுகாதார வைத்திய உத்தியோகத்தர் உள்ளிட்ட பிரதேசத்திலுள்ள பிரதேச சபை / நகர சபை என்பவற்றுக்கு அறிவித்தல் வேண்டும்.

Dr.A.Q.H.M.Asique

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்